மொழிபெயர்ப்பு

நெறிமுறைகள்

டாக்டர். ப. மணிமாறன், எம்.ஏ., எம்.ஏ., எம்.ஏ., பி.எச்.டி.,

முதுநிலை விரிவுரையாளர்

மொழியியல் உயர் ஆய்வு மையம்

அண்ணாமலை பல்கலைக்கழகம்

அண்ணாமலை பல்கலைக்கழகம்

அண்ணாமலைநகர்

மொழிபெயர்ப்பு

நெறிமுறைகள்

டாக்டர். ப. மணிமாறன், எம்.ஏ., எம்.ஏ., எம்.ஏ., பிஎச்.டி.,

முதுநிலை விரிவுரையாளர்

மொழியியல் உயர்ஆய்வு மையம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் முனைவர் **இரா. இளவரசு**

நூலக நூல்கள்

நூற்கொடை : பேராசிரியர் **இரா. வேலம்மாள்**

பேராசிரியர் இளவரசு நினைவு அறக்கட்டளை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

WITH COURAGE AND FAITH

அண்ணாமலைநகர்

பதிப்புக்குறிப்புகள்

பதிப்பகம்	:	அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பகம் பல்கலைக்கழக மாணியக்குழு நிதிநல்கை மற்றும் சிறப்பு நிதியுதவித் திட்டம் மொழியியல் உயர்ஆய்வு மையம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
பதிப்பு எண்	:	
பதிப்பாண்டு	:	2008
உரிமை	:	அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
நூல் கிடைக்குமிடம்	:	பதிவாளர் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலைநகர் தமிழ்நாடு - இந்தியா
விலை	:	ரூ. Rs 80
அச்சிட்டோர்	:	தீபிகா ஆப்செட் பிரிண்டர்ஸ் சிதம்பரம்

Dr. L.B. Venkatrangan
M.Sc., M.A., M.Phil., Ph.D.
Vice-Chancellor.

Phone : Office : 04144-238283
Res : 04144-238214
Fax : 04144-238925
04144-238080
E-mail : vc_lbv@hotmail.com
ANNAMALAI UNIVERSITY,
ANNAMALAINAGAR P.O. 608002
INDIA

WITH COURAGE AND FAITH

அணிந்துரை

வாழ்க்கையைப் பயனுடையதாக்கிச் செழுமைப்படுத்தும் அறிவுத் துறைகள் நாள்தோறும் பரவலாக வளர்ந்து வருகின்றன. மனித இனத்தின் அறிவுவளர்ச்சியும், உலக அமைதியும் கருத்து பரிமாற்றத்தின் வழியாகத்தான் நடைபெறுகின்றன. புதிய சிந்தனைகள் பரந்து விரிந்து அனைத்து மொழிகளிலும் துறைகளிலும் நிறைந்துக் காணப்படுகின்றன. அறிவார்ந்த இலக்கியங்களையும், பிறநாட்டு வளர்ச்சிகளையும் நமதாக்கிக் கொள்வது காலத்தின் கட்டாயமாகிறது. இத்தகைய கருத்துப் பரிமாற்றத்திற்குத் துணை நின்று பெயர்க்கப்படும் மொழிக்கு வளரும் ஆக்கமும் தருவது மொழிபெயர்ப்பு என்றால் மிகையாகாது.

தமிழ்மொழியின் மரபிலக்கணத்தைப் படைத்தருளிய தொல்காப்பியர் தனது செய்யுளியலில் முப்பது பாகுபாடுகளைத் தமிழிலக்கிய வகைகளாக குறிப்பிடுகின்றார். அந்த வகையில், இலக்கியங்களின் அடிப்படை வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டால் தொல்காப்பிய நூற்பா 'தொகுத்தல், விரித்தல், தொகைவிரி மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தலொடு அவை மரபினவே' எனச்சுட்டுகிறது. இதில், முதல்நூல் விரிவாக பரந்துகிடக்கும் பொருள்களைத் தொகுத்து வழங்குதலும், இரண்டாம் நூலில் வேண்டுமிடங் களில் தொகுத்தும் உரிய இடங்களில் விரித்துரைத்து வழங்குதலும் மூன்றாம் நூலில் மொழிபெயர்த்து அதர்ப்படயாத்தல் எனவும், நான்காம் வகை நூலில் பிறமொழி நூல்களைத் தமிழில் வழங்குதலுமாகிய செயல்கள் மற்றும் பெயர்க்கப்படும் மொழியின் இயல்புக்கேற்ப அதர்ப்பட, நெறிப்பட, ஒழுங்குபட மொழியாக்கம் அமைய வேண்டும் எனத் தொல்காப்பியர் மொழிபெயர்ப்பின் தன்மையை வலியுறுத்துகின்றார். எனவே, வளர்ந்து வரும் அறிவியல் உலகில், இந்நாளில் இதுபோன்ற மொழிபெயர்ப்பியல் பற்றிய நூல்கள் பரவலாகப் பெரிதும் தேவைப்படுகின்றன.

முனைவர் . ப. மணிமாறன் எழுதிய மொழிபெயர்ப்பு நெறிமுறைகள் எனும் நூலை நன்கு படித்து மகிழ்ந்தேன். மொழிபெயர்ப்பு பற்றிய நுட்பங்கள், அறிவியல் பார்வைகள், அவை எவ்வாறு பின்பற்றப்படுகின்றன என்பது பற்றிய செயல்முறைகள் ஆகியவை இந்நூலில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பு பற்றிய செய்திகளை புதியதாக மொழிபெயர்க்க முனையும் மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் படித்து மகிழும்படியாக, ஆற்றொழுக்காக அழகிய தமிழில் எழுதப்பட்டிருப்பது போற்றுதற்குரியது. மொழி இலக்கியம் மற்றும் பயனாக்க மொழியியல், மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளில் பயிலும் மாணவர்களுக்கு இந்நூல் மேலும் புதியதோர் அணியாக விளங்குகிறது.

மேனாட்டு அறிஞர்கள் பெருமளவில் மொழிபெயர்ப்பு பற்றிய நூல்கள் நிரம்ப வெளியிட்டு மொழியை வளர்த்து வருகின்றனர். இந்நிலையில், தமிழில் மொழிபெயர்ப்பு பற்றிய நூல் வெளிவருவது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

ஒன்பது இயல்களைக் கொண்ட இந்நூல் மொழிபெயர்பின் வரலாறு, வகைகள், கொள்கைகளும் கோட்பாடுகளும், தகுதிகள், இலக்கிய மொழிபெயர்ப்பு, மொழியின் சிறப்பியல்புகள், அறிவியல் தொழில் நுட்ப நூல் மொழிபெயர்ப்பு, கணினி மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும் ஆகிய பல்வேறு நிலைகளில் நின்று லையாகவும் அறிவியலாகவும் ஆராய்ந்த செய்திகளை தக்க சான்றுகளுடன் வழங்கியுள்ளது சிறப்பக்குரியது. மொழிபெயர்ப்பியலை மாணவர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற கருத்தோடு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. மொழிபெயர்ப்பில் நாட்டம் கொண்ட அனைவர்க்கும் பயன்படும் முறையிலும் இந்நூல் திகழுமாறு பொது நிலையில் எழுதிய ஆசிரியர் திறம் பாராட்டுக்குரியது. கடமை உணர்வும் கடின உழைப்பும் கொண்ட நூலாசிரியர் முனைவர் ப. மணிமாறன் மேலும் மேலும் பலநூல்களை ஆக்கித் தமிழ் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் துணைபுரிய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

எல்.பி.வெங்கட்ரங்கன்

என்னுரை

'மொழி' மனித இனத்தின் உணர்வுகளோடு பின்னிப் பிணைந்து இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுடைய உணர்வுகளோடும் சிந்தனைகளோடும். மொழிபெயர்ப்பு அன்றாடம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. மொழிபெயர்ப்பு காலத்தால் முந்தியதாக இருந்தாலும்கூட அறிவுலகம் மொழிபெயர்ப்பின் தேவையை உணரும் காலம் இது. கருத்துகள் அனைத்தும் முத்துச் சிதறலாக உதிர்வதற்கு மொழிபெயர்ப்பு அவசியமாகிறது. பல்வேறு நாட்டினரின் மொழிக் கூறுகளையும், பண்பாட்டுக் கலாச்சாரக் கூறுகளையும் பற்றிய பரந்துபட்ட அறிவு இன்றைக்குத் தேவை என்ற காலம் ஆகிவிட்டது. இதில் மொழிபெயர்ப்பு இனம், மொழி ஆகியவற்றைக் கடந்து பாலமாக இருந்து செயல்புரிந்து வருகின்றது.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்"

என்று பாடினார் மகாகவி பாரதியார். மொழிபெயர்ப்பை கலையாகவும், அறிவியலாகவும் கருதி பல்வேறு இலக்கண நூல்கள், இலக்கிய நூல்கள், அறிவியல் துறை சார்ந்த நூல்கள், சட்ட நூல்கள், நிர்வாகத்துறை சார்ந்த நூல்கள் ஆகியன மொழிபெயர்க்க வேண்டிய கட்டாயச் சூழலில் நாம் இருக்கின்றோம் என்றால் மிகையாகாது. வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பங்களை வளரும் நாடுகள் அனைத்தும், தனது ஆய்வறிக்கைகளை ஆங்கிலத்திலும், பிறமொழிகளிலும் தொகுத்தளித்துக் கொண்டுள்ளன. இவ்வாறு, நாளும் வளர்ந்து வரும் அறிவுக் குவியல்களை இந்திய மக்கள் யாவரும் அறிந்து வளமடைய வேண்டுமென்றால் அக்கருத்துக்கள் அவரவர்களின் தாய் மொழியில் மக்களைச் சென்று சேரவேண்டும். அதற்கு மொழிபெயர்ப்புப் பணி இன்றியமையாததாகிறது. அப்பொழுதுதான், பாரதி கண்ட கனவும் நனவாகும் என்பதில் எவ்வித மாறுபட்டக் கருத்தும் இல்லை என நம்புகிறேன்.

இந்நூல் மொழிபெயர்ப்புப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்பவர்களுக்குக் கையேடு போலவும் மொழிபெயர்ப்பைப்

பற்றிய அறிவியல் அறிவு மற்றும் செயல்பாடுகள் பற்றி அறிந்து கொள்வதற்கு உறுதுணையாக அமையும் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இதழ்கள், நாளேடுகள் ஆகியவற்றில் வரும் உள் நாட்டு வெளிநாட்டு மொழிபெயர்ப்புச் செய்திகளைப் பயன்பாட்டு மொழியியல் நோக்கில் ஆய்வு மேற்கொண்டு எனது கன்னி முயற்சியால் முதல் நூல் வெளியீடு செய்தேன். அத்தோடு மட்டும் அல்லாமல் மொழி, இலக்கியம், இலக்கணம், மொழிபெயர்ப்பு ஆகிய பாட வரைவுகளுடன் மாணவர்களிடையே விரிவுரை செய்யும் போது ஏற்பட்ட அனுபவ அறிவோடு கூடியதுதான் இந்நூல்.

"மொழிபெயர்ப்பு நெறிமுறைகள்" எனும் இந்நூலைப் படைக்க வேண்டும் என்று எண்ணுவதற்கு முன்பாக மொழிபெயர்ப்பாளர்களுக்கென ஒரு கையேடு படைக்க வேண்டுமென எண்ணினேன். ஆனால், அதற்கு இன்னமும் மொழிபெயர்ப்பில் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மொழிபெயர்ப்பியலை அறிவியல் சிந்தனையோடு அணுகி ஆய்வுப்பணிகளை மேற்கொள்ள உதவிய துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பிலும் பண்பிலும், செயல்வேகத்திலும் தலைமை சான்ற எங்கள் பேராசியர், அண்ணாமலைப் பல்கலைக்கழக துணைவேந்தர், பல்கலைக்கழக மாணியக்குழு நிதிநல்கை மற்றும் சிறப்பு நிதியுதவித்திட்டத் தலைவர், டாக்டர், எல்.பி.வெங்கட்ரங்கன் அவர்களுக்கும் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழக பதிவாளர், மனிதருள் மாணிக்கம், டாக்டர். எம்.ரத்தினசபாபதி அவர்களுக்கும் வணக்கத்தோடு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

பல்கலைக்கழக மாணியக்குழு நிதிநல்கை மற்றும் சிறப்பு நிதியுதவித் திட்டத்தின் உதவியுடன் இந்நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்புத்துறை மூலமாக வெளியீடு செய்யப்படுகிறது. இதற்கு அனுமதி வழங்கிய துணை வேந்தர் அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றியினை நவில்கிறேன்.

மேலும், இந்நூல் அணிசேர, அணிந்துறை வழங்கியமைக்கு ்
நன்றி பாராட்டுகிறேன்.

எனது எல்லா முயற்சிகளிலும் கரம் கொடுக்கும் அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயர்ஆய்வு மையத்தின் இயக்குநர், பல்கலைக்கழக மாணியக்குழு நிதி நல்கை மற்றும் சிறப்பு நிதியுதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர், பேராசிரியர். முனைவர். இராமகிருஷ்ண டி.ஷெட்டி மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர், பேராசியர். என். இராஜசேகரன் நாயர், அவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றியினை உரித்தாக்குகிறேன்.

இந்நூலை எழுதி முடித்து சிறக்கும் வகையில் வெளியிட உதவிபுரிந்த எனது துணைவியார் திருமதி.ம.தனலெக்குமி, பேராசியர். ஆ.கோ.நடராஜன், மொழியியல்துறை, நூலகர் திரு.ஆறு.வீரப்பன், மொழியியல் துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியோர்க்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது கல்விப் பணியில், மொழியியலை அறிமுகப்படுத்தி ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த முனைவர். பொன். கோதண்டராமன் (பொற்கோ), முன்னை துணைவேந்தர் சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, மற்றும் முனைவர். க. இராமசாமி, பேராசிரியர் & இணை இயக்குநர், தமிழ்ச்செம்மொழி மைய இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் மையம் மைசூர், அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

எனது வளர்ச்சிப்பணிகளில் கருத்துள்ளம் கொண்ட எமது பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அலுவலர். திரு. எஸ். செல்வம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அவர்களுக்கு எனது நன்றியினை உரித்தாக்குகிறேன்.

முனைவர். ப. மணிமாறன்

பொருளடக்கம்

1. மொழிபெயர்ப்பு வரலாறு

2. மொழிபெயர்ப்பு வகைகள்

3. மொழிபெயர்ப்புக் கொள்கைகளும் கோட்பாடுகளும்

4. மொழிபெயர்க்கத் தகுதி

5. இலக்கிய மொழிபெயர்ப்பு

6. மொழியின் சிறப்பியல்புகள்

7. அறிவியல், தொழில்நுட்ப நூல் மொழிபெயர்ப்பு

8. கணினி மொழிபெயர்ப்பு

9. மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும்

புதிய வழக்குச் சொற்கள்

மொழிபெயர்க்கப்பட்ட இலக்கிய நூல்கள் - பட்டியல்

துணை நின்ற நூல்கள்

இயல் - 1
மொழிபெயர்ப்பு வரலாறு

1. மொழிபெயர்ப்பு வரலாறு

1. மொழிபெயர்ப்பு வரலாறு

'மொழிபெயர்ப்ப்பு வரலாறு' என்பது உலகில் இன்று நேற்று தோன்றியதில்லை. இக்கலை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றிவிட்டது. தமிழ் மரபிலக்கண நூலான 'தொல்காப்பியம்' இதற்கு ஒரு சான்று எனலாம்.

"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலொருஅனை மரபினவே"

(பொருள் மரபியல்)

என தொல்காப்பியர் கூறுகிறார். மேலும், இளம்பூரணர் 'வடமொழி' என்றும் பேராசிரியர் 'பிறபாடை' என்றும் கூறுவதனால், மொழிபெயர்ப்புப் பணி முதலில் வட மொழியிலிருந்தும், பிற்காலத்தில் வட மொழியிலிருந்து மட்டுமில்லாமல் வேறுபல மொழிகளிலிருந்தும் நடைபெற்று வந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது. இதிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்புப் பணி என்பது இந்திய மொழிகளில் காலத்தால் முற்பட்டது என்பதை அறிய முடிகிறது.

கி.பி. முதல் நூற்றாண்டுகளின் தொடக்க காலத்திலேயே தமிழில் பிறமொழி கலப்பும், மொழிபெயர்ப்பும் இருந்து வந்துள்ளமையைத் தொல்காப்பியத்தின் மூலம் தெள்ளத் தெளிவாக அறிய முடிகிறது. இந்நிலையில் தொல்காப்பியர் காலத்தில் சொற்கள் வழங்கும் முறை பற்றி கூறுகையில், இயற்சொல், திரிசொல் என்ற இரண்டோடு மட்டுமல்லாமல் திசைச்சொல், வடசொல், என்ற வேறு இருவகைகளும் இருந்திருக்கின்றன என்று புலனாகிறது. இன்றைய நிலையில் மொழிவளர்ச்சிக்குத் திசைச் சொற்கள்தான் மிகப்பெரும் காரணிகளாக இருக்கின்றன. இது குறித்து மொழிபெயர்ப்பாளர்கள் தனிக்கவனம் செலுத்தினால் மொழிபெயர்ப்புப் பணி மேலும் சிறப்பதற்கு உறுதுணையாக அமையும்.

1.1 மொழிபெயர்ப்பின் வரலாறும் சான்றுகளும்

கி.மு. 250-ல் அன்டோனிகஸ் என்பவர் முதன்முதலில் கிரேக்க மொழியிலிருந்து இலத்தீன் மொழிக்கு ரோமருடைய 'ஒடிசியை' மொழிபெயர்த்தார். ரோமப் பேரரசுத் தோன்றி வளர ஆரம்பித்த இக்காலக்கட்டத்தில் மிக அதிகமான இலக்கிய நூல்கள் இலத்தீன் மொழியிலிருந்து கிரேக்க மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டன. 8-ஆவது, 9-வது நூற்றாண்டு காலத்தில் கிரேக்க

இலக்கிய நூல்கள் அரேபிய மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டன. அப்போதைய காலத்தில் தலைசிறந்து விளங்கிய கிரேக்க அறிஞர்களான அரிஸ்டாட்டில், பிளாட்டோ, கேலன், ரிப்போகிரட்டஸ் ஆகியோரது படைப்புகள் அனைத்தும் மொழிமாற்றம் செய்யப்பட்டன.

1.1.1 12 ஆம் நூற்றாண்டு

பனிரெண்டாம் நூற்றாண்டு மொழிபெயர்ப்பின் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்த காலமாகும். ஏனெனில், இந்நூற்றாண்டில் 'டொலடோ' என்னுமிடத்தில் 'ஜெரோட் ஆப் கிராமனா' என்பவர் மொழிபெயர்ப்புப் பணியில் மிகத் தீவிரமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தார். குறிப்பாக, அவரது மொழிபெயர்ப்புக்கள் அனைத்தும் அறிவியல் சார்ந்த படைப்புக்களாக இருந்தன. அவர் கிரேக்க, அரேபிய மொழிகளிலிருந்து இலத்தீன் மொழிக்கு மொழிமாற்றம் செய்து வந்தார்.

1.1.2 16 ஆம் நூற்றாண்டு

மொழிபெயர்ப்புப் பற்றியக் கொள்கைகளும், கருத்து விளக்கங்களும் கி.பி.16 ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில்தான் வரத்தொடங்கியது. ரோமருடைய படைப்புக்களை மொழிபெயர்த்த 'ஜார்ஜ சாப் மேன்' (1559-1634) என்பவர் டொலாட்னுடைய (Dolet) கருத்துக்களையொட்டி மொழிபெயர்ப்புத் தொடர்பான விளக்கங்களைக் கூறினார். அதாவது, 'மொழிபெயர்ப்பாளர் மூலமொழிக் கருத்தினைத் தன் கவனத்தில் கொள்ள வேண்டும்'. 'சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பதைத் தவிர்க்க வேண்டும்'. 'பெறும் மொழியைப் படிக்கும்பொழுது மூலமொழியினது உணர்ச்சியினைப் பெற்றிருக்க வேண்டும்'. 'நெகிழ்வு மொழிபெயர்ப்பைத் (Over loose translation) தவிர்க்க வேண்டும்' என்பன போன்றவை 16 ஆம் நூற்றாண்டின் கருத்துக்களாக விளங்கின.

1.1.3 17 ஆம் நூற்றாண்டு

17 ஆம் நூற்றாண்டு காலத்தில் மொழிபெயர்ப்பில் பல புதிய பரிணாம மாற்றங்களைப் பிரெஞ்சு நாட்டினர் உருவாக்கினர். பல பிரெஞ்சு மொழிபடைப்புகளைப் பிரெஞ்சு மொழி அறிஞர்கள் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கத் தொடங்கினர். இவர்கள் காலத்தில் மொழிபெயர்ப்பு என்பது 'போலச் செய்தல் திறன்' (Imitative skill) என்று கருதினார்கள்.

‘சர் ஜான்டென் ராம்’ (1615-1669) என்பவர் மொழிபெயர்ப்பு ‘ஒரு கலை’ (Translation is an Art) எனவும், அதே சமயத்தில் அது ‘விறுவிறுப்பு’ (Spirit) கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்று மொழிபெயர்ப்பிற்கு விளக்கம் கொடுத்தார். அவரை தொடர்ந்து ‘ஜான் ட்ரைடன்’ (1631-1700) என்பவர் மொழிபெயர்ப்பு தொடர்பாக Ovid's Epistles என்ற நூலிற்கு (1680) எழுதிய முகவுரையில் மொழிபெயர்ப்பு பற்றி பின்வரும் விளக்கங்களைக் கூறுகிறார்.

1. சொல்லுக்குச்சொல் அல்லது தொடருக்குத்தொடர் ஒரு மொழியிலிருந்து பிறிதொரு மொழிக்கு மாற்றியமைப்பது (Metaphrase-literal) (அல்லது)

2. பொருளுக்குப் பொருள் அப்படியே மாற்றியமைப்பது (Paraphrase-sense for sense) (அல்லது)

3. மொழிபெயர்ப்பாளர் மூலமொழியில் எதைப் படித்தாரோ அதை அப்படியே பெறும் மொழியில் அமைப்பது. அதாவது போலச் செய்தல் (Imitative) என்ற தன்மையைக் கொண்டதாக மொழிபெயர்ப்பு விளங்க வேண்டும்.

இம்மூன்று கொள்கைகளில் இரண்டாவது கொள்கையினை ஜான் ட்ரைடன் வெகுவாக ஆதரித்தார். இந்நிலையில் மொழிபெயர்ப்புத் தொடர்பாக ஜான் ட்ரைடனின் கருத்துக்களை அலெக்ஸாண்டர் போப் (1688-1744) கருத்துக்களோடு மிகவும் நெருக்கமான தொடர்புள்ள கருத்தாக மொழிபெயர்ப்பாளர்கள் கருதினார்கள்.

1.1.4 18 ஆம் நூற்றாண்டு

18 ஆம் நூற்றாண்டு காலத்தில் அலெக்ஸாண்டர் / பிரேஸர்டெய்ட்லர் (1790) என்பவர் தான் எழுதிய மொழிபெயர்ப்புக் கொள்கைகள் (The Principles of Translation) என்ற நூலில் மூன்று வகையான அடிப்படைக் கொள்கைகளைப் பற்றி விவரிக்கின்றார்.

1. மொழிபெயர்ப்பு என்பது மூல மொழியிலுள்ள கருத்துக்களை ஒரு வரைபடம் போன்று விளக்க வேண்டும்.

2. மொழியமைப்பு, மொழிநடை ஆகியவை மூலமொழியில் (Source text) அமைந்துள்ளது போன்று பெறும் மொழியிலும் (Target text) அமைய வேண்டும்.

3. மொழிபெயர்ப்பு என்பது மூலமொழியிலுள்ள எல்லா வகையான எளிமைகளையும் பெறும் மொழியில் கொண்டிருக்க வேண்டும் என்பனவாகும்.

1.1.5 19 ஆம் நூற்றாண்டு

19 ஆம் நூற்றாண்டில், மொழிபெயர்ப்பு தொடர்பான பல விளக்கங்கள் கூறப்பட்டன. இருந்தாலும், மொழிபெயர்ப்புக்கான விளக்கங்களை ஆராய்ந்து நோக்குகையில் ஏற்கனவே கூறப்பட்டு வந்த மொழிபெயர்ப்புக் கொள்கைகளைப் பின்பற்றியே பல விளக்கங்கள் அமைந்திருந்தன என்பது புலனாகிறது. 1809 ஆம் ஆண்டில் ஜெர்மன் மொழி இலக்கியங்கள் பல ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டன. இக்காலத்தில் மொழிபெயர்ப்பில் மிகுந்த ஈடுபாடு கொண்ட அறிஞர்கள் பலர். அவர்களுள், நியூமேன் (Newman), (Carlyle), வில்லியம் மோரிஸ் (William Moris) ஆகியோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். நியூமேன் (1861) கருத்துப்படி (Newman), ‘ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலமொழியிலுள்ள சிறப்பு அம்சங்களை எந்த அளவிற்குச் சொல்ல முடியுமோ அந்த அளவிற்குப் பெறும் மொழியில் சொல்ல வேண்டும்’ என்று கூறுகிறார். இந்நிலையில், மொழிபெயர்ப்பு என்றால் என்ன? அது எப்படி அமைய வேண்டும்? ஒரு மொழிபெயர்ப்பாளன் எவ்வாறு மொழிபெயர்ப்பைச் செய்ய வேண்டும்? என்பதை வலியுறுத்துவது போல் விளக்கங்கள் உருவாக்கப்பட்டன. இது மொழிபெயர்ப்பாளனின் சிந்தனைக்கு கருத்தரும்புகளாக அமைவதுபோல் விளங்கியது எனலாம்.

1. மூலமொழியைப் படிக்கும்போது ந்த மாதிரியான விளைவினை வாசகர் உணர்கின்றாரோ அதேபோன்ற உணர்வை மொழிபெயர்ப்பைப் படிக்கும்போதும் வாசகர் உணரவேண்டும்.

2. மொழிபெயர்ப்பாளன் தன்னுடைய திறமைக்கும் நடைக்கும் குறைந்த அளவே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அதே சமயம் மூலமொழி ஆசிரியரின் திறமைக்கும் நடைக்கும் அதிக அளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது போன்ற கருத்துக்கள் உருவாகியன.

1.1.6 20 ஆம் நூற்றாண்டு

இந்நூற்றாண்டில்தான் மொழிபெயர்ப்புக்கென ஒரு தனி இடம் அல்லது நிலையான இடம் கிடைத்தது எனலாம். இருபதாம் நூற்றாண்டினை மொழிபெயர்ப்பின் பொற்காலம் என்று அழைக்குமளவிற்கு மொழிபெயர்ப்புப் பணிகள் ஏராளமான அறிஞர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இந்நூற்றாண்டில் இவ்வகையான வளர்ச்சிக்கு வித்திட்டவர் ‘டெய்லரின்’

(Taylorian) என்பவர் ஆவார். இவர் 1931 ஆம் ஆண்டில் 'மொழிபெயர்ப்பியல்' என்ற தலைப்பின் கீழ் மிகச்சிறந்த சொற்பொழிவினை நிகழ்த்தினார். அச்சொற்பொழிவு மொழிபெயர்ப்புப் பற்றிய செறிவான கொள்கை விளக்கக் கருத்துக்களும், நடைமுறைச் சிக்கல்களும், தீர்வுகளும், பற்றியதாக இருந்தது. அதன் பின்னரே உலகின் பல பகுதிகளிலும் இத்துறை சிறப்பான இடத்தைப் பெற முடிந்தது. மொழிபெயர்ப்பின் மூலமாக மொழிக் கொள்கைகள், கோட்பாடுகள், தொடர்பியல் தொடர்பான கொள்கை வளர்ச்சி (The development of Communication theory), அமைப்பு மொழியியல் வளர்ச்சி (The development of Structural linguistics), இயந்திர மொழிபெயர்ப்பியல் வளர்ச்சி (The growth of machine Translation) ஆகியன வளரத் தொடங்கின.

1965 ஆம் ஆண்டில் 'கேட்போர்டு' (Catford) என்ற மொழியியலார் 'மொழியியல் சார்ந்த மொழிபெயர்ப்புக் கொள்கைகளை' (A linguistic theory of Translation) வரையறுத்தார். இவ்விளக்கம் ஹாலிடேயின் (Hallidayan) மொழியியல் அமைப்பு கொள்கையோடு அடியொட்டியதாக அமைக்கப்பட்டது. மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலுள்ளவற்றை மொழிமாற்றம் செய்வது (Transference) அல்லது பதிலீடு (Substitute) செய்வது எனவும், பொருள் மாற்றம் (Transfer of the message) மற்றும் வடிவமாற்றம் (Transplantation) செய்வதுதான் மொழிபெயர்ப்பு (Translation) என்று கூறினார். மொழியில், பண்பாட்டு மொழியியல் கூறுகளை மொழிபெயர்ப்பு செய்வது இயலாது (Untranslatability) என்ற விளக்கமும் தந்து மொழி பெயர்ப்பியலை மொழியியல் பண்புகளோடு ஒப்பிட்டுக் காட்டுவதாகவும் அமைத்துக் காட்டினார்.

'யுஜின் நெய்டா' (1964) என்பவர் 'Toward a Science of Translating' என்ற நூலில் மூன்று படிநிலைகளைக் கொண்டு மொழிபெயர்ப்புக் கொள்கையினை விளக்குகிறார். அவையாவன 1. பகுப்பாய்வு (Analysis) 2. மாற்றுதல் (Transfer) 3. செம்மையாக்கம் அல்லது மீட்டுருவாக்கம் (Restructure) என்பனவாகும். இவ்வரைவு நிலைகளின் மூலம் மொழிபெயர்ப்பின் பணி என்ன என்பதை அறியலாம். 1981 ஆம் ஆண்டில் பீட்டர் நியூமார்க் (Peter Newmark) என்ற அறிஞர் மொழியியலில் மொழிபெயர்ப்பின் பங்கினை ஆற்றல்மிகு தொடர்புச் சாதனமாக எவ்வாறு பயன்படுகிறது என்பது பற்றியும். பயன்பாட்டு மொழியியலில அதன் பண்பு என்ன என்பது பற்றியும் பின்வருமாறு விளக்க முயலுகின்றார்.

1. எந்த ஒரு மொழிபெயர்ப்பும் மூலத்தின் கருத்தினை சிறிதளவும் மாற்றாமல் பெறுமொழி வாசகனுக்கு வடித்து தருவதாக அமைய வேண்டும். இதில் பொருள் (Objective), அல்லது மொழியியல் கருத்துக்களோடு உருவான பாட அமைப்பு ஆகிய இரண்டும் அடங்கும். மொழிபெயர்ப்பின் இப்பணியினைச் செய்தி தரும் பண்பு (Informative modes) எனக் குறிப்பிடுகின்றார்.

2. மூலத்தின் கருத்து மூலமொழி வாசகரது உள்ளத்தில் ஏற்படுத்திய உணர்வுகளை மொழிபெயர்ப்பும் தன் வாசகர் உள்ளத்தில் ஏற்படுத்த வேண்டும். அதற்கேற்றவாறு, கருத்துப் புலப்பாடுகளை (Expressions) மொழிபெ பெற்றிருத்தல் வேண்டும். இம்மொழிபெயர்ப்பில் எழுவாய் (Subjective) மற்றும் கருத்துப்புலப்பாட்டுக் குறிப்புப்பொருள் ஆகியன அடங்கும் எனக் கூறுகிறார். இவ்வகை மொழிபெயர்ப்புப் பணி உணர்வூட்டும் பண்புப்பணி (Expressive modes) என்றும் குறிப்பிடுகின்றார்.

3. ஒரு மொழிபெயர்ப்பு என்பது கருத்தைத் தருவதாகவும், உணர்வூட்டுவதாகவும் மட்டும் (Emotional) இருந்தால் போதாது. அது கேட்போரை அல்லது வாசகரைச் செயற்படுத்தத் தூண்டும் ஆற்றலையும் பெற்றிருக்க வேண்டும். (Reader-Centered Dynamic) என்று விளக்குகின்றார். இவ்விளக்கங்களிலிருந்து மொழிபெயர்ப்பில் பொருண்மையியலின் கொள்கைகளையும் (Semantic theory) கோட்பாடுகளையும் அடியொட்டி மொழித்தொடர்பின் (Language Communication) வரைவிலக்கணத்தை மேம்படுத்த மொழிபெயர்ப்பை ஒரு கருவியாகப் பயன்படுத்தலாம் என்பது புலனாகிறது. மேலும், இம்மொழிபெயர்ப்புப் பண்புகள் அனைத்தும் நெய்டாவின் மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளைச் சார்ந்தே செயல்படுகின்றன. இவ்வாறாக மொழிபெயர்ப்பு இன்று கலை மற்றும் அறிவியல் தொழில்நுட்பத் துறைகளிலும், பரிணாம வளர்ச்சியினை பெற்று மொழிபெயர்ப்பியல் (Department of Translation/ Translatology) என்ற ஒரு தனித்துறையாகவும் செயல்பட்டு வந்து கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

இயல் - 2

மொழிபெயர்ப்பு வகைகள்

2. மொழிபெயர்ப்பின் வகைகள்

மொழிபெயர்ப்பை வகைப்படுத்துவதில் மொழிபெயர்ப்பாளர்கள் இடையே பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. மொழிபெயர்ப்புப் பணியினை 'மொழிபெயர்ப்பு' என்று சொல்லுவதா? அல்லது 'மொழிமாற்றம்' என்று சொல்லுவதா? - இவ்வினாக்கள் ஆய்வுக்குரியனவாக உள்ளன. 'மொழிபெயர்ப்பு' - என்ற செயல்பாட்டினை, சிந்தனைக்கு எடுத்துக்கொண்டால் எடுத்துக்கொண்ட பொருளின் நுட்பத்தைத் தெளிவாக விளக்கிச் சொல்வதோடு மட்டுமின்றி, பெறும்மொழியில் செய்தியைச் சற்றுக் கூட்டியும், குறைத்தும், விரித்தும் அமைக்கலாம். ஆனால், 'மொழிமாற்றம்' என்பது மொழிபெயர்ப்பாளன் தான் எடுத்துக்கொண்ட ஒரு தொடரையோ, பகுதியையோ எடுத்து அதற்கு ஏற்ற சரியான நிகரன்களைப் பெறும்மொழியில் அமைத்துத் தருவதாகும். இந்நிலையில், மொழிபெயர்ப்பாளன் தான் எடுத்துக்கொண்ட மூல மொழியின் பொருள் நுட்பமும், நயமும் கெடாமல் பெறுமொழியாக மாற்றித் தருவது என்பது எவ்வளவு கடினமானப் பணி என்பதை மொழிபெயர்ப்பாளன் தெளிவாக அறிந்து கொண்டு மொழிபெயர்ப்பை, 'கலை' என்றும் 'அறிவியல்' என்றும் விவாதிக்கின்றனர். மேலும், 'மொழிபெயர்ப்பு' என்பதைவிட 'மொழியாக்கம்' என்று வழங்குவது சிறந்தது என்ற கருத்தும் நிலவுகிறது. இந்நிலையில் இக்கூற்றுக்கள் அனைத்தும் ஆய்வுக்குரியதாகின்றன. ஒரு மொழிபெயர்ப்பாளனோ அல்லது மொழியியலானோ முயன்று மொழிபெயர்ப்புப் பணியை வேறுபடுத்திக் காட்ட முயலவேண்டும்.

ஒரு மொழிபெயர்ப்பாளன் மொழி மாற்றம் செய்கையில் தான் கையாளுகின்ற முறையைப் பொருத்து அம்மொழிபெயர்ப்பின் தன்மையினை உணரமுடியும். எடுத்துக்காட்டாகக் கீழ்காணும் அட்டவணையைக் காண்க.

அட்டவணை - 1

மொழிபெயர்ப்பு	மொழியாக்கம்
❖ பண்பாட்டுக் கூறுகள் உண்டு.	❖ பண்பாட்டுக் கூறுகள் உண்டு.
❖ பொருள் மயக்கம் உண்டு.	❖ பொருளும் தெளிவும் உண்டு.
❖ உரைக்கோவை உண்டு.	❖ உரைக்கோவை உண்டு.
❖ எழுவாய் (Subjectivity)	❖ செயப்படுபொருள் (Objectivity)
❖ செய்வினை வாக்கியமாக அமையும் (Active Voice)	❖ செயப்பாட்டு வாக்கியமாக அமையும் (Passive Voice)
❖ எழுதுபவரோடு இணைந்துபோகும் ஆற்றல் உடையது.	❖ எழுதுபவர் கருத்தோடு இணைவதில்லை.
❖ கற்பனைக்கு இடம் இல்லை.	❖ கற்பனைக்கு இடம் உண்டு.

அட்டவணை - 2

மொழிபெயர்ப்பு	மொழியாக்கம்
❖ மூலமொழியில் உள்ள பொருளை குறைக்காமலும் கூட்டாமலும் தரவேண்டும்.	❖ மூலமொழியிலுள்ள பொருளைக் கூட்டலாம்/ குறைக்கலாம்.
❖ ஆக்கத்திற்கு இடமில்லை.	❖ ஆக்கத்திற்கு இடம் உண்டு.
❖ அறிவியல்	❖ கலை
❖ மொழிபெயர்ப்பாளன் 'கருத்து' எல்லைக்கு உட்பட்டது.	❖ மொழிபெயர்ப்பாளன் 'கருத்து' எல்லைக்கு உட்படாதது.

மொழிபெயர்ப்பாளன் தான் மேற்கொள்ளும் முறையை அல்லது விதத்தைப் பொருத்து ஓரளவிற்கு மொழிபெயர்ப்பை வகைப்பாடு செய்யலாம். முற்றிலுமாக வகைப்பாடு செய்யவேண்டுமானால் தமிழில் மொழிபெயர்ப்புக் கொள்கைகளும். கோட்பாடுகளும் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். அதற்குப் பல்வேறு மொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்ப்புகள் நடைபெற வேண்டும். பொதுவாக,

மொழிபெயர்ப்பு என்பதை ஒரு மொழியில் சொல்லப்படும செய்திகளை மற்றொரு மொழிக்கு மாற்றியமைக்கும் அல்லது மற்றொரு மொழியில் எடுத்துச் சொல்லும் பாங்கை அல்லது அமைப்பினை (Patterns) மொழிபெயர்ப்பு எனக்கொள்ளலாம். இன்னும் சற்று ஆராய்ந்து பார்த்தால் ஒரு மொழியிலுள்ள கருத்துக்களை மற்றொரு மொழியில் மாற்றும் பொழுது மூலமொழியில் காணப்படும் பொருள், சுவை, தன்மை ஆகியனவற்றைச் சிறிதும் மாற்றாமல் பெயர்க்கப்படும் மொழியின் அமைப்பு மற்றும் தன்மைக்கு ஏற்றவாறு அமைக்கப்படும் ஒரு முறையே (Process) மொழிபெயர்ப்பு எனவும் கொள்ளலாம். இதில், மொழிபெயர்ப்பாளன் மொழியின் ஒவ்வொரு அலகு (Unit) நிலையிலும் கவனமாக நிகரன்களைக் (Equivalence) கண்டறிய முற்படவேண்டும். அலகுகள் உணர்த்தும் கருத்துக்களை மிகுந்த கவனத்தில் கொள்ள வேண்டும். மொழிபெயர்ப்பியல் (Translatalogy) என்பதை இன்றைக்குப் பயனாக்க மொழியியலின் (Applied Linguistics) ஒரு பிரிவாக மொழியியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

2.1 மொழிபெயர்ப்பின் வகைகள்

ரோமன் ஜேக்கப்ஸன் (1959) மொழிபெயர்ப்பின் வகைகளைப் பற்றி கீழ்க்கண்டவாறு வகைப்படுத்துகிறார். இவ்வகைப்பாடு மொழியியலின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டதாகும்.

2.1.1 ஒரு மொழிக்குள்ளே நிகழும் மொழிபெயர்ப்பு (Intralingual Translation):

ஒரு மொழியிலுள்ள சொற்களை அம்மொழிக்குள்ளேயே மாற்றியமைத்தோ அல்லது வேறு சொற்களை நிரப்பியோ செய்யப்படும் முறைக்கு ஒரு மொழிக்குள்ளே செய்யப்படும் மொழிபெயர்ப்பு எனப்பெயர் பெறும். இது பெரும்பாலும் கதை, கட்டுரை, கவிதை போன்றவற்றில் மறு சொற்களை இட்டு (Rewording) தொடர்களையோ, வாக்கியங்களையோ அமைத்துக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக 'மொழிபெயர்ப்புப் பாடம் எனக்குப் பிடிக்கும்' என்ற தொடரை வேறு வகையிலும் மாற்றியமைக்கலாம். 'எனக்கு மொழிபெயர்ப்புப்பாடம் பிடிக்கும்' அல்லது 'மொழிபெயர்ப்புப்பாடம் எனக்கு ஆர்வம்' என்றோ மாற்றியமைத்துக் கொள்ளலாம். இவ்வாறு மறு சொற்களை இட்டு மாற்றியமைத்துக் கொள்ளும் முறை ஒரு மொழிக்குள்ளேயே நிகழும் மொழிபெயர்ப்பு எனப்படும்.

2.1.2 இரு மொழிகளுக்கிடையே நிகழும் மொழிபெயர்ப்பு (Interlingual Translation):

ஒரு மொழியிலுள்ள கருத்துக்களை மற்றொரு மொழிக்கு மாற்றியமைக்கும் முறைக்கு இரு மொழிகளுக்கிடையே நிகழும் மொழிபெயர்ப்பு எனலாம். அதாவது, தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் நிகழும் மொழிபெயர்ப்புகளை இவ்வகைக்குள் அடக்கலாம். எடுத்துக்காட்டாக, இலக்கிய படைப்புகள் அனைத்தையும் சொல்லலாம்.

மேலும் ஆண்ட்ரோ லெபிவெரே (1975) என்பவர் மொழிபெயர்ப்பு வகைகளை கீழ்க்கண்டவாறு அமைக்கின்றார்.

2.1.2.1 ஒலிபெயர்ப்பாக்கம் (Transliteration):

மொழிபெயர்ப்போடு பெரிதும் தொடர்புடையது ஒலிபெயர்ப்பாக்கம் ஆகும். மூலமொழியில் பயன்படுத்திய ஒலிகளை அப்படியே பெறும்மொழியில் ஒலிபெயர்த்துத் தருவதே ஒலிபெயர்ப்பாக்கமாகும். இம்முறையில் ஒரு மொழியிலுள்ள ஒலிக்குறிப்புச் சொற்களுக்கு ஏற்றவாறு எல்லா மொழியிலும் சரியான சொற்கள் கிடைக்கும் என்று சொல்லமுடியாது. அந்தச் சூழ்நிலையில் அப்படியே ஒலிபெயர்ப்புச் செய்து பெறும்மொழியில் பயன்படுத்தப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, கணினியில் உள்ள 'Virus' என்ற சொல்லை அப்படியே தமிழில் ஒலிபெயர்த்து 'வைரஸ்' என்று அழைக்கிறார்கள். இச்சொல்லுக்குக் 'குறும்புக்கட்டளை' என்ற சொல்லாக்கம் இருக்கிறது. ஆனால், வழக்கத்தில் இல்லை. ஒலிபெயர்ப்பில் பொதுவாக பெறும்மொழியின் ஒலி மரபுகளைப் பெற்று செயல்புரிவது மரபாகும்.

ஒலிபெயர்ப்பாக்கத்தில் இரண்டு நிலைகள் காணப்படுகின்றன.

1. நேர் ஒலிபெயர்ப்பாக்கம் (Direct Transliteration)
2. மாறுபட்ட ஒலிபெயர்ப்பாக்கம் (Different Transliteration)

2.1.2.1.1 நேர் ஒலிபெயர்ப்பாக்கம் (Direct Transliteration)

பிறமொழிச் சொற்களை அவை குறிக்கும் ஒலி நிலையில் எவ்வித மாற்றமும் இன்றி அப்படியே எழுத்துப் பெயர்ப்புச் செய்வது நேர் ஒலிபெயர்ப்பாக்கமாகும்.

எடுத்துக்காட்டு,

ஆக்ஸிஜன்	-	Oxygen
எலெக்ட்ரான்	-	Electron
டெலிபிரிண்டர்	-	Telerpinter

2.1.2.1.2 மாறுபட்ட ஒலிபெயர்ப்பாக்கம் (Different transliteration)

பிறமொழி எழுத்துக்களைத் தமிழில் ஒலிபெயர்க்கும் பொழுது சமூகப் பயன்பாட்டினைக் கருத்தில் கொண்டு ஓர் ஒழுங்கு முறையைப் பின்பற்றாமல் மாறுபட்ட முறைகளில் சில எழுத்துக்கள் மாற்றப்பட்டு வேறு வேறு ஒலிபெயர்ப்பு வடிவங்களில் ஆக்கப்பெற்றுப் பயன்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

Electron	-	'எலக்ட்ரான்' / 'எலெக்ட்ரான்'
Hydrogen	-	'ஹைட்ரஜன்'/'ஹைட்ரசன்'
Protozoa	-	'புரோட்டோசோவா'/'புரட்டசோவா'
Shakespeare	-	'சேக்ஸ்பியர்'/'சேக்ஷ்பியர்'/'செகப்பிரியர்'
Hamlet	-	'ஹாம்லட்'/'ஹேம்லெட்'
Hotel	-	'ஓட்டல்'/'ஹோட்டல்'/'ஹோட்டேல்'

ஒலிபெயர்ப்பாக்கத்திற்கு என வரையறுக்கப்பட்ட கோட்பாடுகள் இன்னமும் வரையறுக்கப்பட்டவில்லை. இதன் காரணமாகத்தான் ஒரே ஒலிச்சொல் பல ஒலிச்சொற்களாக ஒலிபெயர்ப்பாக்கம் செய்யப்படுகின்ற நிலையைக் காணமுடிகின்றது.

2.1.2.2. எழுத்துப் பெயர்பாக்கம் (Graphological Translation)

பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கும்போது அம்மொழியின் சிறப்பு ஒலி[illegible]ந் தமிழில் எழுதுவது தமிழ் எழுத்துப் பெயர்ப்பாக்கம் ஆகும். மொழிபெயர்ப்பில் சரியான சொல் அகப்படாத நிலையில் அச்சொல்லை எழுத்துப் பெயர்ப்புச் செய்யலாம். எடுத்துக்காட்டாக 'மேஜை' எனும் சொல்லை 'மேசை' எனக் கொள்வதைக் குறிக்கலாம்.

2.1.3 சந்த மொழிபெயர்ப்பு (Metrical Translation)

கவிதையில் காணப்படும் அடி, சீர், தலை ஆகியவற்றை பெறும்மொழியிலும் அதே நிலையில் மாற்றியமைக்கும் முறையைச் சந்த மொழிபெயர்ப்பு எனக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, திருக்குறளை

ஒருவர் மொழிபெயர்க்கும்பொழுது அக்குறளில் வரும் சீர், அடிகளை அப்படியே மாற்றாமல் பெறும்மொழியில் தருவாரேயானால் அம்மொழிபெயர்ப்பு சந்த மொழிபெயர்ப்பாகும்.

2.1.4 எதுகை-மோனை மொழிபெயர்ப்பு (Rhymed Translation)

மூலமொழியில் உள்ள கவிதையின் எதுகை-மோனை அமைப்பிற்கு ஏற்றவாறு பெறும்மொழியிலும் உருவாக்கும் முறைக்கு எதுகை-மோனை மொழிபெயர்ப்பு எனப் பெயர்.

மொழிபெயர்ப்புப் பணியினை அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்ப்புகளை வகைப்படுத்தலாம். அவையாவன.

2.1.5 சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தல் (Literal Translation)

சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தல் என்பது மூலமொழியில் உள்ள சொற்களுக்கு இணையான சொற்களைப் பெறும்மொழியில் அமைத்துக் கொள்வதாகும். இதனை நேரிடை மொழிபெயர்ப்பு எனவும் கூறுவர். மூலத்தினின்று சிறிதும் மாற்றம் இல்லாமல் அதனை அவ்வாறே மொழிமாற்றம் செய்தல் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்த்தல் ஆகும். இத்தகைய மொழிபெயர்ப்பு சிறந்ததாகாது, ஏனெனில், மூலநூல் ஆசிரியர் உணர்த்த வந்த கருத்து தனித்தனிச் சொறிகளில் மட்டும் இருப்பதில்லை. அது தொடர் அல்லது வாக்கியத்தில் உயிரோட்டமாக அமைந்திருப்பதாகும். சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பதால் கருத்தோட்டம் சிதைவதோடு மூல ஆசிரியரின் வழியிலிருந்து மொழிபெயர்ப்பாளன் தடம் புரளவும் நேரிடும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. இக்கருத்தினை மனதில்கொண்டு மொழிபெயர்ப்பாளன் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பதைத் தவிர்த்தல் நலம் பயக்கும்.

2.1.6 விரிவான மொழிபெயர்ப்பு (Amplification)

விரிவான மொழிபெயர்ப்பு என்பது மூல மொழியிலுள்ள கருத்துக்களை மொழிபெயர்த்துச் சொல்வதோடு அவை தொடர்பான வேறு சில செய்திகளையும் சேர்த்து விரிவாகச் செய்யப்படுவதாகும். இவ்வகை மொழிபெயர்ப்பு நாளிதழ்களில் அதிகமாகக் காணப்படுகின்றது.

'A Philippine court on Friday connected Imelda Marcos of corruption and sentenced the former first lady to 9 to 12 years in prison for each of two courts'.

பிலிப்பைன்ஸின் முன்னாள் அதிபரது மனைவியான இமல்டா மார்க்கோசுக்கு லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்காக 18 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.......

மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டில் 'Philippine' என்ற சொல்லுக்கு இணையாக 'பிலிப்பைன்ஸின் முன்னாள் அதிபரது மனைவி' என்பது விரிவாக விளக்கி மொழிபெயர்ப்பு செய்யப்படுகிறது. இவ்வகை மொழிபெயர்ப்பு விரிவான மொழிபெயர்ப்பு ஆகும்.

2.1.7 சரியான மொழிபெயர்ப்பு (Faithful Translation or Accurate Translation)

சொற்களில் மட்டுமே ஆசிரியரின் கருத்து அமைந்து விடுவதில்லை என்ற கருத்தினை மனதிற்கொண்டு கருத்தும், பொருளும் சிதையாமல் மொழிபெயர்க்கப்பட வேண்டும். அதாவது மொழியின் அமைப்பு சமுதாயச் சூழல் மற்றும் பண்பாட்டிற்கு ஏற்பவும் மிகப்பொருத்தமாகக் கூடுதல் குறைவு ஏதுமின்றி செய்யப்படுகின்ற மொழிபெயர்ப்பிற்குச் சரியான மொழிபெயர்ப்பு என்று பெயர்.

2.1.8 சுருக்கமான மொழிபெயர்ப்பு (Paraphrase or abridgement)

மூலமொழியில் காணப்படும் செய்திகளைக் கருத்தில் கொண்டு அது எவ்வாறு மூலமொழியில் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவ்வாறே முழுவதும் சொல்லாமல் கருத்துக்களைப் புரிந்து கொள்ளும் வகையில் வாக்கியங்களைக் குறைத்துச் சுருக்கமாகச் கூறுவது சுருக்கமான மொழிபெயர்ப்பாகும்.

2.1.9 மரபுத் தொடர் மொழிபெயர்ப்பு (Idiomatic Translation)

மூலமொழியில் உள்ள மரபுச் சொற்களுக்கு இணையாக பெறும்மொழியில் உள்ள மரபுச் சொற்களே சில நேரங்களில் இணையாக அமைந்துவிடுவது உண்டு. ஒரு சமுதாயத்தில் பழக்கவழக்கத்தின் காரணமாக மரபுச் சொற்கள் பயன்பாட்டில் அமைந்துவிடுகிறது. இது அச்சமுதாயம் வழங்கும் மொழிக்கும் பொருந்தும்.

'Make lay while the sun shines' என்ற ஆங்கிலப் பழமொழி 'சூரியன் காயும்போதே வைக்கோல் செய்' என்று மொழிபெயர்ப்பது எளிது. ஆனால் 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்பதுதான் சரியான மொழிபெயர்ப்பாக அமைகிறது. ஆகவே, பழமொழி மரபுத் தொடர் ஆகியனவற்றை மொழிபெயர்க்கும்போது மொழிபெயர்ப்பாளன் மிகுந்த கவனத்துடன் மொழிபெயர்க்க முயலவேண்டும்.

2.1.10 வாக்கியத்தொய்வு மொழிபெயர்ப்பு **(Loose Translation)**

சொல்லமைப்பு முறைகளுக்கு ஏற்ப வாக்கியங்களை அமைக்காது. மொழிபெயர்ப்பாளன் தன் விருப்பம்போல மொழிபெயர்ப்பது இந்த வகையில் அடங்கும். கட்டற்று, எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் முறை மாறிச் சொற்கள் முரண்பாடாக (Change of the word order) இருப்பதாகும். மூலநூலில் உள்ள நீண்ட பெரிய வாக்கியங்களை மொழிபெயர்க்க நேரிடும்பொழுது இப்பிழை நேரும். ஆனால் (Complex Compound Sentences), ஆங்கில நாளிதழ்களில் உள்ள கலவை மற்றும் கூட்டு வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாக மொழிபெயர்ப்பில் பிரித்து எழுதுகின்றனர். அவ்வாறு பிரித்து எழுதும் தனி வாக்கியங்கள் நீளமாக இருக்கின்றன. அவை, ஒன்றிற்கு மேற்பட்டச் செய்திகளை கொண்டிருக்கின்றன. இது போலப் பல செய்திகளுடன் நீளமாக வரும் வாக்கியத்தைத் தொய்வு வாக்கிய மொழிபெயர்ப்பு (Loose Translation) என்று கூறலாம்.

எடுத்துக்காட்டு:-

Water level at Mettur reservoir this evening 245 feet with inflow 75800 cussecs showing an increase of two more feet since last evening out flow from reservoir for delta irrigation maintained 31351 cussecs.

1. மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று மாலை 245 அடியாக இருந்தது.
2. அணைக்கு வினாடிக்கு 75800 கன அடி தண்ணீர் வருகிறது.
3. நீர்மட்டம் நேற்று மாலையிலிருந்து 2 அடி உயர்ந்தது.
4. அணையிலிருந்து வினாடிக்கு 3 கன அடி தண்ணீர் பாசனத்திற்கு விடப்படுகிறது.

இவ்வெடுத்துக்காட்டில் ஆங்கிலத்திலுள்ள கூட்டுவாக்கியம் தமிழ் மொழிபெயர்ப்பில் நான்கு தனிவாக்கியங்களாகப் பிரிகின்றது.

தமிழ் மொழிபெயர்ப்பில் பிரித்து எழுதப்படும் தனிவாக்கியங்களை எளிதில் படித்தவுடன் புரிந்து கொள்ளமுடிகின்றது. மேனாட்டு அறிஞர்கள் படிப்பதற்கும் எழுதும் முறைக்கும் (Readable writing) சிறு வாக்கிய அமைப்புகளுக்கிடையே சில வேறுபாடுகள் இருப்பதாகக் கருதுகின்றனர்.

2.1.11 வரையறையற்ற மொழிபெயர்ப்பு (Free Translation)

இவ்வகை மொழிபெயர்ப்பு குறித்து அனைவராலும் பேசப்படுகிறது. எழுத்துக்கு எழுத்து, சொல்லுக்குச் சொல், வாக்கியத்திற்கு வாக்கியம், பத்திக்கு பத்தி என்றில்லாமல் கடினமான பகுதியை நன்கு விளக்குவதற்காக மொழிபெயர்ப்பாளர் சுதந்திரமாக மொழிபெயர்க்கின்றனர். இலக்கியம் போன்ற படைப்பிலக்கிய மொழிபெயர்ப்புக்களை இவ்வகையில் சேர்க்கலாம். இந்த வகை மொழிபெயர்ப்பினை வரையறையற்ற மொழிபெயர்ப்பு என்று கூறலாம். இம்மொழிபெயர்ப்பில் படிப்போர் தெளிவு பெறவேண்டி, படைப்பின் மூலக்கரு சிதையாவண்ணம் மொழிமாற்றம் செய்யவேண்டும். இம்மொழி பெயர்ப்பில் மொழிபெயர்ப்பாளனுக்கு மிகுந்த கவனம் தேவை.

2.1.12 மொழியாக்கம் (Transcreation)

கவிதை போன்ற இலக்கியப் படைப்புகள் மொழியாக்கம் முறை மூலமே மொழிபெயர்ப்புச் செய்யப்படுகின்றன. இது ஒரு வகையான கருத்துப்பெயர்ப்பாகும். எனவேதான் இதனை மொழிபெயர்ப்பு என்பதற்குப் பதிலாக 'மொழியாக்கம்' என்று குறிக்கிறோம்.

2.1.13 தழுவல் (Adaptation/Adoption)

தழுவல்களை மொழிபெயர்ப்பாகக் கொள்ள முடியாது. எனினும், முற்றிலுமாக மூலத்தினின்று மாறுபட்டு அமைவன தழுவல்களாகும். மூலநூலின் கருவினை மட்டும் அதனின்றும் பெற்றுக்கொண்டு ஏனைய நிகழ்வுகள், பாத்திரங்கள், நிகழ்ச்சி மாற்றங்கள் போன்ற அனைத்தினையும் தம் விருப்பம் போலப் படைத்துக் கொள்ளுதல் இந்த வகையினைச் சாரும்.

எடுத்துக்காட்டு:

ஷேக்ஸ்பியருடைய நாடகங்கள் பழையகால தழுவல் முறையிலேயே காட்சிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தமிழில் சலோசன செட்டியாரின் 'சரசாங்கி' தழுவல் முறையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது எனலாம்.

2.1.14 பொதுமக்கள் ஆர்வ மொழிபெயர்ப்பு (Popular Translation)

பொதுமக்கள் ஆர்வ மொழிபெயர்ப்பு என்பது செய்தி நாளிதழ்களுக்கு பொருத்தமுடையதாக அமையும். நேரத்தின் அருமை கருதி சாதாரணப் படிப்பறிவுடையோரும் தெளிவாகச் செய்தியைப் புரிந்துக்கொள்ள வேண்டி செய்திடையைச் சுருக்கியும், நீட்டித்தும், விரித்தும் செய்யப்படும் முறைக்கு பொதுமக்கள் ஆர்வ மொழிபெயர்ப்பு என்று பெயர். இதில் மூலச்செய்திக் கருவைத் தவிர உருவம், உத்தி, நடை எல்லாமே மொழி பெயர்ப்பாளனுடையதாகும்.

2.1.15 குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பு

குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பு மற்ற மொழிபெயர்ப்புகளைக் காட்டிலும் வேறுபட்டது. குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்பில் கருத்துத் தெளிவு. எளிமை, இனிமை, திண்மை போன்ற பண்புகள் அதிகமாக இடம்பெறும். ஏனெனில், குழந்தைகளுக்குச் சொல்லும் கருத்தில் தெளிவும், எளிமையும், ஆற்றலும் இருந்தால்தான் பயனுள்ள மொழிபெயர்ப்பாகும். அவ்வாறான மொழிபெயர்ப்புகளைக் குழந்தைகள் படிக்கும்போது அவர்களது தாய்மொழியில் படிக்கின்ற உணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். மொழிபெயர்ப்பில் இடம்பெறும் எடுத்துக்காட்டுகள் எளிதில் புரிந்துக்கொள்ளும் விதத்தில் அமையவேண்டும். இது போன்ற மொழிபெயர்ப்பில் கதைகள், கவிதைகள், சிறுகதைகள், குழந்தை பாட்டு போன்றவை அடங்கும்.

2.1.16 கருத்துப்பெயர்ப்பு (Concept Translation)

மூலமொழிச்சொல் குறிக்கும் பொருளோடு எவ்வித தொடர்பும் இல்லாமல் அவைக் குறிக்கும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்ப்பு செய்தல் கருத்து மொழிபெயர்ப்பு எனப்படும். எடுத்துக்காட்டாக,

Cinema	-	திரைப்படம்
Electron	-	மின்னணு
Telegram	-	தந்தி
Parasite	-	ஒட்டுண்ணி
Photo	-	புகைப்படம்

மேற்கண்ட சொற்கள் யாவும் எந்த ஒப்புமையும் கருதாது வசதி கருதி உருவாக்கிக் கொள்ளப்பட்டவையாகும்.

2.1.17 முழுமையான மொழிபெயர்ப்பு (Total Translation)

முழுமையான மொழிபெயர்ப்பு என்பது நூல் முழுவதையும் மொழிபெயர்ப்பதாக அமைய வேண்டும் என்பதில்லை. எடுத்துக்கொண்ட மூலம் எதுவாக இருந்தாலும் (வாக்கியம்/பத்தி/ பகுதிகள்/நூல்) அதனை முழுவதும் அதன் பெறும்மொழி நிகரன்களால் பதிலீடு (Substitute) செய்வதே முழுமையான மொழிபெயர்ப்பாகும். மூலத்தின் பொருளைக் கூட்டுவதோ, குறைப்பதோ முழுமையான மொழிபெயர்ப்பில் இடம் பெறலாகாது என்பதை மொழிபெயர்ப்பாளன் கருத்தில் கொண்டு மொழிபெயர்க்க வேண்டும்.

2.1.18 சூழல் சார்ந்த மொழிபெயர்ப்பு

ஒவ்வொரு மொழியும் ஒரு குறிப்பிட எண்ணிக்கையுள்ள மொழிக்குறியீடுகளைக் கொண்டு செயல்படுகின்றது. ஒரு மொழி ஓர் அனுபவத்தை வெளியிடக் கையாளும் மொழிக்குறியீடுகள் பிறிதொரு மொழி அதே அனுபவத்தை வெளியிடக் கையாளும் மொழிக்குறியீடுகளின்றும் வேறுபட்டவை. இக்காரணத்தால் சூழல்சார்ந்த மொழிபெயர்ப்புத் தேவைப்படுகிறது.

எடுத்துக்காட்டு:-

பச்சைப் பொய்
பச்சைப் பிள்ளை
பச்சைத் தண்ணீர்
பச்சை உடம்பு
பச்சை வயல்
பச்சையான பேச்சு
பச்சை மரம்
பச்சைப் புடவை

மேற்குறிப்பிட்டத் தமிழ்த் தொடர்கள் ஒவ்வொன்றிலும் 'பச்சை' என்ற சொல் வெவ்வேறு பொருளைக் குறிக்கிறது. ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் பொழுது இவற்றை

பச்சைப் பிள்ளை	-	Very young child
பச்சை வயல்	-	Fertile green field
பச்சை மரம்	-	Greenish tree
பச்சைத் தண்ணீர்	-	Cold water
பச்சையான பேச்சு	-	Vulgar words
பச்சைப் புடவை	-	Green saree

எனவே, மொழிபெயர்ப்பாளர்கள் எந்த சூழ்நிலையில் மூலமொழிச் சொல்லுக்கு பெறும்மொழி சொல்லைப் பதிலீடு செய்கிறார்கள் என்பதைத் தெளிவாக அறிந்து மொழிபெயர்ப்பது அவசியமாகிறது.

2.1.19 செவ்விலக்கிய மொழிபெயர்ப்பு (Classical Translation)

செவ்விலக்கிய மொழிபெயர்ப்பு, துறைசார்ந்த வல்லுநர் குழுவினரால் செய்யப்படுவதாகும். மூலமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட பகுதி துறைசார் பெறும் மொழிச் சொற்கள் விவாதத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. வல்லுநர் குழுவினரால் மொழிபெயர்ப்பில் பொருள் குற்றம் நிகழாவண்ணம் ஆங்கிலப் புலமையும் துறைசார் புலமையும் ஒருங்கே பெற்ற அறிஞர் மூலம் தனிக்கவனம் செலுத்தப்பட்டு சொற்கள் நிலைபேராக்கம் செய்யப்படுகின்றன. நிலை பேராக்கம் செய்யப்பட்ட நடையை ஒருவர் செம்மைப்படுத்த வேண்டும். மொழிபெயர்க்கப்பட்ட கலைச்சொற்கள் அனைத்தும் சரியானதுதானா என்று தகுந்த அக்கறைக் காட்டப்பட்டு தேர்ந்த சொற்கள் மொழியில் நிலைபெறுகின்றது. இறுதியில், ஒருவர் மட்டும் பதிப்புப் பணியில் நாட்டம் கொண்டு சிறந்த மொழிபெயர்ப்பை நிர்ணயம் செய்கின்றார். இம்முறையைச் செவ்விலக்கிய மொழிபெயர்ப்பு என்று கூறலாம்.

2.1.20 திரைப்பட வசனங்கள் மொழிபெயர்ப்பு (Dubbing)

திரைப்பட வசன மொழிபெயர்ப்பு இன்றைக்கு சிறப்பான நிலையினை அடைந்திருக்கிறது எனலாம். தமிழ், இந்தி, திராவிட மொழிகள் மற்றும் ஆங்கிலம் ஆகிய அனைத்திலும் வரும் திரைப்படங்களில் உள்ள வசனங்களை பேச்சு மொழிக்கேற்றவாறும், வாய், அசைவுக்கேற்றவாறும். மொழிபெயர்க்கப் படுகின்றன. இம்முறைக்குத் திரைப்பட வசன மொழிபெயர்ப்பு (Dubbing) என்று பெயர். இம்மொழிபெயர்ப்பில் மூலமொழியின் திரைப்படத்தில் வரும் பண்பாட்டுக் கலாச்சாரக் கூறுகளின் அமைப்பிற்கு ஏற்றவாறு மொழிபெயர்ப்புச் செய்யவேண்டும் என்பதுதான் மொழிபெயர்ப்பாளரின் முக்கிய பணியாகக் கருதப்படுகின்றது.

2.1.21 உடனடி மொழிபெயர்ப்பாளன்/ உடனடி மொழிபெயர்ப்பு (Interpreter/Interpretation)

இவ்வகை மொழிபெயர்ப்பு மேடை பேச்சுகள், சொற்பொழிவுகள் ஆகியவற்றில் இடம் பெறுகின்றன. ஒருவர் சொற்பொழிவு செய்யும்போது அவர் பேசியதைக் கவனமாக் காதால் கேட்டு கருத்தில் கொண்டு பிறகு மொழிமாற்றம் செய்வது உடனடி மொழிபெயர்ப்பு ஆகும். இந்நிலை மொழிமாற்றம்

செய்பவரை ‘உடனடி மொழிபெயர்ப்பாளன்’ ‘Interpreter’ என்று அழைக்கிறோம். இந்நிகழ்வு உடனடி மொழிபெயர்ப்பாளரது முறைக்குள் நிகழும் மாற்றம் ஆகும். இதனை ஆங்கிலத்தில் Transfer of the message is the interpreter’s bearing in mind என்று கூறலாம். இவ்வகையில், ‘வாய்மொழி வழிய:க்கம்’ (Oral Media) மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

2.1.22 விவிலிய மொழிபெயர்ப்பு

மனித குலத்தின் கருவூலமாகப் போற்றப்படுவதும், மனிதனின் வழிகாட்டியாகவும், வாழ்க்கையின் பொருளை விளக்குவதாகவும் அமைவது விவிலியமாகும். ‘பைபிள்’ என்ற ஆங்கிலச் சொல் ‘நூல்’ என்ற பொருளையுடைய ‘பிபிலியோ’ என்ற கிரேக்கச் சொல்லினின்றும் வந்ததாகும். அது தமிழில் விவிலியம் என்று மருவி அனைவராலும் அழைக்கப்படுகின்றது. விவிலியம் ஒரே நூலாகத் தோன்றினாலும் உண்மையில் அது ஒரு தொகுப்புதான். பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இரு பிரிவுகளை உள்ளடக்கியது. பழைய ஏற்பாட்டில் 39 தனித்தனி நூல்களும், புதிய ஏற்பாட்டில் 27 தனித்தனி நூல்களும் அதில் அடங்கியுள்ளன. ஆகவே புதிய, பழைய ஏற்பாடுகள் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு ஆசிரியர்களால் வெவ்வேறு மொழிகளில் எழுதப்பட்டவையாகும். பழைய ஏற்பாட்டின் முதல் நூலான ‘ஆதியாகமம்’ எழுதப்பெற்று சுமார் 1500 ஆண்டுகளுக்கு பின்புதான் புதிய ஏற்பாட்டின் கடைசி நூலான ‘வெளிப்படுத்தின விசேஷம்’ எழுதப்பட்டது. சுமார் 285 ஆண்டுகளுக்கு முன்பு விவிலியம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. இது ‘சத்தியவேதம்’ என்ற பெயரில் வழங்கியது. இப்போது ‘பரிசுத்த வேதாகமம்’ என்று மாற்றி வழங்கப்பட்டு வருகின்றது.

விவிலியம் பல்லாயிரக்கணக்கான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எந்தெந்த மொழிகளில் அது மொழிபெயர்க்கப்படுகிறதோ அந்தந்த மொழிகள் அனைத்தும் மொழிபெயர்ப்பு முயற்சிகளில் அந்தந்த காலக்கட்டத்தை பெரிதும் வளர்த்தது. மேலும், விவிலியங்கள்தான் அன்றைய உரைநடைக்கு வழிகாட்டின எனலாம்.

தத்துவங்கள், சமய உண்மைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய உன்னத இலக்கியம் விவிலியமாகும். இம்மொழிபெயர்ப்பில் ஐந்து வகையான நிலைகள் காணப்படுகின்றன. மூலமொழியிலிருந்து பெறும்மொழிக்குக் கருத்துக்களை

கொண்டு வரும்போது (1) சுற்றி வலைத்துச் சொல்லும் நிலை (2) பிறமொழிச் சொற்களை நீக்கிய நிலை (3) கொச்சை வழக்குகளை நீக்கிய நிலை (4) பேச்சு வழக்குகளை நீக்கிய நிலை (5) பெயர்களைத் தூய தமிழில், நல்ல தமிழில் மொழிபெயர்த்த நிலை ஆகியன காணப்படுகின்றன,

விவிலிய மொழிபெயர்ப்பில் தெளிவாகச் சொல்லுதல், எளிமையாகச் சொல்லுதல், சுருக்கமாகச் சொல்லுதல், சுவையாகச் சொல்லுதல் என மொழிபெயர்ப்பின் பொதுவானக் கொள்கைகளை உள்ளடக்கி மொழிபெயர்ப்புப் பணி அமைந்திருக்கின்றது. விவிலிய மொழிபெயர்ப்புப் பணியில் மிகுந்த ஆர்வமுடனும், அக்கறையுடனும் பல்வேறு அறிஞர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், சீசன் பால்கு, பிப்ரிஉஷியஸ், ரேனியஸ், லார்சன் ஆவார்கள். பைபிளை முதலில் மொழிபெயர்த்தவர்கள் ஜெர்மானியர்களே ஆவர்.

விவிலிய மொழிபெயர்ப்பு வெவ்வேறு காலக்கட்டத்தில் வெவ்வேறு அறிஞர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக எபிரேய 'ஏலோஹீம்' என்ற சொல்லைச் சீசன்பால்கு 'சருவேசுரன்' என்று மொழிபெயர்த்துள்ளார். 'யாவே' என்ற சொல்லைக் 'கர்த்தார்' என்றும் பயன்படுத்தி வந்தனர். பிறகு சருவேசுரன் என்ற சொல் 'பராபரன்' என்று மாற்றியமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதை விவிலிய மொழிப்பெயர்ப்பில் காணமுடிகின்றது.

பப்ரிஉஷியஸ் என்ற அறிஞர் அஃறினைப் பன்மை எழுவாய்க்கு ஒருமைப் பயனிலையைப் பயன்படுத்தியிருக்கிறார். எடுத்துக்காட்டாக 'விதைகள் விழுந்தது' 'பறவைகள் பட்சித்தது' என்ற பேச்சு முறையே பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. லூக்கா 15ல் 'பாசத்துக்கு விரோதமாகவும்' 'உமக்கு விரோதமாகவும்' என்ற இடத்தில் 'வானத்துக்கு விரோதமாகவும்' 'உமக்கு விரோதமாகவும்' என்று எழுதியிருக்கிறார். இவைகள் இலக்கணப் பிழைகளாகவும், சொற்பிழைகளாகவும் காணப்படுகின்றன.

இயல் - 3

மொழிபெயர்ப்புக் கொள்கைகளும் கோட்பாடுகளும்

3. மொழிபெயர்ப்புக் கொள்கைகளும் கோட்பாடுகளும்

மொழிபெயர்ப்பியல் என்பது பல்வேறு மொழிகளுடன் சம்மந்தப்பட்டது. விரிந்து, பரந்து பெருகும் பல்வேறு துறைகளோடு பின்னிப்பிணைந்து வளர்ச்சிகளை உள்ளடக்கியது. எந்த ஒரு துறையும், செயல்திறனில் (Efficiency) மேம்படுவதற்கும் பலரும் அத்துறைப் பற்றி தெளிவாக அறிந்து கொள்வதற்கும் வரையறுக்கப்பட்ட விதிகள் அவசியமாகின்றன. இந்நிலையில், காலப்போக்கில் அத்துறை சம்மந்தப்பட்டவர்களின் அனுபவங்களுக்கேற்பவும், அறிவு வளர்ச்சிக்கு ஏற்பவும், சூழ்நிலை வசதிகளுக்கேற்பவும் அவ்விதிகள் மாறலாம் அல்லது மாற்றப்படலாம், அவ்விதிகளிலிருந்து விளக்கலிக்கக்கூடப்படலாம். ஆனால், ஒரு துறையின் செயல்பாட்டிற்குப் பொதுவான விதிகளும் கோட்பாடுகளும் தேவை. எனவேதான் மொழிபெயர்ப்பியலுக்கும் (Translatology) கோட்பாடுகளை வகுத்தளிப்பது அவசியமாகிறது.

3.1 கோட்பாடுகள்

ஒரு செயல்முறை (Process) அல்லது நிகழ்வில் (Phenomenon) மேற்கொள்ளப்படும் அல்லது உள்ளமைவாக இயங்கும் பொதுவான விதிமுறைகள் என்று முறையாக எடுத்துச் சொல்லப்படுபவனவற்றை, அந்த செயல்முறை அல்லது நிகழ்வு தொடர்பான கோட்பாடுகள் (Theory) என்கிறோம். மொழிபெயர்ப்புப் பணியில் மேற்கொள்ளப்படுகிற அல்லது மேற்கொள்ளப்பட வேண்டிய பொதுவிதிகள் மொழிபெயர்ப்பியல் கோட்பாடுகள் எனக் கொள்ளப்படுகின்றன.

3.2 எதிரெதிர்க் கோட்பாடுகள்

தியாடர் சவாரி (1968) மொழிபெயர்ப்பியல் கோட்பாடுகளை ஆறு எதிரெதிர்க் கோட்பாடுகளாகச் சுட்டுகின்றார்.

1. ஒரு மொழிபெயர்ப்பு மூலநூலில் சொற்களை அப்படியே தரவேண்டும். ஒரு மொழிபெயர்ப்பு மூலநூலின் கருத்துக்களை அப்படியே தரவேண்டும்.

2. ஒரு மொழிபெயர்ப்பு படிப்பதற்கு மூலநூலைப் போலவே இருக்க வேண்டும். ஒரு மொழிபெயர்ப்பு படிப்பதற்கு ஒரு மொழிபெயர்ப்புப் போலவே இருக்க வேண்டும்.

3. ஒரு மொழிபெயர்ப்பு மூலநூலின் நடையைப் பிரதிபலிக்க வேண்டும். ஒரு மொழிபெயர்ப்பு மொழிபெயர்ப்பாளரின் மொழி நடையைப் பெற்றிருக்க வேண்டும்.

4. ஒரு மொழிபெயர்ப்பு படிப்பதற்கு மூலநூலின் காலத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். ஒரு மொழிபெயர்ப்பு படிப்பதற்கு மொழிபெயர்ப்பாளரின் காலத்தைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும்.

5. ஒரு மொழிபெயர்ப்பு மூலநூலைக் கூட்டவோ குறைக்கவோ செய்யலாம். ஒரு மொழிபெயர்ப்பு என்றுமே மூலநூலைக் கூட்டவோ குறைக்கவோ கூடாது.

6. ஒரு செய்யுள் மொழிபெயர்ப்பு உரைநடையில்தான் இருக்க வேண்டும். ஒரு செய்யுள் மொழிபெயர்ப்பு செய்யுளில்தான் இருக்க வேண்டும்.

இத்தகைய எதிரெதிர் கோட்பாடுகளினால் மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளை மிகத்துல்லியமாக அமைக்க முடியாது. மொழிபெயர்ப்பு, மொழித் தன்மையினை நுட்பமான ஆராய்ந்து அதனடிப்படையில் கோட்பாடுகளை அமைப்பதுதான் நிலையான கோட்பாடுகளாகவும், மொழிபெயர்ப்பாளர்களின் பயன்பாட்டுக்கு ஏதுவாகவும் அமையமுடியும். ஒரு அறிவுசார்ந்த துறை செம்மையாக செயல்படுவதற்கு வகுக்கப்படும் பொதுவிதிகளைத்தான் அந்த துறை சார்ந்த கோட்பாடுகள் (Theory) என்கிறோம்.

3.1 மொழிபெயர்ப்பு

மொழிபெயர்ப்பியல் அறிஞர்கள் மொழிபெயர்ப்புக்கு வெவ்வேறான கருத்துக்களை அவரவர் கருத்துக்குத் தகுந்தார் போல வரைவிலக்கணம் தருகின்றனர். இந்நிலையில் மொழிபெயர்ப்பின் தன்மையை "ஒவ்வொரு மனிதனின் மனநிலையினையும் கருத்தில் கொண்டால், மொழிபெயர்ப்பிற்கு முடிவென்பதே இருக்காது" என்ற பிஷப்பேன் கிராப்ட் என்பவரின் கூற்று இங்கு நினைவு கூறத் தக்கது.

ஜே.சி.காட்போர்டு (1969) 'மூலமொழியிலுள்ள ஒரு செய்தியை அதற்கு நிகரான பெறும் மொழிச்செய்தியாகப் பெயர்ப்பதே மொழிபெயர்ப்பு' என்பார்.

ஐசடோர் பிஞ்சக் (1977) ‘மூலத்துக்கு இணையான பெறும் மொழி நிகரன்களைக் (Equivalent) கண்டறியும் செயல்முறையே மொழிபெயர்ப்பு’ என்பார்.

டாஸ்டர்ப் (1969) ‘ஒரு பாங்கமைவில் (Pattern) அமைந்த குறியீட்டுத் தொகுதியின் பொருளை இன்னொரு பாங்கமைவில் அமைந்த குறியீட்டுத் தொகுதியாக மாற்றுவதே மொழிபெயர்ப்பின் பணியாகும்’ என்பார்.

யூஜின் நெய்டா (1969) ‘பொருளுக்கு முதலிடமும் நடைக்கு இரண்டாம் இடமும் தரும் வகையில் மூலமொழிச் செய்திக்கு மிக நெருங்கிய இயல்பான நிகரனைப் பெறும் மொழியில் ஆக்கித் தருவதே மொழிபெயர்ப்பு’ என்பார்.

அயன் பின்லே (1971) ‘மூலத்தின் நுதல் பொருளில் (Subject Matter) பயிற்சியுடைய பெறும் மொழியாளன் அம்மூலத்தின் மொழிபெயர்ப்பைப் படிக்கும்போது மூலத்தின் தாய்மொழி வாசகன் தான் பெற்ற அனுபவங்களைப் பெற வேண்டும். அதுவே மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாகும்’ என்பார்.

இவ்வரைவிலக்கணங்களால் கீழ்வருவன புலனாகின்றன.

1. மொழிபெயர்ப்பு எனும் செயல்முறையில் ஒரு சமயத்தில் இரண்டு மொழிகள் சம்மந்தப்படுகின்றன. அதாவது இரண்டு மொழிகளின் மொழியியற் கூறுகள் சொற்களஞ்சியம் அம்மொழிகளைப் பேசுவோரின் பண்பாடு. கலாச்சாரம், வரலாறு, வாழ்வுச்சூழல், வாழிடத்தின் புவியியல் அமைப்பு, தட்பவெப்ப நிலை ஆகியன சம்மந்தப்படுகின்றன.

2. இரண்டு மொழிகளுள் ஒன்று மூலமொழி (Source Language) இன்னொன்று பெறும் மொழி (Receptor Language) இவை மு.மொ. (SL) பெ. மொ. (RL) என்ற சுருக்கக் குறியீடுகளால் பயன்படுத்தப்படுகின்றன.

3. மூலமொழியிலிருந்து செய்திகள் பெறும்மொழியில் பெயர்க்கப்படுகின்றன. அதாவது, அறிவுத் துறைகள் அல்லது நடைமுறை வாழ்வு தொடர்பான உள்ளடக்கம் (Content) மூலமொழியிலிருந்து பெறும் மொழியில் பெயர்க்கப்படுகிறது.

4. மொழிபெயர்ப்பில் மூலத்தின் பொருள் (Meaning) முதன்மை இடம் பெறுகின்றன. அதாவது, மூலத்தின் பொருள் மாறாமலிப்பதற்காக நடைக்கூறுகளை மாற்றலாம் மூலத்தின் நடைக்கூறுகளைக் காப்பாற்றுவதற்காகப் பொருளை மாற்றிவிடக் கூடாது. பொருளும் நடையும் ஒருங்கே மாறாமல் அமைவது மிகச் சிறப்பானதாகும்.

5. மூலத்தின் பொருள் முதன்மை பெறும் விதத்தில் பொருத்தமான பெறும் மொழி நிகரன்களைக் (Equivalents) கண்டறிவதே மொழிபெயர்ப்பின் மையப்பணியாகும்.

6. நிகரன்கள் மூலத்துக்கு மிக நெருங்கியனவாகவும் பெறும்மொழியின் இயல்புக்கேற்றவனவாகவும் அமைதல் வேண்டும்.

7. ஒரு மொழிபெயர்ப்பின் மூலமானது மூலமொழி வாசகரிடத்து ஏற்படுத்தும் விளைவுகளுக்கு நிகரான விளைவுகளை மொழிபெயர்ப்பானது பெறும்மொழி வாசகரிடத்து ஏற்படுத்த வேண்டும்.

எனவே, மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளை உருவாக்குவதில் கீழ்க்காண்பவை முக்கிய இடம் பெறுகிறது என்பது தெளிவாகிறது.

1. மூலத்தின் உள்ளடக்கம்.

2. மூலமொழியின் மொழியியல் கூறுகளும் மற்றும் பண்பாட்டுக் கலாச்சாரக் கூறுகளும்.

3. மூலம்-மொழிபெயர்ப்பு இவற்றிடையே அமையும் பொருள் ஒருமை, நடை ஒருமை ஆகியன.

4. மொழிபெயர்ப்பு நிகரன்களின் (Translation Equivalents) வழக்கும் ஆற்றலும் (Dynamics),

5. பெறும்மொழி வாசகரின் உணர்வுதிறன்.

ஆகியவற்றின் அடிப்படையிலேயே மொழிபெயர்ப்பியல் கோட்பாடுகள் உருவாகின்றன. இக்கோட்பாடுகளின் அடிப்படையில்தான் மொழிபெயர்ப்பு உத்திகளும் தீர்மானிக்கப்படுகின்றன.

3.4 மொழிபெயர்ப்பு நிகரன்கள் (Translation Equivalents)

மொழிபெயர்ப்பு என்பது பற்றி பலரும் பலவாறு வரையறை செய்துள்ளனர். அவற்றுள் ஐசடோர் பிஞ்சக் என்பாரின் வரையறை இங்கு நினைவு கூறத்தக்கது.

'மூலத்துக்கு இணையாகப் பெறும்மொழியில் நிகரன்களைக் கண்டறியும் செயல் முறையே மொழிபெயர்ப்பு' என்பது குறிப்பிடத்தக்கது. மூலமொழிக் கூறுகளின் நிகரன்களைக் கண்டறிவதே மொழிபெயர்ப்பின் மையப்பணியாகும். ஏனெனில், முழுமையான மொழிபெயர்ப்பு என்பது நூல் முழுவதும் மொழிபெயர்ப்பதாக அமைய வேண்டும் என்பதில்லை. மூலம் எதுவாக

இருந்தாலும் அதனைப் பெறும்மொழி நிகரன்களால் சரியாகப் பதிலீடு (Substitution) செய்வதே முழுமையான மொழிபெயர்ப்பாகும்.

3.4.1 நிகரன்கள் என்றால் என்ன?

மூலத்தின் பொருளைப் பெறும்மொழியில் தரும் விதத்தில் மூலத்தின் உருபன்கள் (Morphemes) சொற்கள் (Words), தொடர்கள் (Phrases), வாக்கியங்கள் (Sentences) ஆகியவற்றை பதிலீடு (Substitute) செய்யக் கூடிய பெறும்மொழிக் கூறுகளை மொழிபெயர்ப்பு நிகரன்கள் என்று கூறலாம்.

மொழிபெயர்ப்பு நிகரன்களை இரண்டு வகைகளாகப் வகைப்படுத்தலாம். அவையாவன.

1. முறைசார் நிகரன்கள் (Formal Correspondents/Equivalents).
2. ஆற்றல்மிகு நிகரன்கள் (Dynamic Equivalents).

3.4.1.1 முறைசார் நிகரன்கள் **(Formal Correspondents)**

மூலமொழியின் உருபன்கள், சொற்கள், தொடர்கள், சொற்றடர்கள் இவற்றுக்கு இணையாக பெறும்மொழி வழக்குகளை முறைசார் நிகரன்கள் என்கிறோம். ஆனால், ஒரு சொல் உணர்த்துவதைப் பெறும்மொழியில் ஓர் உருபன் உணர்த்தி விடலாம். நேர்மாறாகவும் இருக்கலாம். மூலமொழியில் ஒரு தொடர் உணர்த்தும் பொருளைப் பெறும்மொழியில் ஒரு சொல் உணர்த்தலாம். நேர்மாறாகவும் இருக்கலாம். சொற்றொடருக்கு மூலமொழியில் பெறும்மொழியில் ஒரு சொல் அல்லது ஒரு தொடர் பதிலியாவதும் உண்டு. நேர்மாறாக அமைவதும் உண்டு. இதனால் மூலமொழிச் சொல்லுக்கு பெறும்மொழியில் ஒரு சொல்தான் நிகராக அமையவேண்டும் என்பதில்லை.

மூலமொழி(SL)		பெறும்மொழி (TL)			
உருபன்	→	உருபன்,	சொல்,	தொடர்,	சொற்றொடர்
சொல்	→	”	”	”	”
தொடர்	→	”	”	”	”
சொற்றொடர்	→	”	”	”	”

ஆகவே, இரு மொழிகளுக்கிடையே முறைசார் நிகரன்கள் இணை கீழ்வருமாறு அமைகிறது.

ஒன்றுக்கு > ஒன்று
ஒன்றுக்குப் > பல
ஒன்றுக்கு > இல்லை
பலவற்றுக்குப் > பல
பலவற்றுக்கு > ஒன்று
பலவற்றுக்கு - இல்லை

உருபன், சொல், தொடர், சொற்றொடர் ஆகிய எல்லா நிலைகளிலும் இருமொழிகளிடையே ஒன்றுக்கு-ஒன்று என்று இணை அமைவது அரிது. அப்படி அமைந்தால் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பு என்பது எளிமையாகிவிடும். அப்படி அமையாததினால்தான் மொழிபெயர்ப்பில் சிக்கல்கள் உருவாகின்றன.

ஒன்றுக்கு - 'ϕ', பலவற்றுக்கு ' - ' என்ற இணைகள் அமையும்போது அதாவது மூலத்தின் உள்ள உருபன்/சொல்/தொடர்/வாக்கியத்திற்குப் பெறும் மொழியில் நிகரன் இல்லை என்கிறபொழுது மொழிபெயர்ப்பில் புதுமையாக்கம் முதன்மை இடம் பெறுகின்றது எனலாம்.

3.4.2 ஆற்றல்மிகு நிகரன்கள் (Dynamic Equivlents)

மூலமொழியின் பொருளுக்கு முதன்மையிடம் தந்து அப்பொருளை ஆற்றலுடன் பெறும்மொழி வாசகரின் மனதில் பதியக்கூடிய நிகரன்களை மொழிபெயர்ப்பில் கையாள வேண்டும். இத்தகு நிகரன்களை ஆற்றல்மிகு நிகரன்கள் என்கிறோம். எடுத்துக்காட்டாக

l Please hear my words.

la தயவு செய்து என் சொற்களைக் கேள்.

*lb தயவு செய்து நான் கூறுவதைக் கேள்.

இம்மொழி பெயர்ப்பில் la வாக்கியம் சொற்களுக்கு இணையாக அமைக்கப்பட்டு பொருள் உணர்த்தப்படுகின்றது. இருந்தாலும் lb வாக்கியம் la யைக் காட்டிலும் ஆற்றல் மிகு நிகரனாக அமைக்கப்பட்டு சொல்லவந்த பொருளைத் தெளிவாக உணர்த்துகிறது. எனவே, மொழிபெயர்ப்பில் சரியானநிகரனை அமைத்து மொழிபெயர்ப்பு செய்வதைக் காட்டிலும் ஆற்றல் மிகுந்த நிகரனை அமைத்து மொழிபெயர்ப்பு செய்வது வாசகரின் புரிதிறனையும், சொல்லவந்த கருத்தினைத் தெளிவாக உணர்த்துகிறது.

3.5 எந்த மொழிபெயர்ப்புக்கு மொழிப்பெயர்ப்பாளன் முதலிடம் தரவேண்டும்?

கருத்து, முறைசார் நிகரன்கள், ஆற்றல்மிகு நிகரன்கள் மற்றும் செய்திக்கு முக்கியத்துவம் தருவதா? அல்லது வடிவம் மற்றும் நடைக்கு முக்கியத்துவம் தருவதா? என்று மொழிபெயர்ப்பாளர்களுக்கு வினாக்கள் எழும். இப்படிப்பட்ட சமயங்களில் ஒரு மொழிபெயர்ப்பாளன் எதற்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்பது பற்றிய முதன்மை நிரல் (Order of priority) வைத்துக் கொள்வது நல்லது என்பார் நைடா.

1. சூழல்சார்ந்த மொழிபெயர்ப்பு சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பதைக் காட்டிலும் சிறந்தது.

2. ஆற்றல்மிகு நிகரன் (Dynamic equivalence) முறைசார் நிகர்னைக் (Formal Correspondence) காட்டிலும் முக்கியத்துவம் வாய்ந்தது.

3. வாசகர்களுக்குப் பழக்கமான சொற்களும், தொடர்களும் மரபு வழிபட்ட சொற்கள், தொடர்களைவிட பொருத்தமானவை.

4. கதை, நாடகம் ஆகியவற்றில் இடம்பெறும் உரையாடல்களை மொழிபெயர்ப்பதில் இலக்கிய மொழி வழக்கைக் காட்டிலும் பேச்சுமொழி வழக்கே பொருத்தமானது.

3.6 ஆற்றல்மிகு நிகர்மை (Dynamic equivalence)

மொழிபெயர்ப்பில் ஆற்றல்மிகு நிகர்மை என்ற கருத்துப் படிவத்தைப் புரிந்து கொள்வதற்கு முன் ஒரு வாசகன் மொழிபெயர்ப்பை எந்த அளவுக்குப் புரிந்துகொண்டான் என்பதை முதலில் அறிதல் வேண்டும். ஒரு மொழிபெயர்ப்பு சரியானதுதான் என்பதை எப்படிக் கணிப்பது? மொழிபெயர்ப்பில் இடம் பெற்றுள்ள சொற்களும் இலக்கண அமைப்புக்களும் மூலமொழியில் அமைந்திருப்பதற்கு இணையாக இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து அதற்கேற்ப மொழிபெயர்ப்பு சரியானது என்று கணிப்பது ஒருமுறை. இது

பழைய முறை. ஆனால், மொழிபெயர்ப்பில் மூலமொழி வாசகன் பெறும்மொழி வாசகன் ஆகிய இருவரும் முக்கிய இடம் பெறுகின்றனர். இவர்களை அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்ப்பு சரியானது என்று கணிப்பது புதிய முறை இவ்விரண்டு முறைகளையும் கீழ்க்காணும் படங்கள் மூலம் விளக்கலாம்.

பழைய முறை



படம் 1

இப்படத்தில் உள்ள சதுரங்கள் மூலமொழியினையும் செவ்வகங்கள் பெறும்மொழியினையும் குறிக்கும். S என்பது மூலமொழியில் M_1 என்ற செய்தியைத் தரும் ஆசிரியரைக் குறிக்கும். இந்தச் செய்தியை R_1 எனும் மூலமொழி வாசகன் படித்து சில அனுபவங்களைப் பெறுகிறான். மூலச்செய்தி M_1 ஐப் பெறுபவனாகவும், அதைப் பெறும் மொழியில் தருபவனாகவும் ஒரே சமயத்தில் செயற்படுகிறவன் R/S எனும் மொழிபெயர்ப்பாளன். அவன் செய்யும் மொழிபெயர்ப்பு M_2 மொழிபெயர்க்கப்பட்ட இந்தச் செய்தியைப் பெறும்மொழி வாசகன் படித்துச் சில அனுபவங்களைப் பெறுகிறான். இம்மொழிபெயர்ப்பைச் சரிபார்க்கும் மொழிபெயர்ப்பு மதிப்பீட்டாளனுக்கு R/S

மொழிபெயர்ப்பாளனைப் போல மூலமொழி, பெறும்மொழி இரண்டிலும் தேர்ச்சி பெற்றவன். அவன் மொழிபெயர்ப்பினைச் சரிபார்க்கும் போது M_1, M_2 என்ற இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து இவ்விரண்டிற்கும் வடிவத்திலும், பொருளிலும் ஒருமைப்பாடு இருக்கிறதா என்று கணித்துத் தீர்ப்புக் கூறுகிறான். இம்முறையில் ஒரு குறை உள்ளது. மொழிபெயர்ப்பு மதிப்பீட்டாளன் M_1, M_2 ஆகிய இரண்டிலும் புலமை பெற்றிருப்பதால் M_1ஐப் பற்றி அறிந்த நிலையிலேயே M_2வைக் கணிக்கிறான். மூலமொழி வாசகன் R_1 ஐப் பற்றியோ, பெறும்மொழி வாசகன் R_2 வைப் பற்றியோ, இவர்கள் இருவரும் சேர்ந்து கொடுக்கப்பட்ட செய்தியைப் படித்துப் பெற்ற அனுபவங்கள் பற்றியோ அவன் கவலைப்படுவதில்லை.

புதிய முறை



படம் 1

இப்படத்தில் S எனும் மூலமொழி ஆசிரியன் தருகின்ற M_1 எனும் செய்தி R_1 என்ற சராசரி மூலமொழி வாசகனுக்கே. இந்த R_1 ஓர் ஒரு

மொழியாளனாகிய மூலமொழி வாசகனுக்காக எழுதப்பட்டதே தவிர மொழிபெயர்ப்பு மதிப்பீட்டாளனாகிய இருமொழியாளனுக்காக (Bilingual) அன்று. அதுபோலவே R_2 போன்ற ஒரு மொழியாளர்களாகிய வாசகருக்காகச் செய்யப்பட்டதே M_2 என்ற மொழிபெயர்ப்பு. எனவே M_1 ஐப் படித்து R_1 பெற்ற அனுபவங்களை ஒப்பிடுவதே மொழிபெயர்ப்பில் செம்மையைக் கணிக்கும் புதிய முறையின் விளக்கமாகும். இந்த ஒப்பீட்டு அடிப்படையில் மொழிபெயர்ப்பின் ஆற்றல்மிகு நிகரன் வரையறுக்கப்படுகிறது. அதாவது, மூலமொழி வாசகன் மூலத்தைப் படித்து பதில்வினை ஆற்றுவதைப் போல் (Respond) எந்த அளவுக்குப் பெறும்மொழி வாசகன் மொழிபெயர்ப்பினைப் படித்து பதில்வினை ஆற்றுகிறானோ அந்த அளவிற்கு மொழிபெயர்ப்பின் ஆற்றல்மிகு நிகரன் அமையும் எனலாம். இருவரது (மூலமொழி பெறும்மொழி வாசகர்) பண்பாட்டுக் கலாச்சார வரலாற்றுப் பிண்புலங்களின் வேறுபாடு காரணமாக அவரவர் தத்தம் மொழிகளில் படித்த செய்தியைப் புரிந்துக் கொண்டு பதில் வினையாற்றுவது ஒருக்காலும் முழுச்சமமாக இருக்க முடியாது. இருந்தாலும் இருசாராரது பதில்வினையும் (Response) பெருமளவு ஒத்திருந்தால்தான் மொழிபெயர்ப்பின் நோக்கம் நிறைவேற முடியும் எனக் கருத்தில் கொள்ள வேண்டும்.

3.7 மொழிபெயர்ப்பின் முக்கிய மூன்று பணிகள்

1. எந்த ஒரு மொழிபெயர்ப்பும் மூலமொழியின் கருத்தினை மாற்றாமல் பெறும்மொழியில் வாசகர்களுக்கு வடித்து தருவதாக அமைய வேண்டும். மொழிபெயர்ப்பின் இப்பணியைச் செய்தி தரும் பணி (Informative function) என்கிறோம்.

2. மூலத்தின் கருத்து மூலமொழி வாசகரது உள்ளத்தில் ஏற்படுத்திய உணர்வுகளை மொழிபெயர்ப்பும் தன் வாசகர் உள்ளத்தில் ஏற்படுத்த வேண்டும். அதற்கேற்றவாறு புலப்பாடுகளை (Expressions) மொழிபெயர்ப்புப் பெற்றிருத்தல் வேண்டும். இதனை மொழிபெயர்ப்பின் உணர்வூட்டும் பணி (Expressive function) என்பர்.

3. ஒரு மொழிபெயர்ப்பு கருத்தைத் தருவதாகவும், உணர்வூட்டுவதாக மட்டும் இருந்தால் போதாது. கேட்போரை/வாசகரைச் செயற்படத் தூண்டும் ஆற்றலும் அதற்கிருத்தல் வேண்டும். மொழிபெயர்ப்பின் இத்தகு செயற்பாட்டினை செயல் தூண்டும் பணி (Imperative function) என்பர்.

இம் மூன்று பணிகளும், மொழிபெயர்ப்பினை ஆற்றல்மிகு நிகர்மை உள்ளதாக அமைத்து மொழிபெயர்ப்பு சிறப்படைய வழிவகுக்கும் எனலாம்.

3.8 நிலையான நிகரன்கள் (Fixed Equivalence)

மூலமொழியின் கருத்துப் படிவம், சொற்றொடர், தொடர், சொல் ஆகியவற்றுக்கு நிகரன்கள் இவைதான் என்று பெறும்மொழியில் நிலைபெற்றுவிடும் நிகரன்களே நிலையான நிகரன்கள் (Fixed equivalence) ஆகும். எடுத்துக்காட்டாக

சொல் நிலையில்

Hamlet – குக்கிராமம்

Asylum – புகலிடம்

தொடர் நிலையில்

Leag and leagage – மூட்டை முடிச்சு

Nook and corner – மூலை முடுக்கு

சொற்றொடர் நிலையில்

Every bird must hatch its own eggs.

அழுதாலும் பிள்ளை அவள்தான் பெறவேண்டும்.

மொழிபெயர்ப்புத் துறை சார்ந்த மொழிபெயர்ப்பாளர்கள் அனைவருமே இத்தகு நிகரன்களை அறிந்திருப்பது அவசியமாகிறது. இந்நிகரன்கள் பொருள் புரிதலுக்கு உதவுவது மட்டுமின்றி மொழிபெயர்ப்புப் பணியையும் எளிமையாக்குகிறது.

3.2 மொழிபெயர்ப்புக் கொள்கைகள்

மொழிபெயர்ப்பு எப்படி நடைபெறுகின்றது. அதில் நடைபெறும் நடைமுறைகள் யாவை? என்ற கருத்தோடு மொழிபெயர்ப்பை அணுகினால் மொழிபெயர்ப்புக் கொள்கைகள் பற்றி அறிந்துகொள்ள முடியும்.

மொழிபெயர்ப்புப் பணியினை அறிய இரண்டு அணுகு முறைகள் உள்ளன. சில விதிமுறைகளைப் பயன்படுத்தி மூலத்தின் புற அமைப்புத் தொடர்களுக்கு இணையான பெறும்மொழித் தொடர்களைக் கண்டறிந்து பெறும்மொழிக்கு மாற்றுவது ஒரு முறை. இம்முறையில் மொழிபெயர்ப்பானது

மூன்று நிலைகளில் பல்வேறு செயல்முறைகளில் நிகழ்கிறது. அவை, 1. பகுப்பாய்வு, 2. மாற்றம், 3. செம்மையாக்கம் என்ற மூன்று படிநிலைகளைக் கொண்டிருக்கின்றன.



3.2.1 பகுப்பாய்வு

இந்நிலையில், ஒரு மொழிபெயர்ப்பாளன் மூலத்தின் புற அமைப்புத் தொடர்களில் உள்ள சொற்களுக்கிடையில் நிலவும் இலக்கண உறவுகளையும், சொற்சேர்க்கைகளுக்கு இடையில் நிலவும் இலக்கண உறவுகளையும் உற்றுநோக்கி பகுப்பாய்வு செய்யவேண்டும் முக்கியமான சொற்களின் பொருளையும், சொற்ச்சேர்க்கைகளின் பொருளையும் மனதில் கொண்டு ஆய்வு செய்யவேண்டும்.

மொழிபெயர்க்க வேண்டிய பகுதியை மொழிபெயர்ப்பாளன் ஒரு முறை முழுவதும் நன்கு படித்துச் செய்திகளை அறிந்து கொள்ளவேண்டும். பின் அவற்றைப் பல அலகுகளாகப் பிரித்து, அவற்றின் தன்மை, பொருள், அமைப்பு அதில் உள்ள சிக்கல்கள் போன்றவற்றை அறிந்து கொள்ள வேண்டும். பிறகு பகுப்பாய்வுக்கு உட்பட்ட கூறுகளின் சரியான நிகரன்களை கண்டறிய வேண்டும். மூலமொழியிலிருந்து பெறும்மொழிக்கு மொழிபெயர்க்கும் பொழுது மையக் கருத்துகளுக்கே முதலிடம் அளிக்க வேண்டும். முற்றுத்தொடர், மரபுத்தொடர், சொல், உருபன் போன்றவற்றையும் மொழிபெயர்ப்பாளன் மனதில் கொள்ளவேண்டும். மூலத்தின் பகுப்பாய்வு அம்மூலமொழியின் பொருளைத் தெளிவாகப் புரிந்துக் கொள்ள மிகவும் உதவும்.

3.2.2 மாற்றம்

பகுப்பாய்வு செய்யப்பட்ட செய்திகள் மொழிபெயர்ப்பாளரின் மனதிற்குள்ளேயே ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழி மாற்றம் செய்யப்படுகின்றது.

அதாவது, மூலநூலில் உள்ள செய்திகளை இலக்கண நோக்கிலும், பொருண்மை நோக்கிலும் பகுப்பாய்வு செய்தபின் அதன் தீர்வுகளை மூலமொழியிலிருந்து பெறும்மொழிக்கு மாற்றுவதே மொழி மாற்றுதல் (Language Transfer) என்பதாகும்.

மொழிமாற்றுதல் என்பது மொழிபெயர்ப்புச் செயற்பாட்டில் ஒருமுறை மட்டுமே. இது மொழிபெயர்ப்பாளனின் மனதில்/மூளைக்குள் நடைபெறும் செயற்பாடாகும். மொழி மாற்றுதல் நிலையில் ஒரு மொழிபெயர்ப்பாளரால் பகுப்பாய்வு செய்யப்பட்ட மூலச்செய்தியைத் தன் மனத்துள்ளேயே எண்ணி எண்ணித் தேர்வு செய்ய முற்படுவதால் துணிந்து மூலமொழித் தொடர்களின் வடிவம் நடையழகு போன்றவை கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. மூலத்தின் செய்தியைப் பொருட்பிழையின்றித் தெளிவாகப் பெறும்மொழிக்கு மாற்றுவதிலேயே ஒரு மொழிபெயர்ப்பாளனது கவனம் முழுமையாக செலுத்தப்படுகின்றது.

மனத்துக்குள் ஓடும் ஒரு எண்ண ஓட்டத்தில் ஒரு பொருளை அல்லது செயலைப் பற்றித் தொடர்ச்சியாக அடையாளப்படுத்தும் ஒரு குறியீடாக (Symbol) மொழி பயன்படுத்தப்படுகிறது. மொழியின் பயன்பாடும் பட்டறிவும் காலப்போக்கில் மிகுதியாக ஆக மொழியின் பயன்பாடும் பட்டறிவும் விரிவடைந்து மொழி பலவகைகளில் ஓர் உயர்நிலையை அடைகிறது. ஒரு மொழியின் வளர்ச்சி நிலை அதன் முதிர்ச்சிக்கேற்ப அதனுடைய பலவகைப்பட்ட வடிவங்களும், பொருள் நிலைகளும் அம்மொழியிலேயே அகமும், புறமுமாகப் புதைந்து கிடக்கின்றன. இரண்டு மொழிகளுக்கிடையே உள்ள மாற்றங்களை, அவற்றிற்குரிய காரணிகளை, அவற்றின் பொருள் வெளிப்பாடுகளை, அவ்வெளிப்பாட்டு அமைப்புகளை, அவற்றின் பொருள்கள் உணர்த்தும் செயற்பாடுகளை மொழிப்பெயர்ப்பாளன் உணரவேண்டும். அதற்குப் பிறகே மொழிபெயர்ப்பாளன் தன் மொழிபெயர்ப்பில் கருத்துச்செறிவினை கொண்டு வரவேண்டும். இந்த நிலையை உணர்ந்து இரண்டு மொழிகளிலும் உள்ள சொற்கள், தொடர்கள், பொருட்கூறுகள், அவை அமையும் விதங்கள் ஆகியவற்றை அறிந்து மொழி மாற்றுதல் என்ற செயல்பாட்டிற்கு ஒரு மொழிபெயர்ப்பாளன் வருவது எளிதான காரியம் அல்ல.

மொழி மாற்றுதல் எனும் செயல்முறையில் ஒரே நேரத்தில் மூலமொழியும், பெறும்மொழியும் சம்மந்தப்படுகின்றன. இவ்விதமான மொழி மாற்றத்தில் மூலத்தின் பொருள் முதன்மை இடம் பெறுகிறது. நடைக்கூறுகள் இரண்டாவது இடம் பெறுகின்றன.

மொழி மாற்றுதல் நிகழ்ச்சியின்போது, சொற்களை நேரடியாகக் கடன் வாங்குதல், கலப்புச் சொற்களை உருவாக்குதல், மொழிபெயர்த்தல்,

பழஞ்சொற்களுக்குப் புதுப்பொருள் கொடுத்துப் பயன்படுத்துதல் எனும் நான்கு விதமான செயல்கள் நடைபெறுகின்றன என்பதை மொழிப்பெயர்ப்பாளன் கருத்தில் கொள்ள வேண்டும்.

மொழி மாற்றுதலில் இரண்டு மொழிச் சொற்களையும் மொழி மாற்றம் செய்யாது, அது உணர்த்தும் கருத்துக்கேற்ற சொல்லைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மூலமொழி வேர்ச்சொற்களுக்கு ஏற்ப பெறும்மொழியில் பொருள் பொதிந்த நிகரன்களை உருவாக்கி, அவற்றிலிருந்து பல்வேறு புதிய சொற்களை உருவாக்குவது மொழித்திறனை அதிகரிக்கச் செய்யும் இதனை புதுமையா - மொழிபெயர்ப்புப் பண்புகள் என மொழியியலார் கருதுவர்.

மொழிபெயர்ப்பாளர்கள் மூலமொழிச் சொல்லை அப்படியே கையாண்டால்தான் பொருளை மிகத் தெளிவாகவும், ஆற்றலோடும் புலப்படுத்த முடியும் என்று சிலர் நம்புகிறார்கள். மூலமொழிச் சொற்களைக் கையாளுவதுதான் பெருமைக்குரியதும் போற்றுதலுக்குரியதுமாகும் என்று கருதுபவரும் உண்டு. எக்காரணம் கொண்டும் மூலமொழிச் சொற்களைப் பயன்படுத்தவே கூடாது என்று வேறு சிலர் கருதுகிறார்கள். இப்போக்குகள் மொழி மாற்றுதலுக்குப் பெறும்மொழியில் இயல்பான எளிய மொழிபெயர்ப்பு வருவதற்கு இடையூராக அமைகின்றன. மொழிபெயர்ப்பாளன் விருப்பு வெறுப்பின்றி மொழிகளையும், மக்களையும், கலாச்சாரங்களையும் மதிக்கும் அளவிற்கு பரந்த மனப்பான்மையுடையவராய் இருத்தல் வேண்டும். மொழி மாற்றுதலில் கையாளப்படும் உத்திகள், கோட்பாடுகள் ஆகியனப் பற்றிய அறிவும், அறிவியல் பார்வையும் மொழி மாற்றுதலுக்கு மிகவும் இன்றியமையாததாகும். இயல்பான மொழி பெயர்ப்புகள் நிரம்ப வெளிவர இவ்வழிமுறைகள் துணைபுரிகின்றன.

மொழிபெயர்ப்பாளருக்கு ஆக்கத்திறனும் தன்னாக்கத் திறனும் தேவை. மொழி மாற்றுதலில் பொருத்தமான நிகரன்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவதில்தான் ஒரு மொழிபெயர்ப்பாளனின் முழு ஆற்றலும், வெற்றியும் அமைந்திருக்க முடியும். மொழிபெயர்ப்புப் பணி சிறக்க வேண்டுமானால் சரியான நிகரன்களைத் தேர்ந்தெடுப்பதில் அவர் தன் மொழித்திறன், அறிவுக்கூர்மை, ஆகியவற்றை பெற்றிருக்க வேண்டும்.

மொழி மாற்றுதல் என்பது ஒரு கோப்பையிலுள்ள நீரை இன்னொரு கோப்பைக்கு மாற்றுவது போன்று மிகவும் எளிதான காரியமாகாது. மொழி மாற்றுதல் என்கிற செயலானது அறிவுத்துறைகள் அனைத்தையும் தழுவிய ஒரு பெருங்கடல். இந்நிலையில் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபடும்

அனுபவத்தில்தான் புதுப்புதுச் சிக்கல்களை இனங்கான முடியும். இடர்பாடுகளின் பரிமாணங்களும், அவற்றை மேற்கொள்ளும் வழி முறைகளும் அப்போதுதான் தெளிவு பெறும்.

மொழிபெயர்ப்புப் பணியைச் செய்வதற்கு அம்மொழியின் மீது அன்புணர்வு அற்றவனால் அம்மொழியின் தலைப்புக்கென ஓர் இம்மி அளவான நலத்தையும் இழைத்துவிட முடியாது என்று பேராசிரியர் அருளி கூறுவார். மொழிமாற்றுதல் என்பது மிகக் கடினமான செயல்பாடு. இச்செயலில் ஈடுபடுபவர் மூலம் மொழியலும் பெறும்மொழியிலும் திறம்பட அறிவு பெற்றவராகவும், அம்மொழிகளின்பால் அன்புணர்வு கொண்டவராகவும் இருத்தல் அவசியமாகும்.

3.2.3 செம்மையாக்கம்

செம்மையாக்கம் என்பது மேற்சொன்ன முறையைக் கருத்தில் கொண்டு மூலமொழியிலிருந்து பெறும்மொழிக்கு மாற்றப்பட்ட செய்தியானது அம்மொழியின் அமைப்பிற்கேற்றவாறும், ஏற்றுக்கொள்ளப்படும் விதத்தில் அதன் அமைப்பை வடிவமைப்பதும் ஆகும். செம்மையாக்கம் என்ற இந்நிலையை மூன்று படிநிலைகளில் செய்யலாம்.

1. மூலமொழிச் செய்தியை மொழியின் எந்த நடையில் அல்லது கிளைமொழியில் அமைப்பது என்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

2. நடையின் சிறப்பியல்புகளைப் பற்றி தெளிவாக அறிந்திருக்க வேண்டும்.

3. நடை அல்லது கிளைமொழியின் சிறப்பியல்பு நுட்பங்களை உணர்ந்து செம்மைப்படுத்த வேண்டும்.

3.2.3.1 மொழியின் வகைகள்

ஒரு குறிப்பிட்ட மொழி அனைத்து இடங்களிலும் ஒரே மாதிரியாக இருக்கும், செயல்படும் என்று கருதுதல் கூடாது. வேறுபாடுகள் இல்லை என்றும் கருதுதல் கூடாது. பொதுவாக, இத்தகைய வேறுபாடுகள் 1. காலத்தால் உண்டாகக் கூடிய மாற்றங்களாக இருக்கலாம். 2. வட்டார வழக்குகளின் அடிப்படையில் உண்டாகும் மாற்றங்களாக இருக்கலாம். 3. சமுதாயப்பின்புலங்களின் அடிப்படையில் உண்டாகும் வழக்கு வேறுபாடுகளாக இருக்கலாம். 4. பண்பாட்டுக் கலாச்சாரச் சூழல் மாற்றத்தால் உண்டாகும் மாற்றங்களாக இருக்கலாம். 5. பயன்படுத்தப்படும் மொழி எழுதப்படுகின்றனவா

அல்லது பேசப்படுகின்றனவா என்பதை பொருத்து உண்டாகும் மாற்றங்களாக இருக்கலாம். 6. உரைக்கோவையின் மாற்றத்தால் உண்டாகும் மாற்றங்களினாலும் வேறுபாடுகள் இருக்கலாம். எனவே, நடையின் கூறுகளை மொழிபெயர்ப்பாளன் ஆராய்ந்து மொழிக்கு பொருத்தமான நடையை படைப்பது அவசியமாகிறது. ஒரு செம்மையான மொழிபெயர்ப்பு என்று கூறுவோமேயானால் 1. மூலமொழிச் சொல்லுக்கு மிகச் சரியான பெறும் மொழிச் சொற்களை தேர்ந்தெடுத்துப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். 2. கருத்துக்கோவையின் அமைப்பைச் சரியான விதத்தில் உருவாக்கியிருக்க வேண்டும். 3. மொழிபெயர்ப்பு யாருக்காக எழுதப்படுகிறது என்பதை புரிந்துக் கொண்டு அவர்களுக்கு ஏற்ற விதத்தில் அம்மொழிபெயர்ப்பு அமைக்கப்பட்டிருக்க வேண்டும். 4. ஒரே மாதிரியான வாசகர்களுக்குள் வெவ்வேறு விதமான விளைவுகளையும், பாதிப்புகளையும் ஏற்படுத்தும் விதத்தில் எழுதுவது கூடாது என்பன போன்ற இயல்புகளை பெற்றிருந்தால் ஒரு மொழி பெயர்ப்பாளன் தான் மேற்கொண்ட மொழிபெயர்ப்புப் பணியைச் செம்மையாகச் செய்ய நேரிடும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

இயல் - 4

மொழிபெயர்க்கத் தகுதிகள்

———

மொழிபெயர்க்கத் தகுதிகள்

ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்ய எந்தவொரு துறையானாலும் ஒரு குறிப்பிட்ட கல்வித்தகுதித் தேவை என்றாகிவிட்ட காலம். முன் அனுபவத் தகுதி ஒரு வேலையை திறம்பட செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலையில் மொழிபெயர்ப்புக்கெனத் தகுதிகள் என்னென்ன வேண்டும் என்றளவில் பார்க்கும்போது சற்று ஆய்வுக்குரிய நிலையினை அறிய முடிகிறது. காரணம், தமிழிலும் சரி, பிறமொழிகளிலும் சரி அந்நாளில் இருந்து இந்நாள்வரை முன் தகுதியை வைத்துக்கொண்டு யாரும் மொழிபெயர்த்ததாகத் தெரியவில்லை. மொழிபெயர்த்தவர்கள் அனைவருமே ஆர்வம், அக்கறை, ஈடுபாடு, சேவை போன்ற மகத்தான தகுதியைப் பெற்றவர்களே இத்துறையில் மிகுந்த ஆர்வம் காட்டி வந்துள்ளனர் என்று கூறலாம். இவர்களை பாரம்பரிய மொழிபெயர்ப்பாளர்கள் (Practical Translators) எனக் கொள்ளலாம். இவர்கள், தான் படித்து அனுபவித்த இன்பங்களை பலர் அறிய செய்ய வேண்டும் என்ற ஒப்பற்ற தியாக உணர்வோடு செய்து வந்தவர்கள். இந்த செயல்பாட்டிற்கு முன் "தகுதி" என்ற சொல்லே தகுதியற்றதாகி விடுகின்றது. எனினும், ஆர்வம் மட்டுமே மொழிபெயர்க்க ஒரு மொழிபெயர்ப்பாளனுக்குத் தகுதியாகிவிட முடியாது.

ஒரு மொழிபெயர்ப்பாளன் என்பவன் மொழிக்கும், அம்மொழி சார்ந்த மக்களுக்கும் மகத்தான ஆக்கத்தினைச் சேர்ப்பவன். எரியும் மெழுகாக தன்னைக் கரைத்துக்கொண்டு மூலத்தின் அருமை பெருமைகளை ஒளியாக வெளிப்படுத்துபவன். தன்னை மறைத்துக்கொண்டு அறிவுச் செல்வங்களை பரவலாக பலர் அறிய எடுத்துச் சொல்பவன். எனவே, மொழிபெயர்ப்பாளனுக்கு ஒரு தனித்தகுதி உண்டு. ஆகவே, ஒரு மொழிபெயர்ப்பாளனது அடிப்படைத் தகுதி என்ன என்று ஆராய்ந்து பார்ப்பதில் எவ்வித கருத்து மாற்றமும் இருக்கப் போவதில்லை என்பதை அறிஞர்கள் மனங்கொள்ள வேண்டும்.

4.1 தகுதிகள்

மொழிபெயர்க்க இருக்க வேண்டிய முதலாவது தகுதியாக கூறப்போனால் ஒரு மொழிபெயர்ப்பாளர் சிறந்த எழுத்தாற்றலைப் பெற்றிருக்க வேண்டும். இது தவிர வேறு பல தகுதிகளும் வேண்டும் என்பது பொதுவான கருத்தாகும்.

உலகில் மிக அதிகமான நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டிருப்பவை மார்க்சிய நூல்களாகும். ஆரம்ப காலத்தில் அவை ஜெர்மன் மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டன. அப்போது, சந்தித்த மொழிபெயர்ப்புச் சிக்கல்களையும், கடும் பிரச்சனைகளையும் மனதில் கொண்டு எங்கெல்ஸ் ஒரு கட்டுரையில் விளக்கினார். How not to translate marx என்பது அதன் தலைப்பு. 'Das Capital' நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க முற்படுகின்றவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகளை அவர் விளக்கினார்.

இரு மொழி பேசும் மக்களின் கலாச்சார பண்பாட்டுக் கூறுகள் பற்றியும் ஒரு மொழிபெயர்ப்பாளன் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

4.1.2 தன்மயப்படுத்தும் ஆற்றல்

மொழிபெயர்ப்பாளன் தன்மயப்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும். பெறும்மொழியை படிக்கும் வாசகர் மூலநூலைப் படித்து உணர்ந்த அனுபவத்தை பெறும்மொழியில் அப்படியே சிந்தாமல் சிதறாமல் பெறவேண்டும். "ஜேம்ஸ் ஆலன்" எழுதிய இரண்டு நூல்களை "மனம்போல வாழ்வு" "அகமே புறம்" என்ற தலைப்புகளில் வ.ஊ.சி. தமிழ்படுத்தினார். ஆங்கில நூற்களின் கருத்துக்களைத் தன்மயப்படுத்தித் தமிழ் மண் மணக்க எவ்வாறு தமிழாக்கம் செய்ய வேண்டும் என்பதை அவர் அந்நூலில் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றார்.

4.1.3 மொழி பற்றிய மனப்பான்மை

மொழிபெயர்ப்பாளன் மூலமொழி பெறும்மொழி ஆகிய இரண்டு மொழியினைப் பற்றிய உரைமைத்திறம் (Communicative potential) குறித்து குறைவாகவே, மிகையாகவோ மதிப்பீடு செய்யக்கூடாது. அவ்வம்மொழிக்கு ஏற்ற உரைமைத்திறம் உண்டு என்பதை மனதில் கொள்ள வேண்டும்.

4.1.4 படைப்பாளரே மொழிபெயர்ப்பைச் செய்வது

ஒரு படைப்பாளரே மொழிபெயர்ப்பாளராக செயல்படுவது என்பது சிறந்ததாகும். இந்தக் கருத்தினை நா.பார்த்தசாரதியும் முன் வைக்கிறார். 'லலிதாம்பிகா அந்தாஜனம்' எழுதிய 'மனுஷ்யபுத்தி' என்ற மலையாள சிறுகதையை ராஜம்கிருஷ்ணன் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். இவர் சிறந்த எழுத்தாளராகையால் தமிழ் இவரது மொழிபெயர்ப்பு இலக்கிய வகைக்கு வளம் கூட்டுவதாக அம்மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது. எனவே, படைப்பாளரே மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபடுவது மிகச் சிறந்த தகுதியாகக் கொள்ளலாம்.

4.1.5 மொழித்திறம்

ஒரு மொழிபெயர்ப்பாளருக்கு மூலமொழியிலுள்ள மொழித்திறத்தைக் காட்டிலும் பெறும்மொழியில் மொழித்திறம் இன்னும் அதிகமாகவே இருக்க வேண்டும். மூலமொழியிலுள்ள பொருளை மயக்கமின்றி புரிந்துகொண்டால் போதும். பெறும்மொழியில் புரிந்துகொண்ட பொருளை, சுவை குன்றாமல் வடிவமைத்து தரவேண்டும். எனவே, மூலமொழியில் புலமையுள்ள ஒரு மொழிபெயர்ப்பாளன் தன் தாய்மொழியிலேயே மொழிபெயர்ப்பது சிறந்ததாகும்.

4.1.6 உரைநடைத்திறன்

இது உரைநடைக்காலம். எனவே மொழிபெயர்ப்பாளன் உரைநடையாசிரியர் எனும் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும். இதனை மனதில்கொண்டு மொழிபெயர்ப்பாளர்கள் சிறந்த உரைநடை நூல்களைப் படித்து சொல் வளத்தையும், மொழி நடையையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். திரு.வ.கல்யாணசுந்தரனார் நூல்களைப் பயில்வதால் நல்ல எளிய தரமான நடையில் தமிழில் எழுதக் கற்கலாம். மேலும் மொழிபெயர்ப்பாளர்கள் தமிழ் இலக்கண-இலக்கியங்களைக் கற்க வேண்டும். தமிழ்மொழியைத் தெளிவாக அறிய முற்படவேண்டும்.

4.1.7 மொழிபெயர்ப்பியல் பற்றிய அறிவு

மொழிபெயர்ப்பாளன் மொழிபெயர்ப்பியலைப் பற்றிய அறிவையும் பெற்றிருக்க வேண்டும். மொழிபெயர்ப்பின் இயல்பு, மொழிபெயர்ப்பில் கையாளப்படும் கோட்பாடுகள், உத்திகள், நெறிமுறைகள் ஆகியவை பற்றிய அறிவும் பெற்றிருத்தல் இன்றியமையாதத் தகுதிகளாகும். மொழிபெயர்ப்பு என்றாலே சொல்லுக்குச் சொல் என்ற கருத்து மாறி, மூலத்தின் அமைப்பினை முழுமையாக புரிந்துகொண்டு பின் சூழலுக்கேற்றவாறு மொழிபெயர்ப்பு அலகுகளை வகுத்துக்கொண்டு மொழிபெயர்க்கும் காலத்திற்கு வந்துவிட்டோம். சொற்களின் பயன்பாடு மற்றும் இலக்கண உறவுகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு மொழிபெயர்ப்பைப் பெறும்மொழியில் தர முற்படவேண்டும்.

4.1.8 அறிவியல் பார்வை

ஒரு மொழிபெயர்ப்பாளனுக்கு இருக்க வேண்டிய தகுதிகளில் மிக முக்கியமானது அறிவியல் பார்வை. மொழிகளையும், மக்களையும், கலாச்சார பண்பாட்டுக் கூறுகளையும் மதித்து அவற்றின் மாற்றங்களை வெறுப்பு விருப்புக்கு இடமின்றி ஏற்றுக்கொள்ளும் பரந்த மனத்தை பெற்றிருக்க வேண்டும். ஒவ்வொரு மொழிகளுக்குள்ளும் இயல்பாக புதைந்து கிடக்கும் பண்புகளையும் தனிச்சிறப்புத் தன்மைகளையும் அறிவியல் நுட்பத்துடன் ஆய்வு செய்யக்கூடியத் திறனை பெற்றிருக்க வேண்டும்.

4.1.9 ஆக்கத்திறன்

மொழிபெயர்ப்பாளன் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபடும்பொழுது அம்மொழியில் சிறந்த ஆக்கத்திறனையும் (Creativity) தன்னாக்கத் திறனையும் (Originality) பெற்றிருக்க வேண்டும்.

4.1.10 நிகரன்களைக் கண்டறிதல்

மொழிபெயர்ப்பில் பொருத்தமான நிகரன்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவதில்தான் ஒரு மொழிபெயர்ப்பாளனது வெற்றி பொதிந்து கிடக்கிறது. சரியான நிகரன்களைத் தேர்ந்தெடுப்பதில்தான் மொழிபெயர்ப்பாளனது மொழித்திறன், மதிக்கூர்மை அடங்கியிருக்கிறது. உருபனுக்கு உருபன் பதிலியாதல், சொல்லுக்குச் சொல் பதிலியாதல், தொடருக்குத் தொடர் பதிலியாதல், வாக்கியத்துக்கு வாக்கியம் பதிலியாகுதல் என மொழிபெயர்ப்பு நிகரன்களை தேர்வு செய்வதில் நிகர்மை அளவு (Scale of Equivalence) தெளிவாக அறிந்திருக்க வேண்டும்.

4.1.11 சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் திறன்

மொழிபெயர்ப்பாளன் தான் மேற்கொள்ளும் மொழிபெயர்ப்பில் நேரும் சிக்கல்கள் மற்றும் அதற்குண்டான தீர்வுகளை நேர்கொள்ளும் திறனை பெற்றிருக்க வேண்டும். ஒரு மொழிபெயர்ப்பு தரமானது என்று பேசுகின்றபோது அம்மொழிபெயர்ப்பாளரின் மொழிப்புலமை, உரை வழங்கும் ஒரு குறிப்பிட்ட துறை பற்றிய அறிவு, மொழிபெயர்ப்புச் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் திறன், உள்ளத்தின் கற்பனை வளம் ஆகியவற்றைச் சார்ந்தே மொழிபெயர்ப்பின் தரம் அமைந்துள்ளது எனலாம்.

4.2 மொழிபெயர்ப்புக்கான பயிற்சி

மொழிபெயர்ப்பாளர்களை உருவாக்குகின்ற சிறந்த பணியினை ஜெனிவாவில் "The School of Interpreters" என்ற நிறுவனம் செய்து வருகின்றது. இது போன்ற பயிற்சியோ, பள்ளியோ நம் நாட்டில் இல்லை என்றே சொல்லலாம். சோவியத் யூனியனில் மொழிபெயர்ப்புப் பணிக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. உலக முழுவதுமாக 46 அயல் மொழிகளில் ஆண்டொன்றுக்கு சுமார் 1400 நூல்கள் மொழிபெயர்க்கப்படுகின்றன. தமிழில் மட்டும் சுமார் 30 தலைப்புகளில் நூல்கள் வெளியிடப்படுகின்றன. இதன் மூலமாக அந்நாட்டில் மொழிபெயர்ப்புக்குக் காட்டப்படும் முக்கியத்துவத்தை நாம் காணமுடிகிறது.

புதுடெல்லியில் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஒரு பகுதியாக செயல்படும் "The Scool of foreign languages" என்ற நிறுவனத்தின் மூலம் 18 மாத மொழிபெயர்ப்புப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இது முழுக்க முழுக்க Interpreter-களுக்கான பயிற்சி வகுப்பாகும். ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் முதுநிலை வரை மொழிபெயர்ப்பு முக்கிய பாடமாக உள்ளது. தமிழகத்தைப் பொருத்தமட்டில் தலைமைச் செயலகத்திலும் உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திலும், ஆட்சிமொழி ஆணையத்திலும் மொழிபெயர்ப்புத் துறைகள் உள்ளன. மேலும், தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தில் மொழிபெயர்ப்புத் துறை என்ற ஒரு துறையே இயங்குகின்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழத்திலுள்ள மொழியியல் உயராய்வு மையத் துறையில் பயனாக்க மொழியியல் மற்றும் மொழிபெயர்ப்பியல் (M.A., Applied Linguistics & Translation Studies) என்ற முதுகலைப் பட்ட வகுப்பும், முதுகலை பட்டய வகுப்பும் (PG Diploma in Translation) நடந்து வருகிறது. மேலும், அண்ணாமலைப் பல்கலைக்கழக தொலைதூரக் கல்வி இயக்கத்தின் மூலமாக முதுகலை (M.A. Translation Studies) மொழிபெயர்ப்பில் பட்ட வகுப்பு நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

4.3 மூலநூல் குறித்து மொழிபெயர்ப்பாளன் அறிய வேண்டியது

"All Translation is a Compromise – the effect to be literal and the effort to be idiomatic" என்ற பெஞ்சமின் ஜோவாட் கூற்றினை இங்கு நினைவு கூறுவது நல்லது. ஒரு மொழிபெயர்ப்பாளன் மொழிபெயர்ப்புப்

பணியில் ஈடுபடுவதற்கு முன்பு மூலநூல் குறித்து மொழிபெயர்ப்பாளன் கீழ்க்காணும் வினாக்களை மனதில் கொள்ளவேண்டும். முதலாவதாக

'ஆசிரியர் என்ன சொல்கிறார்?',

இரண்டாவதாக,

'அவர் என்ன கருதுகிறார்?',

மூன்றாவதாக,

'அவர் எதை எப்படி கூற முயன்றிருக்கிறார்?', இவ்வினாக்களின் மூலம் மொழிபெர்ப்பாளன் மூலமொழிப் பற்றிய அறிவினை மொழிபெயர்ப்பதற்கு முன் பெறமுடியும்.

4.4 ஆளுமைத் திறன்

அனைத்துத் திறமைகளிலும் மிக முக்கியமானது ஒரு மொழிபெயர்ப்பாளன் மொழியின் ஆளுமைத்திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். அலெக்ஸாண்டர் சேவிட்சர் அவர்களின் கூற்றினை இவ்விடத்தில் நினைவு கூறவது சாலப்பொருத்தமுடையதாகும். "An other important factor affecting the process and result of translation is the personality of translator himself as one of the participants in the interlingual communication act".

4.5 மொழிபெயர்ப்பாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய சில முக்கியக் கருத்துக்கள்

மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்ப்பதற்கு முன்னர் சில கருத்துக்களை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

1. மூலமொழியை ஒரு முறைக்கு இரண்டுமுறை விரைவாக முழுக்கப் படித்து விடவேண்டும். இதனால் அம்மொழியாசிரியர் சொல்ல வந்த பொருள், கருத்து, நடை ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும். மேலும், சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய இடங்களையும் இனங்கண்டு கொள்ள முடியும்.

2. மொழிபெயர்க்கப்பட வேண்டிய புதிய சொற்கள் ஏதேனும் இருப்பின் அவற்றின் பயன்பாட்டுச் சூழலை அறிந்து மொழிபெயர்க்க முயலவேண்டும்.

3. மொழிபெயர்ப்பின் போது அகராதியைப் பயன்படுத்தலாம், அகராதியில் ஒரு சொல்லுக்கு பல சொற்கள் பொருள் தரும் நிலையில் சொற்களின் சூழலுக்கேற்ற பொருளைத் தேர்வு செய்து, அத்தொடரின் சூழலுக்கேற்றவாறு பயன்படுத்தலாம். இது பொருள் மயக்கத்தைத் (Ambiguity) தவிர்க்க

உதவியாக இருக்கும்.

4. அறிவியல், தொழில்நுட்பவியல் துறை சார்ந்த செய்திகளை மொழிபெயர்க்கும்போது அந்தந்தத்துறை சார்ந்த அகராதியைப் பயன்படுத்துவது மிகவும் நல்லது. மேலும், அந்தந்தத்துறை சார்ந்த அறிஞர்கள், வல்லுநர்களை நாடி சந்தேகமற சொற்பொருளைத் தெளிவுப்படுத்திக் கொண்டு மொழிபெயர்ப்பது மிகச் சிறந்தது,

5. மொழிபெயர்ப்பில் தேவைப்பட்டால் மேற்கோள் நூல்களை (Reference Books) பயன்படுத்தலாம். மேலும், சொற்களின் பொருள் விளக்கத்திற்கு அடிக்குறிப்பிட்டு விளக்கவும் செய்யலாம்.

6. பெயர்ச் சொற்களை ஒலிபெயர்க்கும்போது அவற்றிற்கான ஒலிக்கட்டமைப்பினைத் தெளிவாக தெரிந்துக்கொண்டு ஒரே மாதிரியான ஒலியமைப்பினை மாற்றாமல் பயன்படுத்த முயலவேண்டும்.

7. சொல்லாக்கத்தின் போது கூடுமானவரை அச்சொல்லுக்கு தம்மளவில் விளக்கமுடைய (Explanatory Equivalence) நிகரன்களாக அமைப்பது சிறப்பானதாகும்.

8. அறிவியல் மொழிபெயர்ப்பில் முதலில் செயல்முறை சார்ந்த பகுதியை (Experiment Part) மொழிபெயர்த்துவிட்டு பின்பு கோட்பாடு சார்ந்த பகுதியை (Theoretical Part) மொழிபெயர்ப்பது எளிமையுடையதாக இருக்கும்.

9. மொழிபெயர்ப்பில் எண்கள், குறியீடுகள் ஆகியவற்றை மொழிபெயர்க்கும்போது கவனமாக மொழிபெயர்க்க வேண்டும்.

10. UNESCO போன்ற சுருக்கக் குறியீட்டுச் சொற்களை ஒலிபெயர்ப்புச் செய்யலாம். அடைப்புக் குறிக்குள் அதன் விளக்கத்தைச் சுட்டினால் படிப்போர்க்கு எளிமையாக இருக்கும்.

மொழிபெயர்ப்பு என்பது ஒரு பயனுள்ள பணி என்பதில் சந்தேகம் இல்லை. மொழிபெயர்ப்பு என்றாலே அது ஒரு சிக்கலான பணி என்று தெரிந்தவர்கள் கூட அப்பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள தயக்கம் காட்டுகின்றார்கள். காலபோக்கில் துணிந்து மொழிபெயர்ப்புப் பணியினை மேற்கொண்டோர்கள் யாவரும் சலைத்தவர்களே அல்ல. மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளர்களின் பட்டியலில் இடம் பெற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். மொழியாளர்கள் மொழிபெயர்ப்புப்பணியில் ஈடுபடும்போதுதான் மொழியியல் மற்றும் மொழிக் கூறுகளின் இலக்கண, இலக்கியத் தன்மைகள், அவை உணர்த்தும்

பொரு..ரின் கணபரிமானஙகளைத் தெளிவாகஅறிந்து கொள்ள முடியும். இவ்வாறாக, மொழிபெயர்ப்பாளர்கள் சிக்கல்களின் கனபரிமாணங்களை அடையாளம் கண்டுகொண்டு அவற்றை மேற்கொள்ளும் வழிமுறைகளையும் பட்டியலிட்டு தந்தால்தான் மொழி மற்றும் மொழிபெயர்ப்புக் கோட்பாடுகளை உருவாக்கி, அவற்றை ஆய்வு செய்ய வழிவகுக்கலாம்.

இயல் - 5

இலக்கிய மொழிபெயர்ப்பு

5. இலக்கிய மொழிபெயர்ப்பு

இலக்கிய மொழிபெயர்ப்பை அவ்வளவு எளிதாக மொழிபெயர்ப்பு செய்ய முடியாது. எனவேதான் இலக்கியத்தை முழுமையாக பயின்று அறிந்த ஒரு இலக்கிய மொழிபெயர்ப்பாளனே இலக்கியத்தை மொழிபெயர்க்க வேண்டும் என்று அறிஞர்கள் கூறுவர். இலக்கியத்தை மொழிபெயர்க்கின்றவர்கள் புதிய மொழியில் கவிஞராகவும் இலக்கியவாதியாகவும் ஆகின்றனர். (It has been said that the translators of literature and poetry are also eminent literacy critic and poets in the new language).

இலக்கிய மொழிபெயர்ப்பில் குறிப்பாக கவிதையை மொழிபெயர்க்கின்ற பொழுது ஏற்படும் சிக்கல்கள் பற்றி டாக்டர்.கே.ஆர்.சீனிவாச அய்யங்கார் கீழ்காணுமாறு குறிப்பிடுகின்றார். "Poetry by the very nature is untranslatable, ideas can be translated from language to language, but poetry is the idea touched with the magic of phrase and ineantatory music. Competent translation can, however, play the good broker between the poet and the reader, and surpassing the more prose of statement can given intimations of the poet's sovereign utterance. Good translation can create trust, and it can stimulate interst".

இக்கருத்தைக் கவனமாக ஆராய்ந்து பார்த்தால் முற்றிலும் தகுதி படைத்தவர்களே இலக்கியங்களை கவிதைகளை மொழிபெயர்க்க முடியும் என்பது உறுதியாகத் தெரிகிறது. சோவியத் மொழியாளரது கருத்தும் சொற்பொருள் நோக்கில் ஒப்பு நோக்கத்தக்கதாக அமைகிறது. "Poetic translation lays bare the full complexity of the taste of combining semantic and expressive adequacy in a single art of translation".

தமிழில் இதுவரை சுமார் 1400 கவிதை நூல்கள் அரபு, ஆங்கிலம், இந்தி, கன்னடம் குஜராத்தி சிங்களம் சீனம் ஜெர்மன், தெலுங்கு, பல்கேரியன், பாரசீகம், பிராகிருதம், பாலி, மராத்தி, மலையாளம், ருஷ்யன், லத்தீன். பெங்காலி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டிருக்கின்றன. இதைப்போலவே தமிழிலிருந்து பிறமொழிகளுக்குச் சென்றிருக்கின்றன. அவற்றுள் முன் நிற்பது திருக்குறள். இது இருபத்தி ஐந்து மொழிகளில் நூற்றியிருபத்திரண்டு மொழிபெயர்ப்புகளைப் பெற்றிருக்கிறது.

ஆங்கிலத்தில் மட்டும் நாற்பத்தொன்பது மொழிபெயர்ப்புகள் உள்ளன. பாரதியின் பாடல்கள் ஆங்கிலத்தில் பதினைந்துக்கும் மேற்பட்ட மொழிபெயர்ப்புக்கள் உள்ளன. சிலப்பதிகாரம், கம்பராமாயணம், குறுந்தொகை, திருவாசகம் போன்ற பழைய இலக்கியங்களும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளன. வடஇந்திய மொழிகலுள் வங்காளம் இரவீந்திரநாத் தாகூர் மூலம் பல ஆக்கங்களை அளித்து தமிழுக்கும் தமிழ் மண்ணுக்கும் வளம் சேர்த்துள்ளது மொழிபெயர்ப்பு என்றால் மிகையாகாது.

5.1 கவிதை மொழிபெயர்ப்பு

பொதுவாக, இலக்கியத்தில் உணர்ச்சிகளுக்கு இடம் உண்டு, ஐம்புலன்களுக்கான உணர்வுகளாக கற்பனைக் காட்சிகளை அனுபவிக்கச் செய்யும் பல்வேறு வகைப் படிமக் காட்சிகளும் (Imagries), முருகியல் இன்பத்தை (Aesthetic pleasure) மிகுவிக்கும் சந்த, அணிநயங்களும் வாசகர்களை வியந்து இன்பத்தில் திகைக்கச் செய்யும் சொல்லாட்சிகளும் கவிதை இலக்கியத்தின் தனிக்கூறுகளாகும். கவிதை என்பது 'தெளிவாக திறன்படக் கூறும் மொழியால் ஆக்கப்பட்ட ஒரு கலை' (Poetry is the art of articulate language) என்பார் கால்ரிட்ஜ். "கவிதை என்பது சிறந்த சொற்களாலும் செம்மையான சொற்றொடர்களாலும் செழுமை வாய்ந்த வாக்கியங்களாலும் உள்ளத்தைத் தொட்டு நிற்கும்".

உணர்வுதரும் உள் அமைப்புக்களாலும் இசை நயம்பட யாப்பு உருவத்துடன் காணப்படும் ஒரு "செஞ்சொற் கலையாக்கம்" என்பார் அகத்தியலிங்கம் (1998) இந்நிலையில் கவிதையின் முருகியல் இன்பத்தோடு உருவ ஆக்கத்தில் மொழியமைப்பின் (Linguistic Structure) பங்கும் அளப்பரியது. இந்நிலையில் கவிதையை மொழிபெயர்ப்பது என்பது இயலாது என்ற கருத்து பலரிடமும் நிலவியது. பிறகு கவிதையை உரைநடையாக மொழிபெயர்க்கலாம் என்று கருதினார்கள். ஆனால் அவ்வாறு மொழிபெயர்ப்பது என்பது கவிதையின் பொருளை வேண்டுமானால் வடித்துத் தரலாம். அதிலுள்ள நயத்தையும் இன்பத்தையும் வாசகர்கள் உணர முடியாது. உயிரோட்டமும் இருக்காது என்று கருதலாயினர். கவிதையை மொழிபெயர்க்கும் போது கவிதையின் மொழிக்கூறுகள் தான் கவிதைக்குச் சிறப்பு சேர்க்கின்றன. ஆகவே, மொழிபெயர்ப்பாளன் கவிதை மொழிக்கூறுகளை பெறும்மொழியில் தேட வேண்டியது

அவசியமாகிறது. அதற்கு மொழிபெயர்பாளன் ஒரு கவிஞனாக இருந்தால் மொழிபெயர்ப்பு எளிமையாகிவிடும். கவிதை மொழிபெயர்ப்பாளன் ஒரே நேரத்தில் படைப்பாளனாகவும் மொழிபெயர்ப்பாளனாகவும் செயல்படுகின்ற இரட்டை பொறுப்புக்கு ஆளானவனாகிறான். எனவே, கவிதை மொழிபெயர்ப்பும் ஒரு புதுபடைப்பே (recreation) ஆகும். இங்கு மூலத்தின் கருத்தினை கூட்டவோ, குறைக்கவோ செய்வது முழுமையான மொழிபெயர்ப்பாகாது. அது தழுவல் (Adaptation) ஆகிவிடும். எனவேதான் கவிதை மொழிபெயர்ப்பினை மூலத்தைப் பெயர்த்தெடுத்தல் (Transplantation) என்றும், தோற்றத்தையும், தன்மையையும் முற்றிலுமாக மாற்றுதல் (Transmofigration) என்றும் கூறுவர்.

சமயப்பணி தொடர்பாக தமிழகம் வந்த வெளிநாட்டு பாதிரிமார்கள் தமிழ்மொழியைக் கற்று திருக்குறளை உலகறியச் செய்யும் வகையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தனர். அவர்களில் ஜி.யு.போப், ஜான் லான்ரஸ், எல்லிஸ் குறிப்பிடத் தக்கவர்கள். சென்ற நூற்றாண்டில் செய்யப்பட்ட அந்த மொழிபெயர்ப்புக்கள் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் 1958 இல் முதன் முதலில் தமிழகத்தில் வெளியிடப்பட்டு பல பதிப்புக்களை கண்டெடுத்தது.

திருக்குறள் என்ன நோக்கத்திற்காக மொழிபெயர்க்கப்பட்டது என்பதை ஜி.யு.போப் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

"It is primarily intended to make classical Tamil easier to English students, while to native students it may afford means for a more comprehensive and fruitful study of their greatest classic author who has song of so many topics, musaco, contingenous cuvetalepose", touching all thing with poetic grace.

"That this publication may be useful is promoting the real study of Tamil. and so help those who go to South India as officers of Govt., or as missionaries, better to understand the mind of the people among whome they live and work, is my one desire in sending it fourth".

இல்வாழ்க்கை

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பார் துணை (மூலமொழி) (42).

Domestic Life

To anchorities, to indigent, to those who'ue passed away,

The man for household virtue famed is needful held and stay.

- (பெறும்மொழி)

- Rev.Drew.

On Domestic life

Domestic virtue is to him ascribed,

Whose care be friends the pious and the poor,

And aids departed souls

- (பெறும்மொழி)

- F.N.Ellis

'துறந்தார்' என்ற சொல்லுக்கு 'anchorities', 'forsaken', 'pious' என மூன்று சொற்களிலும்,

'துவ்வாதார்' என்பது 'indigent', 'poor', எனவும்,

'இறந்தார்' என்பது 'Passed away', 'the dead', 'deoarted souls' எனவும்,

'இல்வாழ்வான்' என்பதை 'Household', 'domestic virtue' எனவும் மொழிபெயர்க்கப்பட்டிருப்பது ஆழ்ந்து நோக்குதலுக்குரியது.

இதே குறளைத் தமிழரான வ.வே.சு. அய்யர் கீழ்கண்டவாறு மொழிபெயர்ப்பு செய்துள்ளார்.

The householder is the friends of the pitris and the destitute, and of those who have renounced the world.

'ருபயாட் ஓமர் கயாம்' மொழிபெயர்ப்பு ஐரோப்பிய நாடுகளில் சிறந்து விளங்கியதாகும். அதற்கு இணையான காப்பியங்கள் இன்னமும் உருவாகவில்லை எனலாம். கோவிந்த திர்த்தா என்ற பெர்சியன் (Persian) இலக்கிய அறிஞர் ஆங்கில மொழியிலிருந்து முழுக்க முழுக்க மூலமொழியைத் தழுவிய மொழிபெயர்ப்பினை செய்வதில் ஈடுபட்டார். கவிதைகளில் உள்ள தத்துவக் கருத்துக்களையும் பாடல் நயங்களையும் சிதைவுறாமல் பெறும்மொழியில் தர மொழிபெயர்ப்பாளன் தன்னை ஆட்படுத்திக் கொள்ள முயலவேண்டும். ஆனால் பெரும்பாலான கவிதைகளை மொழிபெயர்க்கும்போது

மொழிபெயர்ப்பாளன் கருத்துச் சுவை மாறாமல் மீண்டும் ஒரு கவிதையாகவே படைத்துவிடுகிறான். இந்த நிலையில் ஒப்பிலக்கியத் துறையில் (Comparative literature) கவிதை/இலக்கிய மொழிபெயர்ப்புகள் ஒவ்வொன்றும் புதுப்புது படைப்புகளாக அமைந்துவிடுகின்றன. இது வாசகர்களுக்கு நல்ல மொழிபெயர்ப்பினை வழங்குவதாக ஆகாது. ஆகவே ஒப்பிலக்கியத் துறையை பொருத்தமட்டில் ஆய்வுக்குரிய வகையில் பொருள் மாற்றம் இல்லாத மொழிபெயர்ப்புகள் வரவேற்கப்படுகின்றன.

தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ருபயாட் ஓமர் கயாம் கவிதையை பார்க்கும்போது மூன்று விதமான மொழிபெயர்ப்பினை அறியமுடிகிறது.

1. கவிமணி - மூலத்தைப் பெயர்த்தெடுத்தல்

   (Transplantation in the TL Text)

2. ச.து.சு.யோகி - பாடலின் கருத்தை மட்டும் மாற்றம் செய்துள்ளார்

   (Transference of sense)

3. சாமி சிதம்பரனார் - முடிவுறாத மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளது.

A boof of vense undemeath the bough
A jug of voine and a loaf of bread and thou
Beside me singing in the wildemess,
Oh. wilderness were paradise now!

Kavimani

வெயிற்கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவியுண்டு
கவசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுண்டு
வையம் தரும் இவ்வணமின்றி
வாழும் சொற்கம் வேறுண்டோ?

மாதவிப் பூங்கொடி நிழலில்
மணிக்கவிதை நூனுலான்றும்
தீதரு செந்தேன் மதுவும்
தீங்கனியும் பக்கத்தில்
காதலில் நீ பாட்டிசைத்து
கணிவோடு கூடுவையேல்
ஏதுமினிக் கவலையில்லை
இதுவன்றோ பரமபரம்?

சா. து. சு. யோகி.

.2 கவிதையை உரைநடையில் மொழிபெயர்க்கலாமா?

மூலமொழிக் கவிதையைப் பெறும்மொழியில் கவிதையாகவே மொழிபெயர்ப்பதுதான் சிறந்தது என்ற பொதுவான கருத்து நிலவி வந்தாலும், கவிதையை உரைநடையிலும் மொழிபெயர்க்கலாம் என்ற கருத்தினையும் சில சமயங்களில் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. இந்நிலையில் மொழிபயிற்சியில் வாசகர்கள் வேறுபடுகிறார்கள். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் கூட கவிதைகளையும், சங்க இலக்கியப் பாடல்களையும் உரைநடையிலிருந்தால் கற்பதற்கு எவ்வளவு எளிமையாக இருக்கும் என எண்ணுகிறார்கள். ஏனெனில், சங்கப் பாடல்கள் அனைத்தும் செய்யுள் நடையில் இருக்கின்றன. அவற்றை புரிந்துக்கொள்ள வேண்டுமானால் உரை ஆசிரியர்கள் தேவை. ஆசிரியர்களை வைத்துக் கற்றுக்கொள்ள வேண்டுமானால் கால அவகாசம், வசதி வாய்ப்பு இவைகளெல்லாம் வேண்டும். இதுபோன்ற சூழலில், கம்பராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்கள் உரைநடையில் கிடைத்தால் வாசக பெருமக்கள் மிகுந்த பயனை அடைவர். கிரேக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில், அந்நாட்டுக் கவிதை/இலக்கியங்களை அதிகமான வாசகர்கள் உரைநடையில்தான் படிக்க ஆசைப்படுகின்றனர். படிப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகும். இலக்கியத்தைப் படித்து இன்புறத் துடிக்கும் வாசகப் பெருமக்களின் பார்வைக்கு உரைநடை மொழிபெயர்ப்பு உதவும். கவிதை/இலக்கிய மொழிபெயர்ப்புகளில் மூலமொழி கவிதைக் கூறுகள் சிந்தாமல் சிதறாமல் உரைநடையில் மொழிபெயர்த்து மூலத்தின் கருத்துக்கு இசைந்து கொடுக்குமளவிற்கு இனியத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுப்பது மிகவும் சிறப்புடையதாகும்.

உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியரின் நாடகங்கள் பல தமிழில் வந்துள்ளன. ஒவ்வொரு நாடகத்திற்கும் பல்வேறு மொழிபெயர்ப்புக்கள் உள்ளன. 'ஜூலியஸ் சீசர்' எனும் நாடகத்தை மூவர் மொழிபெயர்த்துள்ளனர். கலாநிலையம் சேஷாசலம், கவிஞர் அ.க.ஆதித்தனார். பொற்கிழிக் கவிஞர் என அனைவராலும் போற்றப்படும் கவிஞர்.அரு.சோமசுந்தரம் ஆகியோர்கள் ஆவர். இந்நிலையில், கலாநிலையம் சேஷாசலம் எழுதிய மொழிபெயர்ப்புப் பகுதியில் காணப்படும் ஒரு பகுதி...

மூலமொழி/பெறும்மொழி

Antony : I shall remember, when caesar says 'Do this; it is performed.

ஆண்டனி : நான் மறவேன் 'இது செய்' என்று ஸீஸர் சொல்லுமளவிலேயே அது செய்து முடிந்து விடுகின்றதாகும்.

Caesar : Set on, and leave no ceremony out (Music)

ஸீஸர் : புறப்படுங்கள், சடங்குகளில் ஒன்றையும் விட்டுவிட வேண்டா (வாத்தியங்கள் முழங்குகின்றன)

Soothsayer : Caesar!

நிமித்தகன் : ஓ, ஸீஸர்ஸ

Caesar : Ha! Who calls?

ஸீஸர் : ஹ! என்னைக் கூப்பிடுகின்றது யார்?

Caesar : Who is it in the press that calls on me? O hear a tongue shriller than all the music, Cry Caesar speak. Caesar is twirled to hear.

ஸீஸர் : இந்தக் கூட்டத்தில் என்னைக் கூப்பிடுகின்றது யார்? இவ்வாத்தியங்களை எல்லாம் விட 'கீச்' என்று ஒரு குறல் 'ஸீஸர்' எனக் கத்தக் கேட்கிறேன். சொல் கேட்பதற்கு ஸீஸர் திரும்பியிருக்கின்றான்.

எடுத்துக்காட்டாக :-

Soothsayer : Beware the ideas of march.

நிமித்தகன் : மார்ச்சுமதத்தியைக் கருத்தில் வைத்துக் காத்துக்கொள்.

Caesar : What man is that?

ஸீஸர் : எவன் அவன்?

Brutes : A Soothsayer bids you beware the ideas of Maraca.

ப்ரு	:	மார்ச்சுமத்தியைக் காத்துக்கொள்ளும்படி உனக்கோர் நிமித்தகன் கட்டளையிடுகிறான்.
Caesar	:	Set him before me. let me see, this face.
ஸீஸர்	:	அவனை என்முன் நிறுத்துங்கள். அவன் முகத்தைப் பார்க்கக்கூடும்.
Cassias	:	Fellow come from the throng look up on Caesar.
காஸ்க்கா	:	ஏ, கும்பலிலிருந்து வா. ஸீஸரைப் பார்.
Caesar	:	What says than to me now? Speak once again.
ஸீஸர்	:	எனக்கு இப்பொழுது நீ என்ன இயம்ப விரும்புகிறாய்? மற்றும் ஒருமுறைச் சொல்.
Soothsayer	:	Beware the ideas of march.
நிமித்தகன்	:	மார்ச் சுமத்தியைக் கருத்தில் வைத்துக் காத்துக்கொள்.
Caesar	:	He is a dreamer. let us leave him, past (Sennet Exeunt all but brutes and cassias.
ஸீஸர்	:	கனவு காண்கின்றவர்களில் ஒருவன் இவன். இவனைவிட்டு செல்லுங்கள்.

(ப்ருட்டசையும் காஸ்ஸியயையும் தவிர ஏனையோர் போய் விடுகின்றனர்)

இம்மொழிபெயர்ப்பில் மூலமொழிக்குள்ள உணர்வுக் கூறுகளை முழுமையாக பெறும்மொழியில் இழப்பு ஏதுமில்லாமல் கொண்டு வந்திருப்பது மொழிபெயர்ப்பாளரது முக்கிய நோக்கமாக உள்ளது.

5.3 கட்டுரைகள்/கவிதைகள்

இவ்வகை மொழிபெயர்ப்பில் மூலத்தின் சுவை மாறுபாடு அடையாமல் விறுவிறுப்புடன் மொழிபெயர்ப்பு செய்யவேண்டும். தொடருக்குத் தொடர் பதிலியாதல், சொற்றொடருக்குச் சொற்றொடர் பதிலியாதல், சொல்லுக்குச் சொல் பதிலியாதல் என்ற நிகழ்வுகளைத் தவிர்த்து கதையின் தொனியும், சுவைப்பட கூறும் தன்மையும் மொழிபெயர்ப்பாளன் விடுபடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மொழிபெயர்ப்பில் கதையை எடுத்துச் சொல்லும் உத்தியும் நோக்குநிலை மாற்றங்களும் பிழையின்றி அமையவேண்டும்.

5.4 நாடகம்

நாடகத்தை மொழிபெயர்ப்பதில் மொழிபெயர்ப்பாளனுக்கு அடிப்படைச் சிக்கல்கள் உருவாகின்றன. நாடகத்தில் வரும் உரையாடல்கள் கதாப்பாத்திரங்களுக்கு ஏற்றவாறு சொற்கள், தொடர்கள் ஆகியன வட்டார வழக்கு அல்லது மற்றும் பேச்சு வழக்கில் அமைந்திருக்கும். வழக்குகளின் சூழல்களையும், மொழியின் தன்மையையும் மொழிபெயர்ப்பாளன் மிகுந்த கவனத்தில் கொண்டு மொழிபெயர்க்க வேண்டும். மேலும், நாடகங்களில் வரும் பாத்திர அமைப்பு, உறவுமுறைகள் ஆகியவற்றிலும் மிகுந்த கவனம் கொள்ள வேண்டும்.

5.5 விளம்பரங்கள்

இன்றைக்கும் பல மடங்கு வாசகர்களைத் தன் பக்கம் ஈர்த்து வைத்துக் கொள்வது விளம்பரங்கள் என்றால் மிகையாகாது. விளம்பரங்களில் வரும் சொற்றொடர்கள் தொடர்கள் அனைத்தும் மக்களின் உள்ளத்துணர்வுகளை தூண்டும் அளவிற்கு அவற்றின் மொழி நடையும். மொழியமைப்பும் அமைந்துள்ளன. ஆகவே, விளம்பரங்களை மொழிபெயர்ப்பு செய்யும் மொழிபெயர்ப்பாளன் உணர்வுப் பொருள்களுக்கு முதலிடம் தந்து மொழிபெயர்ப்பு செய்ய முயலவேண்டும்.

5.6 மேடைப்பேச்சுக்கள்/சொற்பொழிவுகள்

மேடைப்பேச்சுக்கள் இயல்பாக உள்ளத் துணர்ச்சியைக் கிளர்ச்சியடையச் செய்யும் வண்ணம் அம்மொழிநடை அமைந்திருக்கும். உணர்ச்சிகளை செயல்வடிவமாக மாற்றும் ஆக்கத்திறன் மேடைபேச்சுக்கு உண்டு. ஆகவே, இவ்வகை மொழிபெயர்ப்பில் மூலத்துக்கு இணையாக உணர்ச்சியூட்டும் மொழிக்கூறுகளையும், உணர்ச்சிகளைச் செயல்களாக மாற்றும் செயல்தூண்டும் மொழிக்கூறுகளையும் மொழிபெயர்ப்பாளன் ஆற்றல் மிக்க மொழிநடையில் அமைக்க வேண்டும்.

இயல் - 6

மொழியின் சிறப்பியல்புகள்

6. மொழியின் சிறப்பியல்புகள்

ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ் ஆகிய மொழிகள் இன்று உலகத்தில் மூலைமுடுக்குகளிலெல்லாம் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றன. அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன்பு வரை ஒரு குறிப்பிட்டப் பகுதியில் மட்டுமே பேசப்பட்டு வந்த ருஷ்யமொழி, சோவியத் யூனியனின் நாற்பது கோடி மக்களாலும் பேசப்பட்டு வருவதோடு, அரசியல், பொருளாதாரம், சமூகக் காரணிகளால் இன்று உலகம் முழுவதும் பரவலாகப் பேசப்படுகிறது என்றால், அதற்கு பாலமாக இருந்து செயல்பட்டது மொழிபெயர்ப்புத்தான் என்றால் மிகையாகாது. இந்நிலையில், தமிழ்மொழியின் தொன்மை ஆயிரக்கணக்கான மொழிகளில் ஒன்றாக இருக்க பிறமொழிகளையும் வளர்த்தெடுப்பதற்கான களத்தினை நாம் ஒழுங்குபடுத்தி வைத்துக் கொள்ளவேண்டும்.

தொல்காப்பியர் காலத்திலேயே இதற்கான இலக்கணம் வகுக்கப்பட்டுவிட்டது. நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையுடன், அனைத்து மொழிகளையும் ஏற்றுக்கொண்டு, மேன்மேலும் மொழியை வளப்படுத்திக்கொள்ள நாம் முயல வேண்டும். இன்று அதிகமாக உலகெங்கிலும் பேசப்பட்டு வருகின்ற 2796 மொழிகளில் மிக அதிகமான மக்களால் பேச்சப்பட்டு கொண்டிருக்கிற மொழிகள் வரிசையில் சீனம், உருது, ஆங்கிலம், ஸ்பானிஷ், ருஷ்யன், ஜெர்மன், ஜப்பான், பிரெஞ்சு, இந்தோனிஷியா, போர்த்துகீஸ், அரபு, வங்காளி, இத்தாலி ஆகியன அடங்கும். இந்த வரிசையில் ஆங்கிலம் மூன்றாவது இடத்தை வகித்தாலும் அதற்கெனத் தனிச்சிறப்பு உண்டு. ஏனெனில், ஆங்கில மொழியில் உள்ள சொற்கள், இலக்கியங்கள் ஆகியன அனைத்து மொழிகளின் எண்ணிக்கையையும் தாண்டி வளர்ந்து கொண்டிருக்கின்றன.

ஏறத்தாழ 80,000-க்கும் மேற்பட்ட வேர்ச்சொற்களையும், அதற்கு இணையான சொற்றொடர்களையும் கொண்டது ஆங்கில மொழி 1900 இல் 2,00,000 சொற்களைக் கொண்டிருந்த ஆங்கில மொழி 1967 இல் 6,00,000 சொற்களும், 1997 இல் 10,00,000 சொற்கள் கொண்டிருக்கும் அளவிற்கு வளர்ந்திருக்கிறது. எனவே ஆங்கில மொழிபெயர்ப்பாளன் இக்கருத்தினை மனதிற்கொண்டு ஆங்கில மொழியின் பல்வேறு தன்மைகளையும், சிறப்பியல்புகளையும் தெரிந்து கொண்டு சிறப்பான மொழிபெயர்ப்பிற்கு தன்னை தயார் செய்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

6.1 சொல் வகை

ஆங்கிலத்தில் எட்டு வகைச் சொற்கள் இருக்கின்றன. அவையாவன, பெயர்ச்சொல் (Noun), பிரதிப் பெயர்ச்சொல் (Pronoun), பெயர் உரிச்சொல் (Adjective), வினைச்சொல் (Verb), வினை உரிச்சொல் (Adverb), உருபு இடைச்சொல் (Preposition), இணைக்கும் சொல் (Conjunction), வியப்புச் சொல் (Interjection) என்பனவாகும். ஒவ்வொரு சொற்களும் ஒவ்வொரு குறிப்பிட்ட வேலையைச் செய்கின்றன. சொற்கள் செய்யும் வேலைக்கு ஏற்ப இவ்வகைப்பாடு அமைக்கப்பட்டுள்ளது. ஒரே சொல்லை பல்வேறு வகைகளில் பயன்படுத்தும்போது அச்சொல்லின் பொருள் மாறுபடுகின்றது. எடுத்துக்காட்டாக, 'Double' என்ற சொல் இருமடங்கு (n), இரட்டிப்பான (adj), இரட்டிப்பாக்கு (V), இருமடங்காக (Adv) எனப் பலவகைகளில் பயன்படுத்தப்படுகிறது. மிகுதியாக வழக்கிலுள்ள சொற்கள்

After

Everyone should carefully plan for his after life	(adj)
Soon after. he went to life in Chennai	(adv)
Did they inquire afer me. ask for news of me?	(prep)
I arrived after he had left	(conj)

All

All horses are animals but not all animals are horses	(adj)
They were dressed all in green	(adv)
All I want is peace and quiet	(Pron)
He had lost his all	(n)

இம்முறையில் about, above, bank, before, behind, both, but போன்ற பல சொற்கள் பல வகையில் பயன்படுவனவாகும்.

6.2 பெயர்ச் சொற்களின் பயன்பாடு

பெயர்ச் சொல் ஒருமையில் ஒரு பொருளும் பன்மையில் முற்றிலும் வேறுபட்ட இன்னொரு பொருளையும் தரும் வழக்கு ஆங்கிலத்தில் காணப்படுகிறது.

good - நன்மை goods - சரக்கு
advice - அறிவுரை advices - தகவல்
iron - இரும்பு irons - விலங்கு
force - விசை forces - இராணுவம்

இத்தகு வழக்குகள் தமிழில் இல்லை.

ஆங்கிலத்தில் சில பெயர்ச்சொற்கள் ஒருமையில் ஒரு பொருளும் பன்மையில் இருபொருள்களும் தருகின்றன. அவையாவன.

Custom - பழக்கம் Customs - பழக்கங்கள், சுங்கவரி
Pain - வலி Pains - வலிகள், கவனம்
Quarter - கால்பகுதி Quarters - கால்பகுதிகள், வசிப்பிடம்
Effect - விளைவு Effects - விளைவுகள், சொத்து

இதுபோன்ற வழக்குகள் தமிழில் இல்லை.

ஆங்கிலத்தில் சில பெயர்ச்சொற்கள் ஒருமையில் இருவேறு பொருளும் பன்மையில் ஒரே பொருளும் தருகின்றன.

Light - வெளிச்சம்/விளக்கு Light - விளக்குகள்
People - நாடு/மக்கள் Peoples - நாடுகள்

மேலும் சில ஆங்கில பெயர்ச்சொற்கள் பன்மையில் மட்டுமே வழங்குகின்றன.

Trousers
Spectacles
Assets

இவற்றைத் தமிழில் ஒருமையாகவே பயன்படுத்துகிறோம்.

ஆங்கிலத்தில் தொகைப் பெயர்கள்/கூட்டுப் பெயர்கள் (Collection Nouns) ஒருமையாக இருந்தாலும் பன்மை வினையையே ஏற்கும்.

These ponltry one mine.

These one my cattle.

ஒன்று, இரண்டு என்று எண்ண முடிந்த ஒருமைப் பெயர்களுக்கு முன் a, an, the போன்ற சுட்டுப் பெயரடைகளுள் (Demonstrative adjectives/articles) ஒன்றைச் சேர்த்து எழுதுவது ஆங்கிலத்தில் பொது வழக்கு.

This is a Pen.

This is an Umberalla.

This is the book which I searched for.

இவ்வழக்குத் தமிழில் இல்லை. இதன் காரணமாக ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கும்போது சில நீக்கங்களும் (some deletions) தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கும்போது சேர்க்கைகளும் (some additions) தவிர்க்க முடியாதவையாகின்றன. இது பெரும்பாலும் பயன்பாட்டுக் கூறுகளின் (Functional elements level) அளவிலேயே நடக்கின்றது எனலாம்.

ஆங்கிலத்தில் ஒரு பெயர்ப் பதிலியானது (Pronoun) தொகைப் பெயருக்குப் (Collective Noun) பதிலாக வந்தால் அது ஒருமையாக அமையவேண்டும்.

The crew mutinied in the middle of the voyage and murdered the officers.

The jury gave the verdict.

இது போன்றவிடங்களில் தமிழ்த் தொகை பெயர்களைப் பன்மையாக்கி பன்மை வினைக்கொண்டு வாக்கியத்தை முடிக்கிறது.

பாதிப்பயணத்தில் மாலுமிகள் கலகம் செய்து தங்கள் அதிகாரிகளைக் கொலைச் செய்தனர்.

ஜாரிகள் தங்கள் தீர்ப்பைக் கூறினர்.

Who, which, that என்ற தழுவுப் பெயர்ப் பதிலிகளையும் (Relative pronouns) who என்பதன் வேற்றுமை ஏற்கத் திரிந்த வடிவங்களாகிய whose, whome ஆகியவற்றையும் பற்றி ஒரு மொழிபெயர்ப்பாளன் அறிந்து வைத்திருக்க வேண்டும். இது ஆங்கிலம், தமிழ் மொழிபெயர்ப்புக்கு இன்றியமையாததாகும். ஏனெனில், இச்சொற்களைப் பயன்படுத்தி ஆங்கிலத்தில் நீண்ட பின்னல் வாக்கியங்கள் அமைகின்றன. இவற்றுக்கு நேரான நிகரன்கள் தமிழில் இல்லை எனலாம். ஆனால், இவை உணர்த்தும் கருத்துக்களை மிகத் துல்லியமாக அறிந்து கொள்ளலாம்.

This is the child *who* wanted to see you.

உன்னைப் பார்க்க விரும்பிய குழந்தை இதுதான்.

This is the boy *whose* brother studied here later

இந்தப் பையனின் (சகோதரன்) அண்ணன் இங்குப் படித்தான்.

Vivekananthar is the sage *whom* I admire.

நான் போற்றும் ஞானி விவேகானந்தர்.

This is the *house* which was built by my uncle.

இது என் மாமா கட்டிய வீடு.

Take anything *that* you like.

நீ விரும்பும் எதையும் எடுத்துக்கொள்.

ஒரே வடிவம் தன்வினைப் பொருளிலும் இயக்கு வினைப் பொருளிலும் வரும் வழக்கு ஆங்கிலத்தில் காணப்படுகிறது.

The horse walks. He walks the horse.

Birds fly. The boys fly their kites.

இது போன்ற வழக்குகளை மொழிபெயர்க்கையில் மொழிபெயர்ப்பாளன் மிகுந்த கவனமுடன் இருக்க வேண்டும்.

6.3 சொற்றொடர் அமைப்பு

ஆங்கிலச் சொற்றொடர் அமைப்புக் குறித்து ஒரு மொழிபெயர்ப்பாளன் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான், மொழிபெயர்ப்பினை மிகச் சிறப்பாக செய்ய முடியும். சொற்றொடர் அமைப்பினை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரித்து அடையாளம் தெரிந்துக் கொள்ள வேண்டும். ஒன்று முறையானது (formal) மற்றொன்று முறைசாராதது (informal), முதலாவதில் இலக்கிய நடை, அறிவியல் நடை, அலுவலக நடை, கவிதை நடை... என அடங்கும். இரண்டாவது வகையில் பேச்சு வழக்கு, கொச்சை வழக்கு, திசை வழக்குச் சொற்கள் ஆகியவை அடங்கும். முதலில் மொழிபெயர்ப்பாளன் இவற்றையெல்லாம் இனம் கண்டு கொள்ள வேண்டும். இவற்றுக்குச் சமமான நிகரன்களைத் தமிழில் தருவது என்பது மிகச் சிரமமானதாகும். முதலாவதுக்கும் இரண்டாவதுக்கும் உள்ள வேறுபாடு, ஒன்று எழுத்து மொழி, மற்றொன்று பேச்சுமொழி ஆகும். பேச்சுமொழி எழுத்துமொழிக்கு வரும்போதுதான் மொழிபெயர்ப்பில் இடர்பாடுகள் வருகின்றன.

இலக்கிய மொழிபெயர்ப்பில் அணிகலுள் (Figurative speech)க்கு முக்கித்துவம் தரப்பட வேண்டும். இடக்கரடக்கல் (Euphemism), உயர்வு நவிற்ச்சி (Exaggeration), வியப்பு (Exclamation), வஞ்சப்புகழ்ச்சி (Irony), உருவகம் (Metaphore), ஒலிக்குறிப்பு (Onomatopoeia), பழமொழி (Proverb),

உவமை (Simile), குறிப்பு (Suggestion) போன்ற அணிகளைத் தமிழுக்குத் தருகின்றபோது ஆழ்ந்த கவனத்துடன் மொழிபெயர்ப்பாளன் இருக்க வேண்டும்.

6.4 நேர்மாறான வாக்கிய அமைப்பு

தமிழ்மொழி வாக்கிய அமைப்பு, ஆங்கில வாக்கிய அமைப்புக்கு நேர்மாறானது. பயனிலை முன்னதாகவும், செயப்படுபொருள் முடிவிலும் வரும். ஆங்கிலம் - தமிழில் மொழிபெயர்க்கையில் ஆங்கில வாக்கியத்தின் இறுதியிலிருந்து ஆரம்பித்து தமிழ் வாக்கியத்தை அமைக்கிறோம். இவ்வாறு வலது இடதாக மாற்றியமைக்கும் முறையினால் ஏராளமான சிக்கல்கள் உண்டாகலாம். இவற்றையெல்லாம் சமாளித்துப் பொருள் கலையாமல் உணர்ச்சி நயங்கள் கெடாமல் உயிருள்ள நல்லத் தமிழுக்கு மொழிபெயர்த்தல் என்பது அவ்வளவு எளிய காரியமன்று.

6.4.1 சொற்களின் வரிசை அமைப்பு

ஆங்கிலத்தில் S+V+O என்ற வரிசை முறையும் தமிழில் S+O+V என்ற வரிசை முறையும் கடைபிடிக்கப்படுகின்றன. இதனால் ஆங்கிலம்-தமிழ், தமிழ்-ஆங்கிலம் மொழிபெயர்ப்பு வாக்கியங்களில் சொற்களின் இடமாற்றம் (Shift) தவிர்க்க முடியாததாகிறது.

Nilavan met Naveen.

நிலவன் நவினைச் சந்தித்தான்.

வாக்கிய நிலை மட்டுமல்லாது தொடர் நிலையிலும் (Phrase level) சொற்களின் வரிசைமுறை ஆங்கிலத்திலும், தமிழிலும் வேறுபடுகின்றன.

The Indian Constitution come into fore on 29th January 1950

1 2 3

1950 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29 ஆம் நாள்.

3 2 1

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அமலுக்கு வந்தது.

இவ்வாறாக, சொற்களின் வரிசை முறையில் மாற்றம் நிலவுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு மொழிபெயர்ப்பாளன் மொழிபெயர்ப்பு செய்வது நல்லது.

இயல் - 7

அறிவியல், தொழில் நுட்ப நூல் மொழிபெயர்ப்பு

7. அறிவியல் தொழில் நுட்ப நூல் மொழிபெயர்ப்பு

மனித நாகரிகத்தின் மிக முக்கியக் கூறாக அறிவியல் அமைந்துள்ளது. மனித இனத்தின் அனைத்துச் செயற்பாடுகளிலும், அறிவியல் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இணையம் மூலம் உலகத்தின் எந்தக் கோடியில் தனக்கு வேண்டியவர்கள் இருந்தாலும், அவர்களோடு ஒரு நொடியில் தொடர்பு கொள்ள அவனால் முடிகிறது. அவனைப் போலவே ஒருவனைப் படியாக்கம் (Cloning) செய்யும் விந்தையும் நிகழ்ந்து கொண்டு இருக்கிறது. இந்த அறிவியல் தொழில் நுட்ப வேகத்தை, விந்தையைத் தமிழர்கள் அனைவருக்கும் தெரிவிக்க முயற்சிகளும் தமிழக அரசு செய்து கொண்டிருக்கின்றது. அந்த முயற்சிகளின் ஒரு பகுதிதான் அறிவியல்-தொழில் நுட்ப-மொழிபெயர்ப்புப் பணி. இப்பணி காலத்தின் கட்டாயமாகும். பல்வேறு ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வுக் குறிப்பேடுகள் ஆகியன யாவும் ஆங்கில மொழியிலேயே நடக்குக் கிடைக்கின்றன. கல்வியறிவு பெற்ற நகரவாழ் மக்களுக்கு வேண்டுமானால் இக்கருத்து உடனடியாகப் போய் சேரலாம். கிராமப்புற நடுநிலை மற்றும் கீழ்நிலை மக்களுக்கு செய்திகள் போய் சேர வாய்ப்புகள் கிடையாது. கிராமப்புற மாணவர்கள், நகர்புற மாணவர்கள் எனப் பிரித்துணராமல் ஆங்கிலக் கல்வியின் மோகத்தை மக்களிடமிருந்து கலைந்து, உண்மை வாழ்க்கையில் வெளிநாட்டு, உள்நாட்டு அறிவியல் செய்திகளை அறிந்திட, புரிந்திட தமிழக அரசு அறிவித்த மாபெரும் உத்தியாக தமிழ்வழிக் கல்வி முறையினைக் கொள்ளலாம்.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் யாவும் தமிழ்மொழியில் பெயர்த்திடுவோம்.

இறவாக புகழுடைய புது நூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.

அட மண்ணில் தெரியுது வானம்

இது நம் வசப்படலாகாதோ?". . .

என்று பாடிய பாரதியின் கனவுக் கூற்றுகளுக்கு விடியலை படைக்க மொழிபெயர்ப்பு அவசியமாகிறது.

அறிவியல் செய்திகள் பெரும்பாலும் மூலம் (Source) ஆங்கிலமாகும். ஆங்கிலத்திலுள்ள அறிவியல் செய்திகளைத் தமிழில் மொழிபெயர்த்து நம்

நாட்டு மக்களுக்கு வழங்கும் உன்னதமான பொறுப்பினில் இருக்கின்றோம். ஆகவே, அறிவியல் நூல்கள் ஏராளமாக தமிழில் எழுதப்பட வேண்டும். அறிவியல் துறை சார்ந்த 'கலைச்சொற்கள்' நிரம்ப மொழிமாற்றம் செய்யப்பட்டு செந்தரப்படுத்தப்பட வேண்டும். கல்லூரி மற்றும் பள்ளிகளுக்கான அறிவியல் பாட புத்தகங்களைத் தவிர, தமிழில் வருகின்ற அறிவியல் நூல்கள், கட்டுரைகள் மிகமிகக் குறைவு. இந்நிலை நீங்க வேண்டுமானால் மொழிபெயர்ப்புப்பணி என்பது மிக அவசியமானப் பணிகளுள் ஒன்றாம் எனக்கருத வேண்டும்.

7.1 அறிவியல் மொழிபெயர்ப்பை யார் செய்வது

அறிவியல் மொழிபெயர்ப்பைச் செய்யும் மொழிபெயர்ப்பாளன் ஆங்கிலம், தமிழ், அறிவியல் ஆகியவற்றில் புலமை வாய்ந்தவராக இருக்க வேண்டும். மேலும், தமிழ்மொழியின் இலக்கண இலக்கியங்களின் இயல்பு, மரபு, அமைப்பு பற்றி அறிந்த அறிவியல் அறிஞர்களால் 'அறிவியல் கலைச் சொற்க்கள்' அமைக்கப் பெறுவது சிறந்தது.

7.2 அறிவியல் மொழிபெயர்ப்பின் இன்றியமையாப் பண்புகள்

அறிவியல் மொழிபெயர்ப்பின் இன்றியமையாப் பண்புகளாவன:

1. அறிவியலில் சொல்லப்படும் செய்தியே முக்கியம். இங்கு மொழியானது கருத்து வெளிப்பாட்டுக் கருவியாக மட்டும் செயல்படும்.

2. அறிவியலில் ஒரு நிகழ்வு, பொருள், பொருளின் பண்பு போன்றவற்றின் வரைவிலக்கணங்களை மொழிபெயர்க்கும் போது, சொல் இலக்கணமும் மூலத்தின் பொருள் அனைத்தையும் உள்ளடக்கிய பொருட்செறிவும் பேணப்பட வேண்டும் என்பர் சேதுமணி மணியன்.

3. அறிவியல் கலைச்சொற்களை மொழிபெயர்க்கும்போது அவற்றின் வேர்சொற்களைக் கண்டறிவது அவசியமாகும் என்பார் வ.செ.குழந்தைசாமி.

4. அறிவியல் கலைச்சொல்லே அதன் முழுப்பொருளையும் தராது. அந்தத்துறை அறிவின் மூலமே அதன் முழுப் பொருளையும் புரிந்துகொள்ள முடியும். ஆதலால் அது உணர்த்தும் கருத்துக்கேற்றத் சொல்லை மொழிபெயர்க்க வேண்டும் என்பார் வை.சண்முகம்.

5. அறிவியல் கலைச்சொல்லாக்கத்தில் துல்லியமாகப் பொருளை உணர்த்த வேண்டும். செய்திகளைத் தெளிவாகத் தருவதே அடிப்படை நோக்கமாக அமைய வேண்டும்.

6. துறைசார்ந்த சொற்கள் அவற்றிற்கு நேரான ஆங்கிலச் சொற்களுக்கு விளக்கமாக அமையக் கூடாது. ஏற்ற பொருள் தரக்கூடிய இன்னொரு சொல்லாக அமையலாம்.

7. துறைசார் அறிவியல், பொது அறிவியல் என்பன அறிவியல் மொழிபெயர்ப்பில் கவனத்தில் நிறுத்தத் தக்கனவாகும். துறை அறிவியல் என்கிறபொழுது, அறிவியல் மாணவர்களுக்காகப் பயன்படுவது, எழுதப்படுவதாகும். ஆதலால் அறிவியலில் வரும் குறியீடுகள், சமன்பாடுகள், வாய் ஆகியவற்றில் அனைத்துலக மரபை ஏற்றுக்கொள்ளலாம் என்பர், வை.சண்முகம்.

அதாவது அனைத்துலகக் கலைச்சொற்களை அப்படியே ஒலிபெயர்த்துப் பயன்படுத்தலாம் என்ற நிலையும் அறிவியல் மொழிபெயர்ப்பில் பின்பற்றப்படுகின்றன.

அறிவியல் கலைச்சொல்லாக்கம் பலராலும் காலம் காலமாகப் பின்பற்றக் கூடியது. எடுத்துக்காட்டாக விளங்க கூடியது. ஆதலால் அறிவியல் கலைச்சொல்லாக்க மொழிபெயர்ப்பை மிகவும் கவனமாக மொழிபெயர்ப்பாளனால் கையாளப்பட வேண்டும்.

7.3 அறிவியல் மொழிபெயர்ப்பு

அறிவியல் மொழிபெயர்ப்பில் கருத்துக்களே முக்கிய இடம் வகிக்கின்றது. ஆகவே, அறிவியல் மொழிபெயர்ப்பை மூன்று நிலைகளில் பார்க்கலாம்.

7.3.1 கருத்துக்கேற்ற மொழிபெயர்ப்பு

மொழிபெயர்ப்பில் மூலமொழிச் சொல்லுக்கு இணையாக பெறும்மொழிச் சொல்லை நேரடியாக மொழிபெயர்க்காமல் அச்சொல் உணர்த்தும் பொருளுக்கேற்ற சொல்லை தேர்ந்தெடுத்து மொழிபெயர்ப்பது கருத்துக்கேற்ற மொழிபெயர்ப்பாகும்.

நீண்ட தொடர்கள், சிக்கல் நிறைந்த உரை இவற்றை கூட ஓர் அறிவியல் கலைச்சொல் மூலம் பொருளை உணர்த்திவிட முடியும். வரைவிலக்கணத்தால் அதன் பொருள் நிலைநிறுத்தப்படுகின்றது. அது அந்த பொருளிலேயே அனைத்து இடங்களிலும் மிகுந்த கட்டுப்பாடுடன் கையாளப்படுகின்றது என்று புளூம்பீல்டு என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார்.

இக்கருத்தின் அடிப்படையில் கீழ்காணும் சொற்களை மொழிமாற்றம் செய்யும் பொழுது, முறையே.

Solar Wind - ஞாயிற்றுக்காற்று

Solar System - ஞாயிற்று மண்டலம்/சூரிய குடும்பம்

Solar corona - ஞாயிற்று ஒளிவட்டம்/சூரிய ஒளிவட்டம்

Solar eclipse - ஞாயிற்று ஒளிமறைப்பு

Polar aurora - துருவ விண்ணொளி

Milky way - பால்வீத

Metorid - விண்வீழ்கொள்ளி

Micrometorid - நுண் எரிமீன்

ஆகிய சொற்கள் கருத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சொற்களாகும்

இத்தகைய மொழிபெயர்ப்புச் சொற்களுக்கு மூலமொழிக் கருத்தினை முழுவதுமாக வெளிப்படுத்த முடியாத சூழல்களில் மொழிபெயர்ப்புடன் அச்சொல்லுக்கு கூடுதலான விளக்கத்தை தருதல் அவசியமாக உள்ளது. இந்நிலையை சொற்பொருள் விளக்கி வருவன (Explanatory equivalence) எனப் பெயர் பெறும். எடுத்துக்காட்டாக,

Primary Planets - தலைமைக் கோள்கள்.

முதன்மைக் கோள்கள், கதிரவனை நேரே சுற்றிச் செல்லும் பெருங்கோள்-குறுங்கோள்கள்.

Secondary Planets - துணைக்கோள்கள்.

கதிரவனை நேரடியாக சுற்றாது கோள்களில் ஒன்றைச் சுற்றும் கோள்கள்.

Austronomical Unit - விண்வெளி அளவீடு.

கதிரவனுக்கும், பூமிக்கும் இடையே உள்ள சராசரி தொலைவு.

மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டில் உள்ள அறிவியல் சொற்களுக்கு பெறுமொழியில் இணையான பொருள் தரக்கூடிய சொற்களை பயன்படுத்தினால் நேரடிப் பொருளை உணர்த்துவதில் பொருள் மயக்கம் ஏற்படுகின்றது. எனவே, அந்த சொல்லுக்குரிய பொருளை விளக்கி எழுதுவதால் பொருள் மயக்கமின்றி படிப்பவர்களுக்கு எளிமையாக புரியும் வகையில் சொற்பொருள் விளக்கத்தோடு பெறுமொழியில் சொற்களை அமைத்துத் தர முயலவேண்டும்.

அறிவியல் மொழிபெயர்ப்பில் ஒரு சில ஆங்கிலத் தொடருக்கு இணையான தொடர்களைத் தர இயலாத போதும் அவற்றை விளக்கும் தொடர்களைப் பயன்படுத்தி மொழிபெயர்க்க முயலலாம். எடுத்துக்காட்டாக,

Infra-red-observations - சிவப்பு வண்ணத்திற்கு அப்பால் கண்ணுக்குப் புலனாகாத வண்ணத்தைக் குறித்துச் செய்த ஆய்வுகள்.

Leonid shower - சிம்ம ராசியிலிருந்து வருவதுபோல் தோற்றமளிக்கும் எரிமீன் பொழிவு.

7.3.2. கலைச் சொல்லாக்கம்

"ஒரு மொழியில் இல்லாததொரு சொல்லுக்கு வேறு மொழியினின்று நேரடியாகச் சொற்களைப் பெற்றோ அவற்றை மொழிபெயர்த்தோ புதுச்சொ, உண்டாக்கி அல்லது மொழியிலுள்ள பழைய சொற்களுக்குப் புதுக்கருத்தைப் புகுத்தி மொழி அல்லது அறிவியல் பணிக்கு ஏற்றம் தருவது" கலைச் சொல்லாக்கம் எனப்படும். எனினும், ஒரு மொழியின் சிறப்பியல்பு பண்புகள் வெளிப்படக் காரணமாக இருப்பது மொழிபெயர்ப்பே ஆகும்.

ஒரு மொழியில் புதியதாக நிகழும் சொல்லாக்கம் அம்மொழியின் சொல்லாக்க வடிவ அமைப்பிற்கும், பொருளமைப்பிற்கும் ஏற்ப அமைதல் வேண்டும். வேறாக அமைதல் கூடாது. இந்த நிலையில் 'புதுச் சொற்களை உருவாக்கும்போது அவை கூடிய அளவில் தம்முள் விளக்கமுடையனவாக அமைதல் சிறப்பு' (சேதுமணி மணியன் ப.58-59) என்ற கூற்று நினைவுச் கூறத்தக்கது.

மூலமொழி வேர்ச்சொற்களுக்கு ஏற்ப பெறும்மொழியில் பொருள் பொதிந்த நிகரன்களை உருவாக்கி, அவற்றிலிருந்து பல்வேறு புதிய சொற்களை உருவாக்குவது மொழித்திறனை அதிகரிக்கச் செய்யும் என்று புதுமையாக்க மொழிபெயர்ப்புப் பண்புகளக மொழியிலாளர்கள் கருது'ர். எடுத்துக்காட்டாக, 'கணினி' என்ற சொல் அண்மைக் காலத்தில் வந்த புதிய வரவாகத் தோன்றினாலும் 'கம்ப்யூட்டர்' என்ற சொல்லுக்குரிய பல தமிழ்க் கலைச்சொல்லாக்கங்கள் நம்மிடையே காணப்படுகின்றன. இன்னமும் பரவலாக 'Computer' என்ற ஆங்கிலச் சொல்லையே நேரடி ஒலிபெயர்ப்பாக 'கம்ப்யூட்டர்' என பயன்படுத்துவதைக் காணமுடிகிறது. துறைசார்ந்த அறிவியல் என்ற அளவில் அனைத்துலக மரபாகக் குறியீடுகள், வாய்ப்பாடுகள் ஆகியவற்றை ஏற்றுக்கொள்ளும் பண்பு அறிவியல் மொழிக்கு உள்ளது. அனைவருக்கும் பொதுவாக சென்று சேரும் ஒரு புதிய பொறியின் பெயர் என்ற நிலையில் 'கம்ப்யூட்டர்' என்ற ஒலிபெயர்ப்பு சொல்லையே பயன்படுத்தலாம். இருந்தாலும் நல்ல தமிழ்க் கலைச் சொல்லாக்கம் வெளிவந்துள்ள நிலையையும் கவனத்தில்கொண்டு பார்க்கும் பொழுது 'கம்ப்யூட்டர்' என்பது மனிதனால்

படைக்கப்பட்ட ஒரு சாதனம் ஆகும். இது நாம் கொடுக்கும் செயல் திட்டங்களுக்கேற்பத் தீர்வுகளைத் துல்லியமாக கணித்துத் தருவதாகும். மரபு வழியாக பார்க்கும்போது வானசாஸ்திரம், சோதிடம் ஆகியவற்றை கணிப்பவனைக் கணியன் (On astrologer) அல்லது சோதிடன் என்று அழைக்கின்றோம். இந்த அடிப்படையில் 'கம்ப்யூட்டர்' என்பதற்கு 'கணி' என்ற சொல்லை மூலச்சொல்லாக வைத்து, கணிப்பொறி, கணிப்பான், கணினி, கணனி என்ற தமிழ்ச் சொல்லாக்கங்கள் அமைந்துள்ளன. இச்சொற்கள் அனைத்துமே இன்றளவும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கம்ப்யூட்டரைக் குறிக்கும்போது மேற்குறிப்பிட்ட சொற்களுள் பொருத்தமான சொல்லைப் பயன்படுத்தினால் அதுவே 'நிலைபேராக்கம்' (Standeradization) செய்வதாக அமைந்துவிடும்.

சொற்ச் சுருக்கமும் செம்மை சார்ந்தச் செறிவும் அறிவியல் மொழிபெயர்ப்புக்கு அவசியமாகும். இதனைக் கருத்தில் கொண்டு 'கணிப்பான்' என்ற சொல்லுக்குச் சொற்ச் சுருக்கமாக 'கணினி' என்பதை பின்பற்றலாம். இதுபோலவே 'இன்டர்நெட்' (Internet) என்ற சொல்லுக்கு 'பன்னாட்டு கணினி தகவல் ஒருங்கிணைப்பு' அல்லது 'உலகத் தகவல் இணையம்' என்பதாக கொள்ளலாம்.

7.3.2.1 கலைச்சொல்லாக்கத்தில் நிலவும் கருத்துக்கள்

கலைச்சொல்லாக்கத்தில் பல்வேறு கருத்துக்கள் அறிவியல் அறிஞர்களால் நிலவுகின்றன. அவற்றுள் எதிரெதிரான இரண்டு கருத்துக்கள் இடம் பெறுகின்றன.

1. ஆங்கிலத்தில் வழங்கும் கலைச்சொற்களை அவ்வாறே பெறும்மொழியில் ஏற்றுக்கொள்ள வேண்டும். மொழிபெயர்த்தோ, தமிழ்படுத்தியோ வழங்கக்கூடாது.

2. ஆங்கிலக் கலைச்சொற்களைத் தமிழ் எழுத்துக்களில் (பெறும்மொழியில்) ஒலிபெயர்ப்புச் செய்து பயன்படுத்தினால் போதும்.

முதற் கருத்துப்படி கணிப்பொறியின் வரையறையை கீழ்கண்டவாறு அமைக்கலாம். 'கம்ப்யூட்டர்' என்பது ஒரு டேட்டா ப்ராசசிங் மெஷின். அதில் டேட்டாவை இன்புட் (Input) செய்தால் அதிலுள்ள 'சென்டரல் ப்ராசசிங் யூனிட்' (Central Processing Unit) அந்த டேட்டாவை ப்ராசஸ் செய்து அவுட்புட்டாக இன்ஃபர்மேஷனை (Information) வெளியிடும். இவ்வரையறையில் வரும் கலைச்சொற்களாக வரும் இன்புட் (Input). அவுட்புட் (Output),

இன்:.பர்மேஷன், டேட்டா ப்ராசசிங் (Data processing unit) ஆகியவற்றை விளக்கி மொழிபெயர்க்க நேரிட்டால் அவற்றில் எதிர்கொள்ளும் கலைச்சொற்களின் எண்ணிக்கை அதிகமாக வருவதற்கு வாய்ப்பு உண்டு. மேலும் அச்சொற்களை அவ்வாறே ஒலிபெயர்ப்பு செய்து ஏற்றுக்கொண்டால் படித்தறிதல் (readability) மற்றும் உரைக்கோவை (discourse) அமைப்பு எவ்வாறு அமையும் என்பதும் இந்த மாதிரியான அறிவியல்-தமிழ் யாருக்கு புரியும் என்ற வினாக்கள் எழுகின்றன. இத்தகைய மொழியில் அறிவியலை கூற முற்படுவது தமிழில் அறிவியலை கற்கவே முடியாது என்பதுபோல் ஆகிவிடும்.

இரண்டாவது கருத்துப்படி ஆங்கிலக் கலைச்சொற்கள் அனைத்தையும் தமிழில் (பெறும்மொழியில்) மொழிபெயர்த்து அல்லது தமிழாக்கம் செய்து வழங்கவேண்டும் என்பது. இது நடைமுறைக்கு சரிவருமா என்ற வினா எழுகிறது. இதற்கான சில காரணங்களாவன. அறிவியலில் சில கலைச்சொற்கள், அவற்றைக் கண்டுபிடித்தவர் பெயர் அல்லது அத்துறையில் ஈடுபாடு மிக்க அறிஞர்கள் பெயர்களாலேயே வழங்குவதுண்டு. நியூட்டன் (Newton), ஓம் (Ohm), வோல்ட் (Volt), வாட் (Walt)... ஆகியன. இவைகளனைத்தும் கலைச்சொற்கள் மட்டும் இல்லை. சிறப்புப் பெயர்ச்சொற்களும் ஆகும். இத்தகு சொற்களைச் சிறப்புப் பெயர் கலைச்சொற்கள் (Eponyms) என்பர். இச்சொற்களை மொழிபெயர்க்க இயலாது. ஆகவே, சொற்களை ஒலிபெயர்ப்புச் செய்து வழங்குவதுதான் முறையாகும்.

அறிவியல் மொழிபெயர்ப்பில் “கலைச்சொல்லாக்கம்” என்கிற முயற்சி பெரிதும் இடர்பாடாகவே உள்ளது. இதற்கு காரணம் தமிழில் இன்னும் போதிய கலைச்சொற்கள் படைக்கப்படவில்லை என்பதாகும். கடந்த நூற்றாண்டில் தயாரிக்கப்பட்ட இரு கலைச் சொல்லகராதிகள் Physiological Vocabulary (1972), Vocabulary of Meterial Medica (1985) 1938, 1947. 1960. 1973. 1985 ஆகிய ஆண்டுகளில் பல்வேறு குழுக்களின் முயற்சியால் அறிவியலில் பல துறைகளுக்கான கலைச்சொற்கள் பட்டியல் வெளியிடப்பட்டன. ‘கலைக்கதிர்’ தமிழ் இதழில் நிரம்ப கலைச்சொற்களை வெளியிட்டது குறிப்பிடத்தகுந்தது.

கலைச்சொல்லாக்கத்தில் இன்னும் அளப்பரியா முன்னேற்றம் தேவைப்படுகின்றது. அறிவியல் தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ் வழிக்கல்விக்கு

பலதுறை சார்ந்த கலைச்சொற்கள் உருவாக்கப்படவேண்டும். ஏற்கனவே, உருவாக்கப்பட்ட கலைச்சொற்களை மாற்றியமைக்கவும், திருத்தியமைக்கவும், செய்யவேண்டும். ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் கலைச்சொற்கள் உருவாக்கப்பட்ட அளவிற்கு தமிழ்க் கலைச்சொற்கள் ஏராளமாக உருவாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தமிழில் வந்த கலைச்சொற்கள் யாவும் மொழிபெயர்ப்பே என்கிற நிலையில், ஒரே ஆங்கிலச் சொல்லுக்கு பல மொழிபெயர்ப்பு ஏற்படும். இவற்றையெல்லாம் கண்டு தெளிந்த சொற்களை தேர்வு காண்பது மொழிப்பெயர்ப்பாளனது மிக முக்கியப்பணியாகும்.

கலைச்சொல்லாக்க முயற்சியில் இலக்கண இலக்கியம் அறிந்த அறிஞர்கள் மற்றும் மொழிபெயர்ப்பாளர்களுக்கிடையே மொழித்தூய்மை மற்றும் மொழி வெறி காரணமாக கலைச் சொல்லாக்க முயற்சியில் தேக்கம் ஏற்படுகின்றது. மொழித்தூய்மையும் இலக்கியம் சார்ந்த செறிவும் மொழிக்குத் தேவைதான். ஆனால், அறிவியல் மொழிபெயர்ப்பில் உணர்வுகளுக்கு இடமே இல்லை.

கலைச்சொல்லாக்கத்தில் சொல்லுக்கு துல்லியமான பொருள் வரையறை உண்டு. பொருளைக் கொடுப்பது அறிவியல் அதற்கான சொல்லைக் கொடுப்பது மொழி. எனவே, அறிவியல் மொழிக்கும் மொழிக்கூறுகள் முக்கிய இடம் வகிக்கின்றது.

இலக்கிய மொழிபெயர்ப்புப் போல அறிவியல் மொழிபெயர்ப்பு இருக்க முடியாது. ஆகவே, ‘அறிவியல் மொழிபெயர்ப்பில் மொழித்தூய்மையைக் காட்டிலும் கருத்துணர்த்தும் போக்கே மிக்கிருத்தல் வேண்டும்’, என்று மனவை முஸ்தபா கூறுகின்றார். இதைப் போலவே ‘கலைச்சொல்லாக்கத்தில் மொழித் தூய்மையைப் பற்றி பேசிக் காலங்கடத்த வேண்டாம்’ என முனைவர். இராம. சுந்தரம் குறிப்பிடுகின்றார்.

கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், பொறியியல், மருத்துவம், வேளாண்மை போன்ற அறிவியல் துறைக்கான மொழியில் தனிநடை உண்டு. மரபு உண்டு. எனவே, அறிவியல் நூல்களைத் தமிழில் எழுத வேண்டும் என்பது தமிழில் அறிவியல் இலக்கியம் படைப்பதாகும். அதற்கான இலக்கணம் உருவாக வேண்டும். பாரம்பரியம் வளரவேண்டும் என வா.செ.குழந்தைசாமி குறிப்பிடுகின்றார்.

7.3.3 மொழிமாற்றம்

மொழிமாற்றம் என்பது மொழிபெயர்ப்பின் செயற்பாட்டு முறை ஆகும். இச்செயற்பாட்டு முறையில் ஒரே நேரத்தில் மூலமொழியும், பெறும்மொழியும் சம்மந்தப்படுகின்றன. இவ்விதமான மொழி மாற்றத்தில் (Language Transfer) மூலத்தின் பொருள் முதன்மையிடமும், நடைக்கூறுகள் இரண்டாமிடமும் பெறுகின்றன. மொழிமாற்றுதல் நிகழ்ச்சியில் சொற்களை நேரடியாகக் கடன் வாங்குதல், கலப்புச் சொற்களை உருவாக்குதல் மொழிபெயர்த்தல் பழையச் சொற்களுக்கு புதுப்பொருள் கொடுத்து பயன்படுத்துதல் ஆகிய உத்திகள் கையாளப்படுகின்றன.

7.3.3.1 மொழிமாற்றத்தின் பண்பு

மொழிமாற்றத்தின் முக்கிய பண்பாக மூலமொழிக்கு இணையான பெறும்மொழி நிகரனைக் கண்டறிந்து மொழிமாற்றம் செய்யாமல், அது உணர்த்தும் கருத்துக்கேற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து மாற்றம் செய்ய வேண்டும்.

7.3.3.2 மொழிமாற்றத்தில் மொழிபெயர்ப்பாளனது பங்கு

அறிவியல் மொழிபெயர்ப்பில் மூலமொழிச் சொல்லை அப்படியே கையாண்டால்தான் பொருளை மிகத் தெளிவாகவும், ஆற்றலோடும் புலப்படுத்த முடியும் என்று ஒரு சாரரும், மூலமொழிச் சொற்களை எக்காரணம் கொண்டும் பயன்படுத்தவே கூடாது என்று மற்றொரு சாரரும் கருதுகின்றார்கள். இப்போக்குகள் மொழிமாற்றுதலுக்குப் பெறும்மொழியில் இயல்பான எளிய மொழிபெயர்ப்பு வருவதற்கு இடையூறாக அமைகின்றன. மொழிபெயர்ப்பாளர்கள் விருப்புவெறுப்பின்றி மொழிகளையும், மக்களையும், கலாச்சாரங்களையும் மதிக்கும் அறிவியல் மனப்பான்மை உடையவராய் இருத்தல் வேண்டும். மொழி மாற்றுதலில் கையாளப்படும் உத்திகள், கோட்பாடுகள் ஆகியன பற்றிய அறிவும் மொழி மாற்றுதலுக்கு இன்றியமையாததாக இருக்கின்றது. இயல்பான மொழிபெயர்ப்பு வெளிவர மேற்கூறிய கருத்துக்கள் துணைபுரிகின்றன.

அறிவியல் மொழிபெயர்ப்பாளருக்கு ஆக்கத் திறனும், தன்னாக்கத் திறனும் தேவை. மொழிமாற்றுதலில் பொருத்தமான நிகரன்களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவதில்தான் ஒரு மொழிபெயர்ப்பாளனின் முழு வெற்றியும் அமையும். சரியான நிகரன்களைத் தேர்ந்தெடுப்பதில் அவன் தன் மொழித் திறன், அறிவுக் கூர்மை ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டும்.

7.3.4 கலைச்சொற்கள் உருவாக்கம்

அறிவியல் மொழிபெயர்ப்பில் கலைச்சொற்கள் உருவாக்குவது மிக முக்கியமானப் பணியாகும். இப்பணியில் சொற்கள் மிகத் தெளிவாகவும் மூலச் சொல்லின் பொருளை நுட்பமாக விளக்குவதாகவும் அமைய வேண்டும்.

அறிவியல் மொழிபெயர்ப்பில் கீழ்கண்ட முறைகளின் மூலம் கலைச் சொற்களை உருவாக்க முயலலாம்.

1. உருவாக்கம் (Coinage/Creation)
2. மொழிபெயர்ப்பு (Translation)
3. ஒலியாக்கம் (Transliteration)

7.3.4.1 உருவாக்கம்

மூலமொழியில் உள்ள சொற்களுக்கு இணையான பெறும்மொழி நிகரன்களை பொருள் அடிப்படையில் வைத்து உருவாக்குவது சொல் உருவாக்கம் எனப்படும். எடுத்துக்காட்டாக,

'Antenna'	-	பூமியில் உள்ள ஏற்பி
'Heat Stroke'	-	வேனல் அதிர்ச்சி
'Heat Crampt'	-	வேனல் பிடிப்பு

7.3.4.2 மொழிபெயர்ப்பு

மூலமொழியிலுள்ள ஒரு செய்தியை மொழிபெயர்க்கப்படும் மொழிக்கு ஏற்ப மாற்றுவதை மொழிபெயர்ப்பு எனலாம். அறிவியல் மொழி பெயர்ப்பில் அணிநலம் செறிந்த மொழியைக் (Figurative Language) கையாளக் கூடாது. இருபொருள் தரும் சிலேடைகள் முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.

சொற்களை மூலமொழியிருந்து பெறும்மொழிக்கு மாற்றுவதால் கீழ்கண்ட நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

1. சொற்களை நேரடியாகக் கடன் வாங்குதல் (ஒலிபெயர்த்தல்).
2. கலப்புச் சொற்களை உருவாக்குதல்
3. மொழிபெயர்ப்பு,
4. பழஞ்சொற்களுக்குப் புதுப்பொருள் கொடுத்துப் பயன்படுத்துதல்.

7.3.4.2.1 சொற்களை நேரடியாகக் கடன் வாங்குதல்

மூலமொழியிலுள்ள சொற்களை அப்படியே கடன் வாங்கி ஒலிபெயர்த்து பெறும்மொழியில் பயன்படுத்தும் முறைக்கு சொற்களை நேரடியாகக் கடன் பெறுதல், எடுத்துக்காட்டாக,

Secretary	-	செக்ரட்ரி
Cholera	-	காலரா
Vibric Cholera	-	விப்ரியோ காலரா
Hepatitis Virus	-	ஹெப்படைட்டிஸ் வைரஸ்
Road Rollar	-	ரோட் ரோலர்
Electro Phorus	-	எலக்ட்ரோ போரஸ்

7.3.4.2.2 கலப்புச் சொற்கள் உருவாக்குதல்

மூலமொழியிலுள்ள கூட்டுச் சொற்களுக்கு இணையான பெறும்மொழிக்குச் சொல் அமையாத போது பிறமொழிச் சொல்லை இணைத்து உருவாக்குதலுக்கு கலப்புச் சொற்களை உருவாக்குதல் எனப்படும். எடுத்துக்காட்டாக,

Computer Screen	-	கம்ப்யூட்டர் திரை
Flying Cycle	-	பறக்கும் சைக்கிள்
Inflammation	-	சுழற்சி

7.3.4.2.3 மொழிபெயர்ப்பு

மூலமொழிச் சொல்லுக்கு இணையான பெறும்மொழி நிகரனை பொருள் மாறுபாடு இன்றி மாற்றியமைக்கும் முறைக்கு மொழிபெயர்ப்பு எனக்கூறலாம். எடுத்துக்காட்டாக, மருத்துவத்துறைச் சொற்களில் சிலவற்றைக் காணபோம்.

Immune Deficiency	-	காப்புக்குறைவு, ஏமக்குறைவு
AIDS	-	ஏமநோய், ஏமக்குறைநோய்
Condom	-	புணர்காப்பான் புணர்காப்பி, கலவிகாப்பான், கலவிகாப்பி
Hemophiliacs	-	இரத்த ஒழுகுநோய், இரத்த உறை ஊக்குவி புரதகுறை நோய்

7.3.4.2.4 பழஞ்சொற்களுக்குப் புதுப்பொருள் கொடுத்து பயன்படுத்துதல்

அறிவியல் தமிழாக்கத்தில் ஏற்கனவே மொழிபெயர்த்து வைத்துள்ள சொற்கள் அனைத்தையும் இக்கால நடைமுறைக்கு பயன்படும் அளவில் சொற்கள் புதுப்பொருளோடு புதுப்பிக்கப்பட வேண்டும். கலைச்சொல்லாக்க வல்லுநர் குழு துணைக்கொண்டு ஒருமுறை தயாரித்து விட்டால் மட்டும் போதாது. ஆங்கிலமொழி அகராதிகளை அவ்வப்பொழுது செழுமைப்படுத்தி வருவதுபோல, இத்தகைய கலைச்சொல் அகராதிகளிலும் மாற்றங்களையும், திருத்தங்களையும் தவறாது செய்து வரவேண்டும். அவ்வாறு வல்லுநர் குழு நியமிக்கப்பட்டு, சொற்கள் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட கலைச்சொற்கள் அவை வழங்கும் பொருளுக்கேற்றவாறு மாற்றியமைத்து வழங்க அங்கிகாரம் வழங்கப்பட வேண்டும்.

7.3.4.3 ஒலியாக்கம்

பிறமொழிக் கலைச்சொற்களைக் கடன் வாங்கும்போது அவற்றைத் தமிழ்வரி வடிவில் எழுதி வழங்குவதே ஒலியாக்கம் (Transliteration) எனப்படும். அவ்வாறு ஒலியாக்கம் செய்யும்போது தமிழில் இல்லாத பிறமொழிச் சிறப்பொலிகளைத் தமிழ்படுத்தும்போது சிக்கல் உண்டாகிறது. பழங்காலத்தில் தமிழில் வந்து வழங்கிய பிறமொழிச் சொற்களில் மிகப்பெரும்பாலானவை வடமொழிச் சொற்களே என்றால் மிகையாகாது.

“வட சொற்கிளவி வடவெழுத்தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லாகுமே” (தொல்.சொல் 395)

என்ற நூற்பாவின் மூலம் வடமொழிச் சொற்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதற்கு, தொல்காப்பியர் வரைவிலக்கணம் எழுதியுள்ளார். எனவே ஒரு மொழிவிட்டு மற்றொரு மொழிக்குச் சொற்கள் புகுவது என்பது கருதலாகாது. தேவையான சொற்களை ஏற்றுக் கொள்வதில் ஒரு மொழிக்குப் பயனாகத் தான் இருக்க முடியும். சொற்களை வரவேற்பதில் ஆங்கிலம் போன்ற மொழிகள் ஆர்வம் காட்டி வருகின்றன. வேற்றுமொழிகளிலிருந்து சொற்களைக் கடனாகப் பெறுவதால் கடன் பெறும் மொழியின் தகுதியோ, தன்மையோ குறைந்துவிடும் என்பதற்கில்லை. கடன் வாங்குவதால் சொற்களின் இடைவெளியை (Lexical gab) நிரப்ப உதவும்.

7.3.4.3.1 ஒலியாக்கத்தில் சிக்கல் எழும் நிலை

அறிவியல் கலைச்சொற்களைப் பொறுத்தவரையில் தமிழில் ஒலியாக்கம் செய்யப்படுவனவற்றுள் ஏறக்குறைய அனைத்துச் சொற்களுமே ஆங்கிலத்திலிருந்து அப்படியே எடுத்து கையாளப்படுகின்றன. அப்படி எடுத்தாளப்படும் போது தமிழில் சரியான வரிவடிவம் இல்லை. இந்நிலையில் சிக்கல்கள் உண்டாகின்றன. எடுத்துக்காட்டாக,

ஆங்கில கலைச் சொற்களிலுள்ள ஒலிப்பில் தடைப்பொலியும் (Voiceless Stop) ஒலிப்புறு தடையொலியும் (Voiced Stop) தமிழில் ஒரே வடிவத்தில் குறிக்கப்படுகின்றன.

p(ப)		b(ப)	
Plasma -	பிளாஸ்மா	Beta -	பீட்டா
Polar -	போலார்	Boyle -	பெயல்
Pump -	பம்பு		
t (ட)		d (ட)	
tangent -	டேன்ஜென்ட்	dalton -	டால்ட்டன்
tetrade -	டெட்ரோடு	denrograph -	டென்ரோகிரா.:ப்
turbine -	டர்பைன்	diopter -	டையாப்பட்டர்

தமிழ் வல்லெழுத்துக்களான க், ச், ட், த், ப் ஆகிய ஐந்து எழுத்துக்களிலும் இச்சிக்கல்கள் உண்டு. தமிழில் ஒலிப்பது ஒலிப்புறு தடையொலிகளான g, j, f, b ஆகிய ஒலியன்கள் இல்லாமல் இல்லை. கீழ்காணும் சொற்களில் இவ்வொலியன்கள் இருப்பதைக் காணலாம்.

தங்கம் (க-g) பஞ்சம் (ச-j)

கம்பம் (ப-b) மந்தம் (த-dh)

கண்டம் (ட-d)

ஆனால் இவை தமது இன ஒலியன்களான மெல்லினங்களுடன் ங், ஞ், ண், ந், ம் சேர்ந்து சொற்களின் இடையில் வரும்போது மட்டுமே ஒலிப்புறு தடையொலிகளாக உச்சரிக்கப்படுகின்றன. மாறாக, சொல்லுக்கு முதலில் வரும்போதும் மெய்ம்மயக்கங்களில் வரும்போதும் குழப்பமும் சிக்கலும் உண்டாகிறது. இச்சிக்கல்களில் இருந்து விடுபடுவது எவ்வாறு?

7.3.4.3.2 ஒலியாக்கத்தில் ஏற்படும் சிக்கல்களுக்கு தீர்வு

வடமொழிச் சொற்களைத் தமிழாக்கம் செய்வதற்குத் தொல்காப்பியரும், நன்னூலாரும் பல்வேறு நெறிமுறைகளை வகுத்துச் சென்றுள்ளனர். அவற்றைப் பின்பற்றி ஆங்கில மொழி ஒலியன்களையும் தமிழுக்கேற்றவாறு மாற்றம் செய்து கலைச்சொற்களை ஒலிபெயர்த்துக் கொள்வதே பொருத்தமானது. இயற்கையானது, மொழியியல் கோட்பாட்டிற்கும், கொள்கைக்கும் உகந்தது. ஆனால் இம்முறையை முழுமையாகப் பின்பற்ற இயலாது என்றால் கீழ்காணும் வழிமுறைகளைப் பற்றிச் சிந்திக்கலாம்.

ஒலிப்புறு தடையொலியன்களாக b, g, d போன்ற எழுத்துக்கள் பயின்று வரும் ஆங்கிலச் சொற்களை ஒலிபெயர்ப்புச் செய்கையில், தமிழ் வரிவடிவங்களுக்குப் பக்கத்தில் அடைப்புக் குறிக்குள் ரோமன் எழுத்துக்களில் அச்சொற்களைத் தரமுயலலாம். இம்முறைக் குழப்பத்தை விளைவிக்கும் சொற்கள் அனைத்திற்கும் பயன்படுத்தலாம்.

இறந்த எழுத்துக்களான ஜ, ஷ, ஸ ஆகிய எழுத்துக்களைப் பயன்படுத்தி உச்சரிப்புச் சிக்கலைத் தவிர்க்கலாம்.

சொல்லுக்கு முதலில், இடையில், இறுதியில் வரும் எழுத்துக்களிலும் மெய்ம்மயக்கங்களிலும் தமிழ் இலக்கண விதிகளுக்கு விளக்கங்கள் அளிக்கலாம்.

அறிவியல், மொழிபெயர்ப்பறிஞர்கள் மற்றும் மொழியியல் அறிஞர்கள் இணைந்து வழிகாட்டும் குழுவினைக் கொண்டு அறிவியல் மொழிபெயர்ப்பினை செய்வது நலம் பயக்கும்.

7.3.4 அறிவியல் உரைக்கோவை/உரைக்கட்டு

அறிவியலை மொழிபெயர்க்கும் ஒரு மொழிபெயர்ப்பாளன் அறிவியலைப் பற்றிய உரைக்கோவையை நன்கு அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் மொழிபெயர்ப்பு செறிவாகவும் படிப்பதற்கு பொருள் விளக்கத்தோடு தெளிவாகவும் அமையும்.

ஒரு கருத்தைத் தெளிவாகப் புலப்படுத்துவதற்குத் தகுந்த சொற்களைத் தகுந்த இடத்தில் பயன்படுத்த வேண்டும். இல்லையெனில் கருத்துப் புலப்பாட்டில் குழப்பம் ஏற்படும். ஒரு பொருள் குறித்த கருத்துப் புரிதிறன் செம்மையாக நடைபெற உதவுவது உரைக்கட்டு (Discourse) ஆகும்.

7.3.4.1 உரைக்கட்டு விளக்கம்

உரைக்கட்டு என்பது கருத்துப் புலப்பாடு நிகழ்வதாகும். ஒரு பொருள் அல்லது ஒரு நிகழ்ச்சி குறித்து தேவையான செய்திகளை இருவரோ பலரோ தமக்குள் பரிமாறிக் கொள்ள விழையும்போது அங்குக் கருத்தாடல் அல்லது கருத்துப் புலப்பாடு நிகழ்கிறது. இந்த நிகழ்வே உரைக்கட்டு என அழைக்கப்படுகிறது.

7.3.4.2 அறிவியல் உரைக்கட்டின் செயற்பாடகள்

அறிவியல் உரைக்கட்டின் செயற்பாடுகள் குறித்து லூயிடிரிம்பிளே என்பார் ஆய்ந்தறிந்து வகைப்படுத்தியுள்ளார். அவையாவன:

1. விவரிப்பு (Description)
2. வரையறை (Definition)
3. வகைப்பாடு (Classification)
4. அறிவுறுத்தல் (Instruction) மற்றும்
5. மொழிசார்-மொழிசாராக் கூறுகளின் உறவு

7.3.4.2.1 விவரிப்பு

விவரிப்பு என்பது ஒரு செயற்பாடாகும். இச்செயற்பாடு ஒரு பொருளின் அமைப்பு, வடிவம், அளவு, நிறம், தன்மை ஆகியவற்றை விவரிக்கிறது. இது மூன்று வகைப்படும். அவையாவன,

1. புறஅமைப்பு விவரிப்பு (Physical Description)
2. செயற்பாட்டு விவரிப்பு (Functional Description)
3. செயல் நிகழ்வு விவரிப்பு (Process Description) என்பனவாகும்.

7.3.4.2.1.1 புறஅமைப்பு விவரிப்பு

புறஅமைப்பு விவரிப்பு என்பது பொருட்களின் இயற்கைப் பண்புகளை அல்லது வெளித்தோற்றத்தை விவரிப்பதாகும்.

7.3.4.2.1.2 செயற்பாட்டு விவரிப்பு

செயற்பாட்டு விவரிப்பு என்பது ஒரு பொருளின் பயனையும் அப்பொருளின் உறுப்புக்கள் தனித்தனியே செயல்படும் விதத்தையும் முழு அமைப்பு செயல்படும்

விதத்தையும் விவரிப்பதாகும். இவ்வகை விவரிப்பில் 'உபயோகப்படுகிறது 'உதவுகிறது', 'செயல்படுகிறது' போன்ற வினைச்சொற்கள் மிகுதியாகட பயன்படுகின்றன.

7.3.4.2.1.3 செயல் நிகழ்வு விவரிப்பு

செயல் நிகழ்வு விவரிப்பு என்பது செயற்பாட்டு விவரிப்பின் ஒரு சிறப்புப் பகுதியாகும். இந்நிலை பொருட்கள் செயல்படும் முறையை ஒன்றன்பின் ஒன்றாக கூறுவதாகும். இவ்வகை விவரிப்பில் 'முதலில்', 'அடுத்து', 'கடைசியில்', பிறகு முதலிய காலக்குறிப்புச் சொற்களும், ஏவல் அல்லது வியங்கோள் வினைகளும், எடுத்துக்கொள்ளுங்கள் போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன.

7.3.4.2.2 வரையறை

வரையறை என்பது ஒரு அறிவியல் கருத்தமைவை (Concept) அல்லது கருவியின் தன்மையினை இன்னதென்று கூறி வரையறை செய்வதாகும். வரையறையில் வரக்கூடிய கருத்துக்கள் மறு ஆய்வுக்கு உட்படும் வரை நிலையான தன்மையுடையதாகவும். அனைவராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் அமையும். இது மூன்று நிலைகளில் அமைந்துள்ளன. அவையாவன,

1. முறைசார் வரையறை (Formal Definition)
2. பகுதி வரையறை (Semi formal Definition)
3. முறைசாரா வரையறை (Non-formal Definition) என்பனவாகும்.

7.3.4.2.2.1 முறைசார் வரையறை

முறைசார் வரையறை என்பது வரையறுக்கப்படும் சொல். அது சேர்ந்துள்ள தொகுதி, அந்தத் தொகுதியிலுள்ள மற்றொரு வகைக்கும் இதற்கும் இடையே உள்ள வேறுபாடு என மூன்றையும் முறையாக விளக்குவனவாகும்.

7.3.4.2.2.2 பகுதி முறைசார் வரையறை

இது இரண்டு விதமான செய்திகளைப் படிப்பவர்களுக்கு அளிக்கக் கூடியது. அவற்றுள் ஒன்று சொல் வேறுபாடு என்பதாகும். உதாரணமாக

'பல்லி இனத்தை சார்ந்த டிராகோ (Draco) என்ற பல்லி வகை. . .' இவ்வெடுத்துக்காட்டில் 'டிராகோ' என்ற பல்லியினம் மற்ற வகையான பல்லியினத்திலிருந்து வேறுபட்ட செய்தியை அளிப்பதால் இவை இவ்வகை வரையறையில் அடங்கும்.

7.3.4.2.2.3 முறைசாரா வரையறை

இவ்வகை வரையறை சொல்லை விளக்கும் மற்ற இரண்டு வரையறைகளைப் போல விரிவாக இருக்காது. 'எனப்படும்', 'சொல்லப்படும்', 'அழைக்கப்படும்', 'சொல்லலாம்' ஆகிய வினை வடிவங்கள் பயன்படுகின்றன.

7.3.4.2.3 வகைப்பாடு

வகைப்பாடு என்பது பொருளின் பொதுப்பண்புகளின் அடிப்படையில் அமைவதாகும். இது கற்பித்தலின் நேரத்தையும் புரிந்து கொள்ளும் திறனை உயர்த்தவும் பயன்படுகிறது. இவ்வகைப்பாட்டில் மூன்று வகை காணப்படுகின்றன. அவையாவன,

1. முழு வகைப்பாடு (Complete Classification)
2. பகுதி வகைப்பாடு (Partial Classification)
3. உள்ளுறை வகைப்பாடு (Implicit Classification)

7.3.4.2.3.1 முழு வகைப்பாடு

இவ்வகைப்பாடு இரண்டு விதமான செய்திகளை தர முற்படுகிறது.

1. குறிப்பிட்ட தொகுதியின் கீழ்வரும் துணை வகைகளை வகைப்படுத்துகிறது.
2. துணை வகைகள் எந்தப் பிரிவைச் சார்ந்தவை என்பதனைத் தெளிவுப்படுத்துகிறது.

7.3.4.2.3.2 பகுதி வகைப்பாடு

பகுதி வகைப்பாட்டில் தொகுதி மற்றும் அதன் உறுப்புக்கள் பற்றி மட்டும் வகைப்படுத்தும். 'வகைப்படுத்தும்', 'உட்படும்', 'அடங்கும்' ஆகிய வினை வடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

7.3.4.2.3.3 உள்ளுறை வகைப்பாடு

இவ்வகைப்பாட்டில் பொருளின் வரையறைப் பகுதியை விளக்கியமைவதாக அமைகிறது.

7.3.4.2.4 அறிவுறுத்தல்

அறிவுறுத்தல்கள் ஒரு பொருளை சோதனை செய்யும் இடத்தில் அல்லது ஒரு பொருளைப் பற்றிய பயிற்சி கொடுக்கும் இடத்தில் செய்ய வேண்டிய முறைகளை வரிசைப்படுத்திக் கூறுவதாகும். இதில் இரண்டு வகைகள் உள்ளன. அவையாவன,

1. நேர்முக அறிவுறுத்தல் (Direct Instruction)
2. மறைமுக அறிவுறுத்தல் (Indirect Instruction)

7.3.4.2.4.1 நேர்முக அறிவுறுத்தல்

நேர்முக அறிவுறுத்தல் ஏவல் வினைகளையும் 'வேண்டும்' என்ற துணை வினைகளையும் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக செய், அமை, கவனி, நிரப்பிக்கொள்... போன்ற சொற்கள்.

7.3.4.2.4.2 மறைமுக அறிவுறுத்தல்

மறைமுக அறிவுறுத்தல் 'எடுத்துக்கொள்ளுமாறு செய்ய வேண்டும்', 'கண்டறியுங்கள்', 'உருவாக்குங்கள்'... என்று மறைமுகமாக பொருளை பற்றிய செய்முறையை அறிவுறுத்துகிறது.

7.3.4.2.5 மொழிகள்-மொழிசாராக் கூறுகளின் உறவு முறைகள்

ஒரு பொருளைப் பற்றிக் கூறும்போது மொழிசார் கூறுகளோடு படங்களும் அக்கருத்தினை விளக்க உதவுகின்றன. இதனையே மொழிசார்-மொழிசாராக் கூறுகளின் உறவுமுறைகள் என்கிறோம்.

7.3.5 உரைக்கோவையினால் ஏற்படும் சிக்கல்களும் தீர்வுகளும்

அறிவியல் மொழிபெயர்ப்பாளன் அறிவியலின் உரைக்காட்டு அல்லது உரைக்கோவையின் தன்மையை அறியாமலேயே மொழிபெயர்க்க முற்படும்போது சிக்கல்கள் ஏற்படுகின்றன.

அறிவியலில் மொழிபெயர்ப்பில் மூலச்சொல்லிற்குத் தகுந்த தமிழ்ச் சொற்கள் பெறுமொழியில் கிடைக்காமல் போகலாம். அவ்வாறு கிடைக்காமல் போகும் பட்சத்தில் எந்த சொல்லைக் கையாளலாமென மொழிபெயர்ப்பாளனுக்கு சிக்கல் வரலாம். அவ்வாறு மொழிபெயர்ப்பாளனுக்குச் சிக்கல் வரும் சமயத்தில் மூலச்சொல்லை அப்படியே பயன்படுத்துவதில் தவறில்லை.

மரபுச் சொற்களைப் பயன்படுத்துவதில் சிக்கல் நேரிடலாம். அத்தருணத்தில் மக்கள் மரபுகளில் தகுதிப்பாடுடைய சொற்களை பெருவழக்காகவும், விளக்கமும் பெற்று அமையுமானால் அந்தச் சொற்களை பயன்படுத்துதல் நல்லது.

மூலமொழிச்சொல்லின் பொருள் ஒன்றை விளக்கும்போதோ, பொருளின் புதிய சொற்களை விளக்கும் போதோ மொழிபெயர்ப்பாளனுக்குச் சிக்கல்கள் வரலாம். அப்போது பழைய சொற்கள் மற்றும் புதிய சொற்களின் அடிப்படை பொருள் கூறுகளை இயன்ற அளவு விளக்குவது அவசியமாகும்.

உரைக்கட்டின் நடுவில் புதியதாக ஒரு கலைச்சொல்லைப் பயன்படுத்தும்போது சிக்கல்கள் வரலாம். அப்போது அந்த சொல்லின் பக்கத்திலேயே அடைப்புக் குறிக்குள் மூலமொழிச் சொல்லைப் பயன்படுத்தி பொருள் புரிய வகை கொள்ளலாம்.

கொடுக்கப்படும் உரைக்கட்டின் பயன்பாட்டைக் கொண்டு மொழிநடையில் எளிமை, உதாரணங்கள் காட்டல், வினா-விடை அமைப்பு போன்றவற்றைத் தருதல் வேண்டும்.

கலைச்சொல் பயன்பாட்டில் இடத்திற்கு இடம் ஒரே பொருளை குறிக்க உரிய சொற்களைப் பயன்படுத்துவதில் சிக்கல் நேரலாம். அச்சமயத்தில் சொற்களைப் பயன்படுத்துவதில் முதலாவதாகப் பயன்படுத்திய ஒரு கலைச்சொல்லை அவ்வுரை முழுவதும் பயன்படுத்த மொழிபெயர்ப்பாளன் முனையவேண்டும். ஒரே கலைச்சொல்லுக்கு பல்வேறு சொற்களை பயன்படுத்தக் கூடாது. எடுத்துக்காட்டாக, கம்ப்யூட்டருக்குரிய கணனி, கணிப்பொறி, கணிப்பான், கணினி இவற்றில் ஏதாவது ஒன்றை மட்டும் கையாளுதல் வேண்டும்.

7.3.5 சொற்களைத் தரப்படுத்துதல்

மொழிபெயர்ப்பின் மூலமும், ஒலிபெயர்ப்பின் மூலமும் உருவாக்கப் பெற்ற கலைச் சொற்களைத் தரப்படுத்த வேண்டும். இந்நிகழ்ச்சியைச் சொற்களை தரப்படுத்துதல் என அழைக்கின்றோம். உஷ்டர் எனும் அறிஞர் சொற்களைத் தரப்படுத்துவதற்கு, சில வரையறைகளை வகுத்துள்ளார். அவையாவன, 'பொருத்தமுடைமை', 'ஏற்புடைமை', 'எளிமை', 'பலதுறைநோக்கு', 'மொழித்தூய்மை', 'ஒருமைப்பாடு', ஆகிய நெறிமுறைகள் கலைச் சொல்லாக்கத்தில் சொற்களைத் தரப்படுத்த பயனுள்ளதாக அமையும்.

கலைச்சொல்லாக்கமும் தரப்படுத்துதலும் உடனுக்குடன் (உடனிகழ்வாக) நடைபெறுவது நல்லது. சொற்களைத் தரப்படுத்துதலை வல்லுநர் குழுவிடம் ஒப்படைத்து அவர்கள் தம் பரிந்துரைகளை அரசும், அரசு நிறுவனங்களும் முதலில் பின்பற்ற வேண்டும். பின்பு மற்றவர்களும் பின்பற்றுவதற்கு முற்படுவர்.

இயல் - 8

கணினி மொழிபெயர்ப்பு

8. கணினி மொழிபெயர்ப்பு

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியிலுள்ள கருத்துக்களை மாற்றாமல் மற்றொரு மொழிக்கு மாற்றியமைக்கும் முறையே மொழிபெயர்ப்பு ஆகும்.

கணினி இன்று பல்வேறு துறைகளில் பயன்பட்டு வந்தாலும் மொழியியல் ஆய்வில் அதன் பங்கு அளப்பரியது. மொழியியலில் குறிப்பாக இலக்கண ஆய்வு, அகராதி தயாரித்தல், மொழியைக் கற்பித்தல் போன்ற ஆய்வுகளுக்கு மட்டுமின்றி மொழிபெயர்ப்புப் பணியிலும் கணினி பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆய்வு அறிஞர்கள், கணினி மூலம் மொழிபெயர்ப்புப் பணியினை மேற்கொள்வதில் இன்னமும் சிக்கலான பணியாகவே கருதுகின்றனர். பொதுவாக, மொழியியல் ஆய்வுகளில் 'புரோலாக்' (Prolog) எனும் கணினி மொழியே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மொழியியல் ஆய்வு பணிக்கும் மொழிபெயர்ப்பியல் பணிக்கும் மிக நெருக்கமான தொடர்பு இருந்த போதிலும் அதற்கான மென்பொருளை (Software) வடிவமைப்பதில் சிக்கல்கள் இருக்கின்றன.

ஆங்கிலத் தொடர்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் புதிய கணினி மென்பொருளைத் தலைமைச் செயலகத்தில் ஆகஸ்ட்டு மாதம் 22 ஆம் நாள் 2003 வருடம் தமிழக முதல்வர் வெளியிட்டுள்ளார்.

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் மூலம் 'தமிழ்ப்பொறி' எனும் பெயரில் இந்த மென்பொருள் வெளியிடப்பட்டுள்ளது. பல்கலைக் கழகத்தின் தமிழ்மென்பொருள் மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.4 லட்சம் உதவி பெற்று அல்டிமேட் சாஃப்ட்வேர் சொல்யூஷன் என்ற நிறுவனம் இதனை வடிவமைத்துள்ளது.

இம்மென்பொருள் ஆங்கிலத்தில் உள்ள நேர்த்தொடர்கள், வினாத்தொடர்கள், வியப்புத் தொடர்கள். ஏவல் தொடர்கள் போன்ற தொடர்களை மொழிபெயர்க்கும் திறன் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

சொற்றொடர்க் கூறுகளைப் பிரிக்கும் காற்புள்ளி, அரைப்புள்ளி, இடைவெளி போன்றவற்றை புரிந்துகொண்டு மொழிபெயர்க்கும் சில கலவை வாக்கியத் தொடர்களையும் மொழிபெயர்க்கும் திறன் கொண்டது இந்த மென்பொருள், ஆங்கிலமொழி அறிந்த மாணவர்கள் தமிழ் பயில்வதற்கு இந்த மென்பொருள் உதவியாக இருக்கும். (தினமணி. ஆக.22-2003) இம்முயற்சி கணினி மொழிபெயர்ப்பு/இயந்திர மொழிபெயர்ப்புக்கு (Machine Translation) வித்திட்ட முயற்சியாக கொள்ளலாம்.

8.1 மென்பொருள் உருவாக்கம்

மென்பொருள் உருவாக்கத்திற்கு மூலமொழியிலிருந்தும், இலக்குமொழியிலிருந்தும் இணையான சொற்களை இலக்கண உறவுகளின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட வேண்டும். வகைப்படுத்தப்பட்ட சொற்களுக்கு இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிந்து அவற்றைச் சீர்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பணி மென்பொருள் உருவாக்கத்திற்கு மிகவும் இன்றியமையாகும்.

8.1.1 சொற்களை வகைப்படுத்துதல்

சொற்களை உருபனியல் அடிப்படையிலும், இலக்கண வல்லுநர்களின் கோட்பாடுகளில் ஏதேனும் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டும் வகைப்படுத்தலாம். இன்று பரவலாக பயனாக்க மொழி இலக்கணம் (Functional grammar) பயன்பாட்டில் இருந்து வருகின்றது. இந்நிலையில், சாம்ஸ்கியின் ஏதேனும் ஒரு கோட்பாட்டினைப் பயன்படுத்தி சொற்களை வகைப்படுத்தலாம். இதில் சாம்ஸ்கியின் 'மினிமலிஸ்ட் தியரி' (Minimalist theory) அல்லது எக்ஸ்பார் தியரி (X-Bar theory) போன்ற கோட்பாடுகளின் துணை கொண்டு சொற்களை வகைப்படுத்தலாம். இவ்வாறான கோட்பாடுகளின் அடிப்படையில் சொற்களை வகைப்படுத்தி மொழிபெயர்ப்புப் பணியில் மென்பொருள் உருவாக்கத்திற்கு வகை செய்யலாம்.

8.2 இயந்திர மொழிபெயர்ப்பு

1930-லிருந்து 1954 வரை மேலை நாடுகள் இயந்திர மொழிபெயர்ப்பில் ஆழ்ந்த கவனம் கொண்டிருந்தன. இக்காலக் கட்டத்தில் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பு முறை ஏகபோகமாக ஆதரிக்கபட்டது. இரண்டாவது நிலையில் பார்த்தால் 1956-லிருந்து 1966 வரை அனைத்து நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்ட தரமான முழுவதும் தானாக இயங்கும் தானியங்கி இயந்திரம் மொழிபெயர்ப்பு பணிக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இதனை Automatic Language Processes of Indian Committee என்ற அமைப்பு ஆதரித்து வந்துள்ளது.

அமெரிக்க, சீனா, பிரான்சு ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக் கழகங்களும், ஆய்வு நிறுவனங்களும் இயந்திர மொழிபெயர்ப்பில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுள்ளன. அமெரிக்காவில் உருவாக்கப்பட்டுள்ள 'சிஸ்ட்ரான்'

(SYSTRAN) 'லாகோஸ்' (LOGOS) என்ற அமைப்பு மனித உதவியுடன் நடைபெறும் இயந்திர மொழிபெயர்ப்புகளில் ஒன்றாகும். இதில் மூன்று வகையான மொழிபெயர்ப்பு நடைபெறுகின்றன. முதலாவதாக 'நேரடி மொழிபெயர்ப்பு முறை' (Direct Translation Approach) இதில் ருஷ்ய மொழிக்கும், ஆங்கில மொழிக்கும் இடையில் மொழிபெயர்ப்பு நடைபெறுகின்றன. இரண்டாவதாக மறைமுகமான மொழிபெயர்ப்பு முறை (Indirect approach of Translation). இதில் தாய் மொழிகளுக்குள்ளேயே நிகழும் மொழிபெயர்ப்பு (Interlingual Model) முறை மற்றொன்று மாற்றுதல் முறை (Transfer Model) ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன.

8.2.1 மாற்றுதல் முறை

மொழிபெயர்ப்பு என்பது ஒரு மொழியில் சொல்லப்படும் செய்திகளை மற்றொரு மொழிக்கு மாற்றியமைக்கும் செயல்முறையாகும். இது மொழியியல் அமைப்பிற்கும், தன்மைக்கும் ஏறப மூலமொழியில் காணப்படும் பொருள், சுவை, தன்மை போன்றவை சிறிதும் மாறாமல் செய்யப்பட வேண்டும். மூலம் எதுவாக இருந்தாலும் அதனைப் பெறும்மொழி நிகரன்களால் சரியாக பதிலீடு செய்வதே முழுமையான மொழிபெயர்ப்பாகும். நெய்டா (1967) கணினி மொழிபெயர்ப்பில் மூலமொழியிலுள்ள கவிதைகள், நாடகங்கள், இலக்கியப் பாடல்கள், முருகியலின்பம் பயக்கும் சொற்களுக்குப் பெறும்மொழியில் இணையான சொற்களைப் பதிலீடு செய்வது என்பது இயலாத காரியமாகவே இன்றும் உள்ளது எனக் குறிப்பிடுகின்றார். ஏனெனில், இவ்வகையான சொற்கள் தனிப்பட்ட மொழிநடையும், பொருளுணர்வுகளையும் கொண்டு விளங்குவதால் இதுபோன்ற சிரமத்திற்கு உள்ளாக நேரிடுகிறது. ஆகவே, கணினியைப் பொறுத்தவரை சொற்களுக்கு இலக்கண பதிலீடும், நேரடி சொற்பொருள் பதிலீடும் கொடுக்கப்படுகின்றன.

கணினியில் 'மெட்டல்' (METEL) என்ற அமைப்பின் மூலமாக ஜெர்மானிய மொழிக்கும் ஆங்கில மொழிக்குமிடையே மொழிபெயர்ப்பு நடைபெற்று வந்துள்ளது. இந்த முறையில் மொழியமைப்பு ரீதியான பனுவல் மட்டுமே கணினி மூலமாக மொழிபெயர்க்க முடியும் (Formal Text only translate by the Computer) என்பதை அறிவியல் ஆய்வு தெரிவிக்கின்றது.

8.2.2 மாற்றுதல்

மூலமொழியிலிருந்து கருத்தினை, பெறும்மொழிக்கு மாற்றம் செய்யும்போது அந்தந்த மொழியமைப்பு குறுக்கீடு செய்கிறது. இக்குறுக்கீட்டால் மொழிமாற்றத்தில் அமைப்பு மாற்றம் முதலிடத்தில் சிக்கல்களை உண்டாக்குகின்றது. மொழியமைப்பில் புற அமைப்பு (Surface structure) மொழி அமைப்பினை கருத்தில் கொண்டு மொழிபெயர்ப்பாளன் மொழிபெயர்ப்பதைக் காட்டிலும் அக அமைப்பு (Deep structure) மொழியமைப்பினையும் உணர்ந்து சொற்களைப் பதிலீடு செய்வது முக்கியப் பணியாக அமைகின்றது.

8.2.2.1 கணினியில் மொழிமாற்றம்

கணினியில் மாற்றுதல் நிகழ்வுகள் கீழ்கண்ட அமைப்பின் மூலம் விளக்கலாம்.

முதல்நிலை



மூலமொழியிலுள்ள சொற்களின் அகராதி மற்றும் சொற்களுக்குரிய இலக்கண உறவுகளைப் பகுப்பாய்வு செய்ய வேண்டும். பகுப்பாய்வுக்குட்படுத்தப் பட்ட சொற்களை அம்மொழிக்குள்ளேயே நிகழும் இலக்கண உறவுகளையும் வேறுபாட்டினையும் அடையாளம் கண்டுணரவேண்டும். பிறகு, மூலமொழிச் சொற்களின் இலக்கண அமைப்போடு பெறும்மொழி சொற்களின் இலக்கண அமைப்போடு பதிலீடு செய்து சரியான நிகரன்களைக் கண்டறிய வேண்டும்.

இரண்டாம் நிலை



இரண்டாவது நிலையில் மூலமொழியிலுள்ள பகுதியை உருபனியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி சொற்களின் இலக்கண குறியீடுகள் பதிவு செய்யப்படுகின்றன பிறகு, சொற்றொடர் நிலையில் என்ற செயல்பாடு பகுப்பாய்வு செய்யப்பட்டு மூலமொழியமைப்பினை மாற்றுதல் நடைபெறுகின்றது. இந்த நிலையில் சொற்றொடரில் வரும் தொடர்களை எப்படி வேண்டுமானாலும் மாற்றலாம். ஆனால் சொற்றொடருக்கும் தொடருக்கும் இடையே சொற்களை மாற்ற முடியாது. ஏனெனில் இங்கு இலக்கணக் கூறுகள் மற்றும் அமைப்புகளில் குறியீட்டு முறையில் பதிலீடு செய்து நிரந்தரமாக பதிவு செய்யப்பட்டுவிட்ட பகுதியாகும். அடுத்து, சொல் நிலையில் பதிவு மாற்றம் செய்தல் ஆகும். இந்த பகுதியில் இருமொழி அகராதி தயாரிக்கும் பணி நடைபெறுகிறது. பிறகு. சொற்றொடர்களை பொதுமைப்படுத்தி பெறும்மொழியமைப்புக்கேற்றவாறு சரிபார்த்தல் என்ற நிகழ்வு நடைபெறுகிறது. மொழியமைப்பு சரிபார்க்கப்பட்ட பின்பு உருபனியல் பகுப்பாய்வினை கூட்டிணைப்பு செய்து சரியான பெறும்மொழி நிகரன்களைக் கண்டறிந்து ஒன்று சேர்க்க வேண்டும். மூலமொழி அகராதி மற்றும இலக்கணத்தைப் பகுப்பாய்வு செய்தது போலவே பெறும்மொழி அகராதி மற்றும் இலக்கணத்தைப் பகுப்பாய்வு செய்து ‘கூட்டிணைப்பு’ (Synthesis) முறையில் சொற்களைத் தொகுத்து வைக்க வேண்டும். இம்முறையில்

மூலமொழிச் சொற்களுக்கு இணையான பெறும்மொழிச் சொற்களை அடையாளம் கண்டு கொள்ளலாம்.

8.2.2.2 கோட்பாடுகள்

1975-லிருந்து 1985 முதல் 'சாம்ஸ்கியின்' கோட்பாடுகள் கணினி மொழிபெயர்ப்பில் பயன்படுத்தப்பட்டது. இதில் GB, LFG, TAG போன்ற கோட்பாடுகள் முக்கிய பங்கினை வகித்தன எனலாம். 1986-இல் மொழியியல் ஆய்வு அறிஞர்கள் NLP (Natural Language Processes) மற்றும் NLU (Natural Language Understanding) ஆகிய இரண்டு முறைகளையும் கணினி மொழிபெயர்ப்பில் பயன்படுத்தினார்கள். இதில் 'மொழியியல் அறிவு' (Linguistic knowledge) 'உலக பொது மொழியியல்' அறிவு (Non-linguistic knowledge/world knowledge) ஆகியவற்றையும் இணைத்து செயல்பட துவங்கினர்.

8.2.2.2.1 சொற்பொருண்மையியல்

பயன்பாட்டு மொழியியலில் சொற்பொருண்மையியல் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. சொற்களின் தன்மை, மொழியியல் கூறுகள், வடிவமைப்பு, பொருளமைப்பு ஆகியவற்றை உலகப் பொருளோடு தொடர்புப்படுத்தி பொருள் விளங்க வைக்கும் உன்னதமான நிகழ்வுகளைக் கொண்டது சொற்பொருண்மையியல் என்றால் மிகையாகாது. கணினியில் 'யூனிட்ரான்' (UNITRAN) சொற்பொருண்மையியல் என்ற பன்மொழியாக்க முறையை பயன்படுத்தி ஆங்கிலம், ருஷ்யன், ஸ்பேனிஷ், ஜெர்மன் ஆகிய மொழிகளில் சொற்களை பதிலீடு செய்யும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

8.2.3 மொழிபெயர்ப்பில் கணினியின் பங்கு

ஒரு மொழியிலிருந்து பிறிதொரு மொழிக்கு கணினியின் மூலம் எவ்வாறு மொழிபெயர்ப்பு நிகழ்கின்றது என்பதை பார்க்கும் பொழுது கணினி மொழிபெயர்ப்பில் 'தனித்தனியாக குறியீடு செய்தல்' (Single entity) முறை பயன்படுத்தப்படுகின்றது. இது மூலமொழிக்கும் பெறும்மொழிக்கும் இடையே மட்டும் நிகழக்கூடியதாகும்.

மூலமொழி　　　　　　　　　பெறும்மொழி
(1)　　　　　　　　　　　(1)

மொழிக் கூறுகள் பல்வேறு உட்கூறுகளின் (Components) அடிப்படையில் பகுக்கப்படுகின்றன. உருபனியல் பகுப்பாய்வு முறை மொழி கட்டமைப்பு மற்றும் தொடர் அமைப்பு பகுப்பாய்வு முறை, சொற்பொருண்மையியல் பகுப்பாய்வு முறை, பண்பாட்டுச் சொற்கள் பகுப்பாய்வு முறை ஆகிய நிலைகளில் மொழிக் கூறுகள் மூலமொழியிலிருந்து பகுப்பாய்வு செய்யப்பட்டு பெறும்மொழிக் கூறுகளுடன் பதிலீடு செய்யப்படுகின்றன. ருஷியன்-தமிழ் கணினி மொழிபெயர்ப்பு எவ்வாறு செயல்படுகின்றது என்பதை செல்லமுத்து (1986) என்பவர் பின்வரும் வகையில் விளக்கம் தருகிறார். மூலமொழி உரையை உள்ளீடாக்கும் பகுதி, முன் திருத்தி (Pre-Processor) இலக்கண ஆய்வு, மொழிபெயர்த்தல், சொற்றொடரை உருவாக்குதல், இருமொழி அகராதி ஆகிய பகுதிகள் உள்ளன. ருஷ்ய மொழியை மொழிபெயர்க்கும்போது அம்மொழிக்கேற்ற அமைப்பு இலக்கண கூறுகள் இடர்பாடுகள் ஆகியவற்றிற்குத் தீர்வுகாணும் வகை ஆகியன கணினிக்கு (Input command) கொடுக்கப்படுகின்றன. முன் திருத்தி எனப்படும் அமைப்பு உரையை ஆய்வு செய்து இலக்கணத்தை மாற்றியமைக்கின்றது. சொற்றொடர்கள் சொற்களாகப் பிரிக்கப்பட்டு இலக்கணக் குறிப்பு, பகுதி, விகுதி, வினைச்சொல், பெயர்ச்சொல் முதலியன கண்டறியப்படுகின்றன. இலக்கணம் சார்ந்த குறிப்புகளை இருமொழி அகராதி கொண்டு ருஷ்யச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொல் பெறப்பட்டு மொழிபெயர்க்கப்படுகின்றது. குறிப்பாக வினைச் சொல்லாயின் அதன் இலக்கணப் பகுப்பின் மூலம் காலம், பால், விகுதிகள் ஆகியவற்றிற்குத் தக்கவாறு இணைகள் கண்டறியப்பட்டு சொற்கள் உருவாக்கப்படுகின்றன. மொழிபெயர்ப்பு நிகழும் பொழுது மூலமொழி உரையில் எழுத்து மற்றும் இலக்கணப் பிழைகள் இருப்பின் எடுத்துக்காட்டப்படுகின்றன. மேற்கண்டவாறு சொற்கள் மொழிபெயர்க்கப்பட்டபின் அவற்றைத் தொகுத்துச் சொற்றொடராக்குதல் என்கிற நிகழ்வு நடைபெறுகிறது. சொற்றொடராக்கும்பொழுது பெறும்மொழியான தமிழின் இலக்கணத்திற்கேற்பச் சொற்கள் அமைக்கப்படுகின்றன.

8.2.4 கணினி மொழிபெயர்ப்பின் வகைகள்

கணினி மொழிபெயர்ப்பில் மூன்று பெறும் பிரிவுகள் உள்ளன. அவையாவன,

1. மனித உதவியுடன் செயற்படும் கணினி மொழிபெயர்ப்பு (HACT).
2. கணினி உதவியுடன் நடைபெறும் மனித மொழிபெயர்ப்பு (CMAT) மற்றும்
3. கணினி தானாகவே மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பு (CMCT)

8.2.4.1 மனித உதவியுடன் செயற்படும் கணினி மொழிபெயர்ப்பு

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழிபெயர்க்கும்பொழுது தேவையான உதவிகளை மனிதனிடம் பெற்று கணினி மொழிபெயர்க்கிறது. இவ்வகை மொழிபெயர்ப்பு உலகெங்கிலும் தற்போது பயன்படுத்தப்படும் முறையாகும்.

8.2.4.2 கணினி உதவியுடன் நடைபெறும் மனித மொழிபெயர்ப்பு

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழிமாற்றம் செய்யும்பொழுது சொற்களுக்கு இணையான நிகரன்களையும், சரியான கலைச்சொற்களையும், மொழிபெயர்ப்பின் சிக்கல்களுக்கு ஏற்றவாறு பல சொற்களையும், உத்திகளையும் மொழிபெயர்ப்பாளனுக்கு அடையாளம் காட்டி உதவுகின்றது.

8.2.4.3 கணினி தானாகவே மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பு

கணினி தானாகவே மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பு இன்றளவிலும் ஆய்வு நிலையில் உள்ளதால் நடைமுறையில் இம்முறை பயன்படுத்தப்படுவது என்பது இயலாத காரியம் எனக் கருதலாம்.

8.2.4.1.1 மனித உதவியுடன் செயல்படும் கணினி மொழிபெயர்ப்பு

மனித உதவியுடன் செயல்படும் கணினி மொழிபெயர்ப்பும், கணினி உதவியுடன் செயல்படும் மொழிபெயர்ப்பும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவைபோல காணப்பட்டாலும், இரண்டுமே பெறும்மொழியின் சரியான இலக்கினை அடையவே முயலுகின்றன. இவ்வகை மொழிபெயர்ப்பில் மனிதன் கணினிக்கு கொடுக்கும் மொழிக்கூறு பகுதியைச் செம்மைப்படுத்துவது (Editing the input text), அகராதியை உருவாக்குவது (Preparing the dictionary), செம்மைப்படுத்துவதற்கு

முன்பாக அமைந்த பகுதியின் அமைப்பிற்கிணங்க திட்டத்தை எழுதுவது (Writing the programme according to the pre-edited input text) போன்ற செயல்முறைகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. ஆனால் அதே நேரத்தில் கணினி உதவி கொண்டு செயல்படும் மொழிபெயர்ப்பில் கணினியின் நேரடிப் பயன்பாடு மனிதனுக்கு மிகக்குறைந்த அளவிலேயே உதவி புரிவனவாக அமைந்துள்ளன. பெரும்பாலும், கணினி உதவியுடன் செயல்படும் மனித மொழிபெயர்ப்பு என்பது மனிதனால் மட்டுமே செய்யப்படுவதாக உள்ளது.

8.2.4.1.1.1 மனித உதவியுடன் செயல்படும் கணினி மொழிபெயர்ப்பின் உட்கூறுகள்

மனித உதவியுடன் செயல்படும் கணினி மொழிபெயர்ப்பு மூன்று வகையான உட்கூறுகளைக் கொண்டுள்ளது. அவையாவன.

அ. உட்செலுத்தும் உரை தயாரித்தல்
(Preparation of Pre-edited input text)

ஆ. இருமொழி அகராதி தயாரித்தல்
(Preparation of bilingual dictionary)

இ. இறுதிச் செம்மையாக்கம் (Post editor)

8.2.3.1.1.1.1 உட்செலுத்தும் உரை தயாரித்தல்

கணினியில் உட்செலுத்தும் உரை தயாரிப்பதற்கு முன் கவனத்தில் கொள்ள வேண்டியது.

1. மொழிபெயர்க்கப்பட வேண்டிய பகுதியை கணினியின் செயல்முறைத் திட்டத்திற்குத் தகுந்தாற்போல் செம்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. சொற்கள். தொடர்கள் ஆகியவற்றுக்கேற்றாற்போல் குறியீடு இல்லாத மொழிக் கூறுகளுக்கு குறியீடு இட்டு கணினியின் மொழியமைப்பிற்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்ள வேண்டும்.

3. ஆங்கிலத்தில் உள்ள கூட்டு வாக்கியம்-கலவை வாக்கியம் ஆகியவற்றுக்கு இணையாக தமிழில் சில இணைப்புக் குறியீட்டின் மூலம் இணைத்து ஒரே அலகாகத் (Single Unit) கணினியில் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்.

8.2.4.1.1.1.2 இருமொழி அகராதி தயாரித்தல்

கணினிக்குத் தக்கப்படி இருமொழி அகராதி தயாரிக்க வேண்டும். மூலமொழியிலுள்ள சொற்களுக்கு இணையான நிகரன்களைக் கொண்ட சொற்களைக் கொண்டு தயாரித்தல் அவசியம். அப்பொழுதுதான் மொழிபெயர்க்க வேண்டியப் பகுதி சிறப்பானதாக மொழிபெயர்க்க முடியும்.

இருமொழி அகராதி தயாரித்தல் சொற்களுக்கு இணையான பிறமொழிச் சொற்களை அடையாளம் கண்டு அதன் பொருளை உணர்ந்து கொள்வதே முக்கியமான பணியாகும். எனவே, ஒரு மொழியிலுள்ள வழக்காற்றுச் சொற்கள், தொடர்கள், மொழியியல் கூறுகள் மற்றும் இலக்கண உறவுகள் ஆகியவற்றை ஆராய்ந்து மனதில் கொள்வது இன்றியமையாததாகும்.

8.2.4.1.1.1.3 இறுதிச் செம்மையாக்கம்

இருமொழி அகராதியின் உதவிக்கொண்டு கணினி பொருத்தமான நிகரன்களை தெரிவு செய்ய தயாராகும். மூலமொழிக் கூறுகளின் அமைப்பிற்கேற்றவாறு பெறும்மொழிக் கூறுகள் மாற்றியமைக்கப்படும். இறுதி செம்மையாக்கத்தில் துணைத் திட்டங்கள் (Sub-Programmes) தயாரிக்கப்பட்டு அவை முதன்மைத் திட்டத்துடன் (Main-Programmes) இணைக்கப்படும். இந்நிகழ்வுகளில் மூன்று வகையான மாற்றங்கள் நிகழ்கின்றன. அவையாவன,

1. இலக்கண உறவுகள் இனங்கண்டு கொள்ளப்பட்டு பெறும்மொழி அமைப்பிற்கேற்றவாறு தேவையான இடங்களில் சில குறியீடு மூலம் மாற்றியமைக்கப்படுகின்றன.

2. பண்பாட்டு மொழியியல் கூறுகள் இனம் கண்டுகொள்ளப்பட்டு அதற்கு சமமான பதிலீடுகளாக மாற்றியமைக்கப்பட்டுகின்றன.

3. சொற்பொருண்மையியலில் அதிக கவனம் செலுத்தப்பட்டு உலகப் பொருளோடு கூடிய பொருண்மையியலை பெறும்மொழிக்குத் தக்கவாறு மாற்றியமைக்கப்படுகின்றது என்பனவாகும்.

அறிவியல் முன்னேற்றத்தால் ஒவ்வொரு துறையிலும் இன்றைக்கு பல மாற்றங்களினால் பல புதுமைகள் ஏற்பட்டுக் கொண்டுள்ளன. கணினி வாயிலாக நடைபெறும் மொழிச் செயற்பாடுகள் அனைத்தும் செம்மையாக நடைபெற்றுவருவதை காணமுடிகின்றது. இந்த நிலையில், கணினி வழியாக மொழிபெயர்ப்பு செய்வது என்பது இன்றளவும் ஆய்வுக்குரிய நிலையாகவே

உள்ளது. ஆகவே, கணினி மொழிபெயர்ப்புக்கான செயல்பாட்டி , புதிய ஆய்வு நெறி உத்திகளும், கோட்பாடுகளும் உருவாக்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம் என்றால் மிகையாகாது.

மொழிபெயர்ப்பை விரைவாக செய்வதற்கும், அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியில் மொழிபெயர்ப்பாளர்கள் கணினியோடு தன்னை இணைத்துக்கொள்வதற்கும், கணினி மொழிபெயர்ப்பினைப் பற்றிய ஆய்வு நிரம்ப மேற்கொள்ளப்பட வேண்டும். இம்முறை கடினமாகத் தோன்றினாலும் இன்றையத் தமிழ் வழிக்கல்வி போதனையில் பல்வேறு நூல்கள் தமிழாக்கம் செய்யப்பட வேண்டிய கட்டாயத்தில் மொழிபெயர்ப்பாளர்கள் இருக்கின்றார்கள். எவ்வளவுதான் கணினி தன் வேகத்தையும், திறனையும் வெளிப்படுத்தினாலும் ஓர் மொழிப் பெயர்ப்பாளனுடைய இடத்தை இயந்திரம் பூர்த்தி செய்ய இயலாது.

ஒரு மூலமொழியில் இலக்கண உறவுகளை ஆய்வு செய்து கணினிக்கு திட்டம் (Programming) வகுத்து மற்றொரு மொழிக்கு மாற்றம் செய்ய முடியுமே தவிர ஒரு மூலமொழியின் நடைமுறை மொழியை (Colloquial Language) கணினியின் மூலம் மொழி மாற்றம் செய்வது இயலாததாகும். அது ஒரு மொழிப்பெயர்ப்பாளன் ஒருவராலே ,யும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இயல் - 9

மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும்

9. மொழிபெயர்ப்புச் சிக்கல்களும், தீர்வுகளும்

ஒரு மூலமொழிப் படைப்பாளனுக்கு ஏற்படாத கவலைகள், பிரச்சனைகள் அனைத்தும் ஒரு மொழிப்பெயர்ப்பாளனுக்கு ஏற்பட்டு விடுவதுண்டு. தான் மொழிபெயர்க்கக் கூடிய மொழிபெயர்ப்பு சரியாக அமைதல் வேண்டும் செம்மையுற வேண்டும் என ஒவ்வொரு மொழிபெயர்ப்பாளனும் கருதுகிறான். மொழிபெய்ரப்பு செம்மையுறவேண்டும் என்ற முன்முனைப்பின் போது பல்வேறு சிக்கல்களையும், பிரச்சனைகளையும் சமாளிக்க வேண்டியிருக்கின்றது. அமெரிக்க அகராதியில் turn. என்ற சொல்லுக்கும் 100-க்கும் மேற்பட்ட பொருள்கள் தரப்பட்டுள்ளதை மொழிபெயர்ப்பாளன் தன் கவனத்தில் கொள்ள வேண்டும். இதிலிருந்து பல உண்மைகள் புலப்பாட்டுக்கு வரும். மேற்குறிப்பிட்ட சொற்கள் புதுச்சொல்லோ அல்லது புரிந்துகொள்ள முடியாத சொல்லோ இல்லை. இருந்தாலும், அந்த சொற்கள் இடம் பெறுகின்ற இடம், சூழ்நிலை, இவற்றைப் பொருத்து பொருள்மாற்றம் உண்டாகின்றது. எனவே, மொழிபெயர்ப்பில் மொழிபெயர்ப்பாளன் ஆழ்ந்த கவனத்துடன் செயல்பட வேண்டியது அவசியமாகின்றது. இந்த நிலையில், ஒரு மொழிபெயர்ப்பாளன் வாக்கிய அமைப்பையும், சொற்றொடர்களையும் அப்படியே மொழிபெயர்த்து விட்டால் போதாது. சொல்நயம், சொற்சேர்க்கை, தட்டுத் தடையில்லாத நடை முதலானவற்றிலும் தக்க கவனம் செலுத்தி, ஆற்றல் மிகுந்த தமிழில் மொழிபெயர்க்க வேண்டிய பொறுப்பு மொழிபெயர்ப்பாளனுக்கு உண்டு.

மொழிப்பெயர்ப்புச் சிக்கல்களை இரண்டு விதங்களில் அணுகலாம். ஒன்று 'வடிவம்', மற்றொன்று 'பொருள்', வடிவம் என்பது வாக்கிய அமைப்பு, சொல்லாட்சி என்பன அடங்கும். இந்நிலையில் சில சிக்கல்கள் உண்டாகின்றன. எடுத்துக்காட்டாக, வாக்கியஅமைப்பில்-கவிதை, உரைநடை ஆகியவை பல சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. சொல்லாட்சியிலும் மொழி நடைக்கூறுகள் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. மொழியில் இலக்கியச் சொற்கள், மரபு சார்ந்த வழக்குச் சொற்கள் ஆகியவை சிக்கல்களை உண்டாக்குகின்றன. சிலேடை, அணி நயங்கள், இரட்டைக்கிளவி, ஆகுபெயர், அடுக்குத் தொடர், சிறப்பு வழக்குகள், கலாச்சார வழக்குகள், உவம உருவக வழக்குகள், பிறவுரை நல வழக்குகள் ஆகியவைகளும் மொழிபெயர்ப்பில் சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன.

.1 சொல்லும் பொருண்மையும்

ஒரே சொல் பல பொருளைத் தருகின்ற நிலையில் மொழி பெயர்ப்பாளர்களுக்கு இடர்பாடு உண்டாகலாம். எனவே, சொற்களின் பொருண்மையைப் பற்றி அறிய வேண்டியது அவசியமாகிறது. சொற்கள் எவ்வாறு பல்வேறு பொருளைச் சுட்டுகின்றன என்பதைப் பற்றி பொருண்மையியல் (Semantics) விளக்குகின்றது. எடுத்துக்காட்டாக hand. chain, man போன்ற ஆங்கிலச் சொற்கள் பெயர்ச் சொல்லாகவும், வினைச் சொல்லாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மொழிஅமைப்பில் அதன் சூழ் பயன்படுத்தப்படும் பொருளைத் தெளிவாகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் செய்தி பரிமாற்றம் செம்மையாக நடைபெற முடியும். சொற்களின் பயன்பாட்டில் அதன் சூழ்நிலையிலிருந்து அச்சூழலுக்கேற்ற பொருளை எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடமில்லாமல் மொழியியல் அடிப்படையிலும், அறிவியல் ரீதியாகவும் அணுகலாம். இதனால், ஒரு சொல் தொடரமைப்பில் எத்தகைய பங்கு வகிக்கிறது என்பது பற்றியும் அச்சொல் அத்தொடரில் எத்தகைய ஈடுபாட்டோடு பொருளை விளக்குகின்றது என்பது பற்றியும் அறிய முடியும். முதலாவது வகை தொடரில் பொருளமைப்பு (Syntactic approaches of meaning) இரண்டாவது வகை பொருண்மை அமைப்பு (Semantic approach) என்பனவாகும். பொதுவாக இவ்விரு வகை அணுகுமுறைகளைப் பற்றி அறிந்து வைத்திருப்பது மொழிபெயர்ப்பாளரது கடமையாகும்.

சொற்களின் பொருண்மையைப் பற்றி தொடர்பியலில் பல பொருள்கள் வழங்குகின்றன. எடுத்துக்காட்டாக,

1. He Cut his hand.
2. He Cut off a hand off bananas.
3. Hand me the book.

இந்த மூன்று தொடர்களில் மூன்றாவது தொடர் மற்ற இரு தொடர்களில் இருந்து தனித்துக் காணப்படுகின்றது. மூன்றாவது தொடரில் hand எனும் சொல் வினைச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், முதலிரண்டு தொடர்களில் இச்சொல் பெயர்ச்சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதலாவது தொடரில் hand எனும் சொல் மனிதர்களின் உடலுறுப்புக்களையும், இரண்டாவது தொடரில் அச்சொல் வாழைப்பழச் சீப்பையும் குறிக்கிறது.

சொற்களின் பொருள்கள், பிரிவுகள், சொற்களுக்கு பொருள் உணர்த்தும் தன்மைகள் ஆகியனவற்றை தொடர்கள் மூலம் அறிய முடிகிறது.

The horse runs.

The man runs.

The dog runs.

The water runs.

The nose runs.

The tap runs.

The motor runs.

The business runs.

The cinema runs.

The line runs on the door.

The runs line abruptly up on this graph.

9.2 இரண்டாவது மூலமும் மூன்றாவது மூலமும்

திருக்குறள் சுமார் 26 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தமிழ் மூலத்தைப் படித்துவிட்டுதான் அதனின்று தங்கள் மொழிகளில் மொழிபெயர்த்திருப்பார்கள் என்று கூறமுடியாது. அதுபோல மார்க்சினுடைய நூல்கள் அனைத்தும் ஜெர்மனியிலிருந்து நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டவை எனச் சொல்ல முடியாது. பெரும்பாலும் ஆங்கிலத்திருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம். திருக்குறள் கவிதை மொழிபெயர்ப்புகளை ஆழ்ந்து நோக்கினால் மூலத்தில் பெறுகின்ற உணர்வை மொழிபெயர்ப்புக்கள் தரவில்லை என்பதை உணரமுடிகிறது. இந்நிலையில் அதனை அடியொற்றி மீண்டுமொரு மொழிபெயர்ப்பு ஒருமொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு செய்யும்போது கருத்துச்சிதைவு ஏற்பட வாய்ப்பு உண்டாகிறது. இதனை தவிர்க்க மூலமொழியிலிருந்து மொழிபெயர்ப்பதே சிறந்ததாகும். மூலத்தினைத் தேர்வு செய்வதில் மொழிபெயர்ப்பாளர்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும்.

9.3 பழமொழிகள்

'பழமொழி' என்ற ஒருசொல் ஆங்கிலத்தில் Proverb, manim, motto, epigram, saw, adage, saying எனப் பல சொற்களால் சுட்டப்படுகின்றன. இதனை முதுமொழி என்றும் சொல்வார்கள் உண்டு. பழமொழிகள் ஒரு நாட்டிலுள்ள இனத்தின் வரலாற்றையும், பண்பாட்டுக் கூறுகளையும், கலாச்சாரக் கூறுகளையும் சித்திரிக்கும் காலக்கண்ணாடியாகும். இன்றைக்கு நாட்டுப்புறப் பாடல்கள் சிறந்து விளங்கி நாட்டுப்புற இலக்கியமாக சிறப்புச் செய்து அடித்தளமிட்டது பழமொழிகள்தான் என்றால் மிகையாகாது. (From prov to folklore) எனவே இலக்கியங்களோடு பழமொழிகளைச் சேர்ப்பது என்பது தவிர்க்க முடியாததாகிறது. இந்நிலையில் பழமொழிகளை மொழிபெயர்த்துவிடுவது என்பது சாதாரணமான செயல்பாடு அன்று. ஒரு குறிப்பிட்ட பழமொழி, அப்பழமொழி ஆட்கொண்டுள்ள சமூக உணர்வை வெளிப்படுத்துவதாக மொழிபெயர்ப்பு அமைதல் சிறப்பு. மாற்றுமொழியாளர் அப்போதுதான் அம்மொழியின் உள்ளார்ந்த பொருளை உணர்ந்து கொள்வர். இருமொழி மரபுத்தொடர் விளக்கத்திரட்டுகள் இதற்கு உதவுவதாக அமையும்.

Art is long and life is short.
கல்வி கரையில, கற்பவர் நாள் சில.

Haste is waste.
பதறாத காரியம் சிதறாது.

Hunger is the best sance.
பசி ருசியறியாது.

Little strokes fell great oaks.
அடிமேல் அடிவைத்தால் அம்மியும் நகரும்.

Make hay while the sun strines.
காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

As rate as hen's teeth.
அத்தி பூத்தாற்போல.

மேற்குறிப்பிட்ட இணையான/ஒத்த பழமொழிகள் இல்லாத நிலையில் பழமொழிபோல ஒலிக்குமாறு மொழிபெயர்ப்பதைத் தருவது தவிர வேறு வழியில்லை.

9.4 வழக்குச் சொற்களும் நகைச்சுவையும்

பழமொழிச் சொற்கள் மற்றும் மரபுச் சொற்கள் போன்றே வழக்குச் சொற்களையும், நகைச்சுவையையும் மொழிபெயர்ப்பது மொழிபெயர்ப்பாளருக்கு கடினமாகும். அன்றாட பேச்சு வழக்கில் ஏற்படும் சிரிப்பொலிகளை மொழிபெயர்ப்பது என்பது மிகக் கடினமான செயலாகும். உறுதியாக இவற்றினை மூலமொழியில் மட்டுமே வாசகன் இரசித்துணர முடியும். மொழிமாற்றம் அடையும் போது சிரிப்பும், இரசனையும் கூட இல்லாமல் போகலாம். எடுத்துக்காட்டாக, ஆனந்த விகடனிலும், குமுதத்திலும் வந்த சிரிப்புகளைக் காண்போம்.

'என் ஒய்ஃபுக்கும் எனக்கும் ஒரு சின்ன ஊடல். அதான் அவ என்னை அடிக்காம ஆளுவெச்சே அடிச்சிருக்கா டாக்டர்!...'

உமக்கெல்லாம் ஊடல் ஒரு கேடா, இரும், காயத்துக்கு மருந்து போடறேன்!...

-குமுதம்

"வச்சிக்கலையா?"

"சின்னக் குடிசை செட்-அப் பண்ணிட்டேன்!"...

- ஆனந்தவிகடன்

மேற்கண்ட இரண்டு சிரிப்புகளிலுமே பாலுணர்வு சம்மந்தப்பட்ட தமிழ் மரபு சம்மந்தப்பட்ட செய்திகள் உள்ளன. மொழிபெயர்ப்பது சுலபமானதாகத் தோன்றினாலும், இரண்டாவது மொழியில் படிக்கும் வாசகனுக்கு எந்த அளவிற்கு சிரித்து மகிழ முடியும் என்பது சொல்ல முடியாது. மேலும், 'Small house' என்ற சொல்லை 'சின்ன வீடு' என மொழிபெயர்த்தால் வாசகர்கள் யோசிக்கத்தான் செய்வார்கள். ஏனெனில் 'சின்ன வீடு' அண்மைக் காலங்களில் 'சிறிய வீடு' என்றாகிவிட்டது. 'சின்னக் குடிசை செட்-அப்' என்பதில் 'Small house' என்பதன் நேரிடைப் பொருளைத் தருவது போல் காட்டுகின்றது. எனவே, அற்ப விஷயங்கள் கூட மொழிபெயர்ப்பாளனுக்கு மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி விடக்கூடும்.

வழக்குச் சொற்கள் நிறைந்த வாக்கியங்களை, பத்திகளை விட்டுவிட்டு சாதாரண நடையினைப் பயன்படுத்துதல் சிறந்ததாகும். 'உன்னைப் போல் ஒருவன்' நாவலில் ஜெயகாந்தன் சென்னைச் சேரிப்பகுதி மக்களின் வழக்கிலே இருக்கின்ற சொற்களைத் தருகின்றார்.

இப்பப் பார்க்கணுமே அதே! படா ஸ்டைலு
ஆளும் சும்மா சம்னுகீறா.

இங்கு ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறிப்பிட்டப் பகுதி மக்களால் மட்டும் பேச்சப்படுகின்ற சொற்கள் மட்டும் அல்லாமல் மற்றைய மொழிச் சொற்களும் அடங்கியுள்ளன. 'படா' ஹிந்தி சொல். ஸ்டைலு-ஆங்கிலச் சொல். இதனை ஆங்கில வடிவமாக்கும்மபோது,

Now you can see her very form

Very elegant and beautiful is the person too

என்றுதான் அமைக்க வேண்டியிருக்கிறது. வழக்கு சொற்கள் இவ்வாறான சிக்கல்களைத் தந்தாலும் மேற்கூறிய வழியிலேயே மொழிபெயர்க்கச் செய்வது நலமாகும்.

9.5 அடிக்குறிப்புகள்

மொழிபெயர்க்கும்போது சில சொற்கள் அல்லது தொடர்கள் பற்றி விளக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றன. எனவே, அக்குறிப்பு (footnote) தரபபடுகின்றன. அடிக்குறிப்பு தரப்படவேண்டியது மிக அவசியமானதாகும். ஆனால் குழந்தைகளுக்கான மொழிபெயர்ப்புக்களில் இதனைத் தவிர்த்து தேவைப்படும் விளக்கத்தினை ஓரிரு சொற்களால் சுட்டி எழுதலாம்.

9.6 விடுகதைகள்

விடுகதைகள் என்பது சொற்களையும், அதனோடு சேர்ந்து பொருளும் வருமாறு அமைவதாகும். இந்நிலை அமையாவிட்டால் விடுகதைக்கு விடையளிப்பது சிரமமாகும். ஆனால், சொல் நயமும் பொருளும் ஒரு சேர அமைகின்ற நிலையில் அதனைப் பெயர்க்க முடியாது. விடுகதையினை விளக்கி மொழிபெயர்த்தால் அது விடுகதையாக அமையாது.

அறிவின் மறுபெயர்

இரவில் வருவது - அது என்ன? என்பதை

A Synonym of knowledge

It comes at night - What is it? என்று பெயர்க்கலாம் என்றாலும் தமிழிலே 'மதி' என்ற சொல், அறிவையும், சந்திரனையும் ஒருசேரக் குறிக்கும் சொல்லாகும். இதனை ஆங்கிலத்தில் அமைக்க முடியவில்லை.

இம்மாதிரியானவற்றை மொழிபெயர்க்க முடியாதவை (Untranslatability) என்ற வகையில் மொழிபெயர்ப்பினை அடக்கலாம்.

வரலாற்றுக் காலம் தொட்டே மொழிபெயர்ப்பு நடைமுறைக்கு வந்துவிட்டாலும், இந்த நூற்றாண்டில் அதுவும் முப்பதுக்கும் பிறகுதான் முக்கியத்துவம் பெறத் தொடஙகியது. எழுபதுகளில் முழுமை பெற்று விளஙகியது. மொழிபெயர்ப்புத் துறைகள் பல இருப்பினும், மொழிபெயர்ப்புக் கொள்கைகளை வரையறை செய்யும் அளவிற்கு மொழிப்பெயர்ப்பியல் இன்னும் தமிழில் வளர்ச்சி அடையவில்லை எனலாம். மேலை நாடுகளில் மொழிபெயர்ப்புக் கொள்கைகளும், கோட்பாடுகளும் உருவாக்கப்பட்டு மொழி வளர்ச்சிக்கும் மொழித் தொடர்புக்கும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 'மொழிபெயர்ப்பு' என்பது அனைத்து துறைகளையும் உள்ளடக்கியதால் மொழிபெயர்ப்பாளர்களிடம் இருந்து பல்வேறு விதமான திறமைகள், ஆற்றல்கள், நடைகள் ஆகியன எதிர்பார்க்கப்படுகின்றன. நம் தமிழ்மொழியில் இந்தத் துறை விரைவில் வளம்பெறும் எனவும், தமிழக அரசும் இத்துறையின்பால் ஆழ்ந்த ஆர்வம் செலுத்தும் எனவும் நம்பலாம்.

புதிய வழக்குச் சொற்கள்

வளர்ந்து வரும் அறிவியல் தொழில் நுட்ப உலகத்தில் பழைய வழக்காற்றுச் சொற்கள் படிப்படியாக மறைந்து கொண்டு வருகிறது. அத்தகைய மாற்றங்களை மொழிபெயர்ப்பாளர்கள் கவனமாக இனம் கண்டறிந்து தேவைப்படும்போது அச்சொற்களைப் பயன்படுத்துவதில் தயக்கம் காட்டக் கூடாது. முப்பதாண்டுகளுக்கு முன்பு வரை 'அத்யக்ஷகர்' என்ற சொல் நடைமுறையில் 'துணைவேந்தர்' என்ற சொல்லுக்கு பதிலாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. அந்த சொல்லையே அதிகம் பயன்படுத்தப்பட்ட சூழ்நிலையில் ஒரு மொழிபெயர்ப்பாளர் தொடர்ந்து இக்காலத்திற்கும் பயன்படுத்தினால் வாசகர்கள் குழப்பமும் பொருள் தெளிவின்மையும் நேரிடலாம். எனவே, ஒரு மொழிபெயர்ப்பாளன் வழக்கற்றுப் போன சொற்களையும் வழக்கத்தில் உள்ள சொற்களையும் இனம் கண்டு கொள்ளுதல் என்பது அவசியமாகிறது.

பழைய **வழக்குச் சொற்களும் புதிய வழக்குச் சொற்களும்:**

அபிவிருத்தி	-	வளர்ச்சி முன்னேற்றம்
அபேட்சகர்	-	வேட்பாளர்
அசௌக்கியம்	-	உடல் நலமின்மை
அசௌகரியம்	-	வசதி குறைவு, வசதியின்மை
அப்பியாசம்	-	பயிற்சி
அலஷியம்	-	இகழ்ச்சி
அத்யக்ஷகர்	-	துணைவேந்தர்
ஆகர்ஷணம்	-	கவர்ச்சி, ஈர்ப்பு .
ஆமோதித்தல்	-	வழிமொழிதல், உடன்படல்
ஆசனம்	-	இருக்கை
ஆஸ்தி	-	சொத்து
ஆஜர்	-	வருகை
இஷ்டம்	-	விருப்பம், விழைவு
இலாகா	-	துறை

விஷேடம்	-	சிறப்பு
வியாசம்	-	கட்டுரை
வியாஜ்யம்	-	வழக்கு
விலாசம்	-	முகவரி
வேஷம்	-	ஒப்பனை
ஸ்நானம்	-	குளியல்
ஸ்நானகட்டம்	-	படித்துறை
ஸ்திரி	-	பெண்
ஸ்பஷ்டமாக	-	தெளிவாக
ஸ்தம்பம்	-	தூண்
ஸ்தானம்	-	தரம், நிலை
ஸ்தானீகர்	-	தூதுவர்
ஸினிமா	-	திரைப்படம்
ஜில்லா	-	மாவட்டம்
ஜனத்தொகை	-	மக்கள்தொகை
ஜனகணிதி	-	குடிக்கணக்கு
ஜனனம்	-	பிறப்பு
ஜம்பம்	-	வீண்பெருமை
ஜவாப்	-	பதிலி, காரணம்
ஜலயம்	-	நீர்
ஜலசந்தி	-	நீரிணைப்பு
ஜலதாரை	-	சாக்கடை, வடிக்கால்
ஜாமீன்	-	ஈடு, பிணை
ஜாபிதா	-	அட்டவணை, பட்டியல்
ஹாரம்	-	மாலை
லஷியம்	-	குறிக்கோள், இலக்கு
யுத்தம்	-	போர்

1960-களில் தமிழ் மறுமலர்ச்சி என்ற ஓர் இயக்கம் உருவாவதற்கு முன்னர் பெரும்பாலும் தமிழில் வடமொழிச் சொற்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

உத்தியோகம்		வேலை, பதவி
உத்தியோகஸ்தர்	-	அதிகாரி, அலுவலர்
உபதேசம்	-	அறிவுரை
உபாயம்	-	வழி, வாய்ப்பு
உபாத்தியாயர்	-	ஆசிரியர்
உஷ்ணம்		வெப்பம்
ஊர்ஜிதம்	-	உறுதி
ஐசுவரியம்	-	செல்வம், சொத்து
கக்கூஸ்	-	கழிவரை, கழிப்பிடம்
கச்சேரி		நிலையம், அலுவலகம்
கஜானா	-	கருவூலம்
கடாக்ஷம்	-	கருணை
கிரந்தகர்த்தா	-	நூலாசிரியர்
குமாஸ்தா	-	எழுத்தர்
குஷி	-	மகிழ்ச்சி
சம்பாசனை	-	உரையாடல்
சமாஜம்	-	கழகம், குழு, சபகம்
சத்தியாகிரகம்	-	ஒத்துழையாமை
சந்தோஷம்	-	மகிழ்ச்சி
சாஸ்திரம்	-	இயல்
சுகவீனம்	-	நலமின்மை
சுயராஜ்யம்	-	தன்னாட்சி
சிங்காரவனம்	-	பூங்கா
சிநேகம்	-	நட்பு, தோழமை
சிரசாக்கினை	-	தூக்குத்தண்டனை
சீதோஷ்ணம்	-	தட்பவெப்பம்
சைனியம்	-	படை
ஞாபகார்த்தம்	-	நினைவு

பஹிஷ்கரி	-	புறக்கணி
பரீட்ஷை	-	தேர்வு
பாஷை	-	மொழி
பாதரட்சை	-	செருப்பு, மிதியடி
பாடசாலை	-	பள்ளிக்கூடம்
புஷ்டியா	-	வலுவுள்ள
பிரயோஜனம்	-	பயன்
பிரத்தியச்சமான	-	தெளிவான
பிரஷ்டம்	-	புறக்கணிப்பு, தள்ளி வைப்பு
பிரேபித்தல்	-	முன்மொழிதல்
பூஜி	-	வழிபாடு
பொக்கிஷதாரர்	-	பொருளாளர்
போதனைமுறை	-	கற்பிக்கும்முறை
போஜனம்	-	சாப்பாடு
ரஸ்தா	-	சாலை
ராஜ்யம்	-	அரசு
திரஸ்கரி	-	மறு
துஷ்டன்	-	முரடன்
துவிச்சக்கரவண்டி	-	சைக்கிள், மிரிவண்டி
தூஷனை	-	பழிச்சொல், நிபந்தனை
தூரதரிசினி	-	தொலைநோக்கி
மனஸ்தாபம்	-	கருத்துவேறுபாடு
மத்தியஸ்தர்	-	நடுவர்
மாச்சர்யம்	-	காழ்ப்பு
முஸ்தீபு	-	ஏற்பாடு
வக்கீல்	-	வழக்குரைஞர்
வருஷம்	-	ஆண்டு
வஸ்து	-	பொருள்
வாஸ்தவம்	-	உண்மை
வாயு	-	காற்று
விஷயம்	-	பொருள்

மொழிபெயர்ப்புக் காலத்திற்குக் காலம் மாறுபாடு அடைந்துக் கொண்டு வருகின்றன. கலைச் சொற்களின் தமிழ் மொழிபெயர்ப்பு கீழ்கண்டவாறு மாற்றம் பெற்றிருப்பதை காணமுடிகிறது.

Anthropology	-	பூர்வமனிதஜானம்/மனித இனநூல்/மானிடவியல்
Astronomy	-	வானஞானம் / வானியியல்
	-	காற்று
Biologist	-	பிராண விஞ்ஞானி / உயிரியலாளர்
Botany	-	தாவரஞானம் / தாவரவியல்
Geology	-	பூகர்ப்பஞானம் / மண்ணியல்
Phosforons	-	திமிஉிபாஉிானம் பாஸ்பரம் / பாஸ்பரம்
Physiology	-	உடல்ஞானம் / உடல்நூல்
Zoology	-	பிராணிஞானம் / விலஙகியல்

மொழிபெயர்க்கப்பட்ட இலக்கிய நூல்களின் பட்டியல்

மூலமொழி	மொழிபெயர்ப்பாளர்	மொழிபெயர்ப்பு	மொழி பெயர்க்கப்பட்ட ஆண்டு
1. பத்துப்பாட்டு	A.N.ரகுநாதன்	Six long poem from Sangam	1978
2. புறநானூறு	G.U. போப்	Tamil Heroic Poems	1973
3. அகநானூறு	A.தக்ஷிணாமூர்த்தி	Agananuru	1998 - 2000
4. பதிற்றுப்பத்து	A.V. சுப்ரமணியம்	The ten decades	1980
5. குறுந்தொகை	A.K.இராமானுஜம்	The interior landscape	1970
6. நற்றிணை	A.V. சுப்ரமணியம்	Narrinai	1989
7. சங்க இலக்கிய பாடல்கள்	A.V. சுப்ரமணியம்	Sips from the Sangam Cup	1963
8. சங்கப்பாடல்கள்	A.V. சுப்ரமணியம்	Tamilnadu Text Book Society The Squirrel in the Court-yard	1980
9. சங்க இலக்கியம்	ஜார்ஜ் K.ஸ்காட்	Poets of the Tamil Anthology	1974
10. முத்தொள்ளாயிரம்	A.V. சுப்ரமணியம்	The bangle and Javelin	1985
11. மணிமேகலை	பிரேமா நந்தகுமார்	Manimegalai	
12. மணிமேகலை	மாதவய்யா	Manimegalai	1931
13. கலிங்கத்துபரணி	G. அருள்	The Chapters on the opening of the postals in Kalingattupparani	1959
14. கம்பராமாயணம்	G.P. வெங்கட்ராம ஐய்யர்	Kamban and his Art	1913
15. கம்பராமாயணம்	V.V.S. ஐய்யர்	Kambaramayanam	1950
16. கம்பராமாயணம்	R.K.நாராயணன்	Kambaramayanam	1972
17. கம்பராமாயணம்	V.S. முதலியார்	Kambaramayanam	1970
18. கம்பராமாயணம்	S.மகாராஜன்	Kambaramayanam	1972
19. கம்பராமாயணம்	P.S. சுந்தரம்	Kambaramayanam	1990
20. நாலடியார்	G.U. போப்	Naladiyar	1980
21. சிலப்பதிகாரம்	வாசுதேவ ஷர்மா	The Beach side Songs	1928
22. சிலப்பதிகாரம்	V.R. ராமசந்திர தீக்ஷிதர்	Chilapathikaram Oxford University Press	1939
23. சிலப்பதிகாரம்	அலெய்ன் டேனியலூ	The ankle from braslet	1965
24. சிலப்பதிகாரம்	R.S.பிள்ளை	Chilapathikaram	1989
25. திருப்பாவை	நார்மன் கட்லர்	Consier our vow	1879
26. திருப்பாவை	சம்பத்குமார்	Thiruppavai an Eng. rendering	1967
27. திருக்குறள்	அரங்கநாத முதலியார்	Source Text with Eng. Translation	1933
28. திருக்குறள்	I.D.தங்கசாமி	Tirukkural virtue & Wealth	1955
29. திருக்குறள்	G.U. போப் W.H.ட்ரியூ ஜான் லஸாரஸ் F.W. எல்லிஸ்	Tirukkural	1962
30. திருக்குறள்	C.ராஜகோபாலாச்சாரியார்	Kural the great book of Thirvalluvar	1970
31. திருக்குறள்	கஸ்தூரி சீனிவாசன்	Tirukkuran an ancient classics	1969
32. திருக்குறள்	பூரணலிங்கம் பிள்ளை	The Kural in English	1945
33. திருக்குறள்	S.M.டியாஸ்	Tirukkural	1982

34. திருக்குறள்	S.மகாராஜன்	Tirukkural	1979
35. திருக்குறள்	S.M.மைக்கேல்	The Sacred aphorism G.H.Publication Nagerkoil	1946
36. திருக்குறள்	Emmons E. White with the illustration by Maggic Jarvis	Wisdom of India	1968
37. திருக்குறள்	K.C.கமலையா	Preface in the Kural	19[illegible]
38. திருக்குறள்	திருவாசகமணி K.M.பாலசுப்ரமணியன்	Tirukkural of Thiruvalluvar	1962
39. திருக்குறள்	G.U.போப்	The Sacred Kural of Thiruvalluva Nayanar	1856, 1984
40. நளவெண்பா	மௌரிஸ் லாங்டன்	The story of King Nala and Princess	1950
41. நளவெண்பா	C.கெஸ்ட்	Nalavenba with annotation by Srinivasraghavachari	1989
42. கண்ணதாசன் கவிதைகள்	T.G. நாராயணசாமி	Kannathasan Kavithaigal	1962
43. கபிலர் அகவல்	A.V. சுப்ரமணிய ஐய்யர்	Kabil r Agaval	1975
44. பரமார்த்தகுரு கதைகள்	P.ராஜா	The stupid Guru & his foolish disciplies	1981
45. ஏன் அழுதான்	A.A. ஹக்கிம்	Joseph Wept	1974
46. மூன்று நாடகங்கள்	ரோகிணி	Stones Drama	1980
47. இந்திர பார்த்தசாரதி	லட்சுமிகண்ணன்	Through the veils	1983
48. நீலபத்மநாபன் கதைகள்	Writers workshop	The Incornation and other stories	1987
49. நீலபத்மநாபன் கதைகள		Surrender and other poems	1982
50. கனகவைப்பு	பாலபாரதி. S.D.S.யோகி	Golden Lay	1960
51. ஹரிச்சந்திரா	முத்துக்குமாரசாமி	Harichandra	1863
52. [illegible].மு.சேதுராமன் பாடல்கள்	கிருஷ்ணா	Flames of thoughts	1981
53. ராமசந்நிதி முறை பாடல்கள்	சுவாமிநாதன்	Songs from Sri Muruthanars Ramanasannithimarai	1975
54. ஆழ்வார் பாடல்கள்	J.S.M. ஹூப்பர்	Hymns of the Azhvars	1985
55. மதனகாமராஜன் கதைகள்	காமில் V. ஸ்வெலிபிள்	True Tamil Folk Tales	1987
56. சிவப்பிரகாசம்	K.குமாரசாமிபிள்ளை	Sivaprakasam	1945
57. ஒரு மனிதனின் கதை - சிவசங்கரி	உமா நாராயணன்	A Mans story	1990
58. திருக்கோவையார்	T.N.ராமச்சந்திரன்	Tirukkovaiyar	1989
59. பாரதி பாடல்கள்	ஹெப்சிபா ஜேசுதாசன்	Tr. from Subramaniya Bharathi and glimpses	1950
60. பாரதி பாடல்கள்	P.S. சுந்தரம்	Poems of Subramaniya Bharathi	1982
61. பாரதி பாடல்கள்	பிரேமாநந்தகுமார்	Bharathi in Eng. verse	1958, 1979

துணை நின்ற நூல்கள்

ஆங்கில நூல்கள்

1. Anisur Rahman, 2002. 'Translation Poetics and practice', Creative books, New Delhi - 25.
2. Bell T. Roger, 1991. 'Translation and Translating: Theory and Practice', Longman, London.
3. Catford, J.C., 1965. 'A Linguistic Theory of Translation.', Oxford University Press, London.
4. Chomskey, Noarm, A., 1957. 'Syntantic structures' Mounton and Company. The Hauyue.
5. Crystal, D. and Davy, D., 1969. 'Investigating English Style', Longman; London.
6. Eva Hung, 2002. 'Teaching Translation and Interpreting', John Benjamins Publishing Company. Amsterdam/Philadelphia.
7. Finch, I.A., 1969. 'An Approach to Technical Translation', An introductory guide for scientific readers, Pergamon Press.
8. Goshawka, W. - I.D.K.Kelly - Wing J.D., 1987. 'Computer Translation of National Language', Sigma Press, Wilmblow, United Kingdom.
9. Gupta, R.S., 1999. 'Literary Translation', Creation Books, New Delhi.
10. Hatim, B. and Mann, I., 1990. 'Discourse and the Translator'. Longman; London.
11. House, J., 1997. 'A model for Translation Quality Assessment. Gunter Narr; Tulinger.
12. Isodare Pinchneque, 1977. 'Scientific and Technical Translation', Andre Dentsch Limited, London.
13. Kothandaraman, Pon., 1997. A Grammer of contemporary library Tamil'. International Institute of Tamil Studies.
14. Mukherjee Tutun, 1998. 'Translation', from periphery to Centrestage, Prestige.
15. NewMark, P., 1981. 'Approachers to Translation', Pergamon Press: Oxford.

16. NewMark, P., 1988. 'A Text book of Translation', Prentice Hall: New York.
17. Nida, Eugene, A., 1964. 'Toward a Science of Translating', E.J. Brill: Leiden
18. Nida, Eugene, A., 1974. 'Theory and Practice of Translation' E.J. Brill; Leiden.
19. Nida, Eugene, A., 2001. 'Contexts in Translating', John Benjamins Publishing Company Amsterdam/Philadelphia.
20. Sreedevi, K. Nair, 1996. 'Aspects of Translation', Creative books, CB-24, Riny Road, Naraina, New Delhi-28.
21. Sergli Nirenburg, 1987. 'Machine Translation Theoretical and Methodological Issues', Cambridge University Press, London.
22. Sussan Bassnett-Mcquire, 1980. 'Translation Studies', Methnen & Co. London.
23. Theodore Savory, 1968. 'The Art of Translation', Jonathan Cerpe Ltd., London.

தமிழ் நூல்கள்

24. சண்முகவேலாயுதம், 1985. 'மொழிபெயர்ப்பியல்'. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம். சென்னை 113.
25. சண்முகம், ச.வை., 1994. 'அறிவியல் தமிழாக்கம்' நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
26. சிவசண்முகம் & தயாளன், 1989. 'மொழிபெயர்ப்பியல்', சிவகங்கை.
27. சேதுமணிமணியன், 1993 'மொழிபெயர்ப்பில் உத்திகளும் கோட்பாடுகளும்'. செண்பகம் வெளியீடு, மதுரை.

******